www.padippakam.com

ஜூலை — 200
ம.க.இ.க. மாத இத
ரூ. 5.0

# புதிய கலாச்சாரம்



தீவிரவாதிகள்
எனப்படுவோர்
வன்முறையாளர்கள்
அந்நியக் கைக்கூலிகள்
என்று சினிமாவும்
பத்திரிகைகளும்
பரப்பும் தோற்றம்
உண்மையா?

## எது தீவிரவாதம்?

www.padippakam.com

✱ **'அமெரிக்க மோகம்':** கட்டுரையில் பல விவரங்கள் இருப்பினும் இந்த தொழில் நுட்பம் உழைக்கும் மக்களுக்குக் கொண்டு வந்த பாதிப்புகள், புதிய பொருளாதாரக் கொள்கையை வரவேற்கும் நடுத்தர வர்க்கத்தின் வாழ்வை எப்படிச் சூறையாடு கிறது என்பதைப் பற்றியும், எந்த தொழில் நுட்ப வளர்ச்சியும் மேல்தட்டு வர்க்க நல னுக்கு எப்படியெல்லாம் பயன்படுகிறது என்பதைப் பற்றியும் விளக்க வேண்டும்.

**- வாசகர் வட்டம்,**
**தொழிலாளர் பிரச்சாரக் குழு,**
**நெய்வேலி.**

✱ **'அமெரிக்க மோகம்':** வெளிநாடு களுக்கு ஏற்றுமதியாகும் மோசடி வேலைக்கு இந்திய இளைஞர்கள் வலியப் பலியாகிவிட்டார்களே.

'அர்ப்பணிப்பூ' சிறுகதையில் சிறுமி பூமாரியின் சோக வாழ்க்கையுடன் அமெ ரிக்க மோகத்தை ஒப்பிட்டு நெஞ்சம் ஓல மிட்டது.

**- ஆர்.ஆர். சாமி,**
**திருவண்ணாமலை.**

✱ ஆம், நாங்கள் வெங்காயம்தான். நாங்கள் உரித்த வெறும் வெங்காயம்தான். அன்று எங்கள் கண்ணில் அமில மழை ஏற்படுத்தியவர்கள் சிரித்தார்கள். இன்று நாங்கள் புதிய கலாச்சாரம், புதிய ஜனநாய கத்தால் உரிக்கப்படும்போது எங்களி டையே உள்ள கந்தகம் வெளிப்படுகிறது. இந்த கந்தகங்கள் ஏகபோக உரிமையில் உள்ளவர்களை அழிக்கும்.

**- உதயன், திருச்சி.**

✱ சென்ற இதழ் தலையங்கம் பற்றி: தில்லை நடராசர் சன்னதியில் பார்ப்பனர் அல்லாதோர் நடராஜரை பீடத்தில் ஏறி நின்று தரிசிக்கக் கூட விடுவதில்லை.

சிதம்பர ரகசியம் தெரிந்துவிடும் என்ற பயமோ?

**- பி. தர்மராஜ், திருச்சி-2.**

✱ **'வறட்சியின் வள்ளல்கள்':** முதலா ளித்துவ மக்கள் விரோத பத்திரிக்கைகள் அனைத்தும் வண்ணப் படங்களில் வறண்டு காயும் மக்களின் வேதனை மிகு வாழ்க்கையை சலவை நோட்டாக்கி பன்னீரில் குளிக்கின்றன.

மனிதனும் மிருகமும் ஒரே குட்டையில் கலங்கிய நீரைக் குடிப்பதை எந்த மனித மனமும் சகித்துக் கொள்ளாது. ஆனால் தினமணி ஏடு அதே படத்தைப் போட்டு 'சமத்துவத்தைப் பாரீர் குஜ ராத்தில்' என வக்கிரமாக எழுதியுள்ளது.

**- எஸ். பாபு, திருச்சி - 17.**




# வாசகர் கடிதம்

✱ **'இடைவெளி'** என்ற சிறுகதை ஆசி ரியர் சிவசுப்ரமணிய ஜெயசேகர் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு ரசிய மண்ணைப் பற்றி அங்கு நடக்கும் பண்பாட்டுச் சீரழிவு, போலி மார்க்சியத்தினால் ஏற்பட்ட விளை வுகள், வர்க்கப் போராட்டத்தின் பின்தங் கிய நிலை இன்னும் பல விஷயங்களை உள்ளடாக்கி வாசகர்களை ரசிய மண்ணுக்கே கொண்டு சென்ற விதம் பாராட்டுக்குரியது. ஆசிரியரின் முந்தைய சிறுகதைகள் சிறப்பாக இருந்தன என்றாலும் இச்சிறுகதை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போலிருந்தது.

**- தொழிலாளர் பிரச்சாரக் குழு,**
**விக்கிரம சிங்கபுரம்.**

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே,

சில தவிர்க்கவியலாத காரணங் களால் அமெரிக்க மோகம் கட்டு ரையின் தொடர்ச்சி இந்த இதழில் வெளி வரவில்லை. அடுத்த இதழில் அக் கட்டுரை தொடரும்.

**- ஆசிரியர் குழு**

✱ **'அர்ப்பணிப்பூ'** சிறுகதை நெஞ்சை நெகிழ வைத்தது. சிறுவர் உழைப்பு, கொத்தடிமைத் தனம் இவைகளை ஒழித்துக் கட்டி சமூக மாற்றம் தேவை என்கிற வேகம் ஏற்படுகிறது. அந்தச் சிறுமி தன் தாயை நினைத்துப் புலம்பும் திக்கற்ற சூழ்நிலை நம்மையே அறியாமல் கண்ணீர் சிந்த வைக்கிறது.

**'இடைவெளிகள்'** சிறுகதை: ஒரு நாட்டில் புரட்சியில் ஈடுபட்டவர்களும், புரட்சியின் எதிரிகளும் எவ்வாறு இருப்பர் என்பதைச் சொந்த அனுபவம் போல் விளக்கியது உயிரோட்டமாக இருந்தது.

**- வாசகர் வட்டம்,**
**ம.க.இ.க., சென்னை.**

✱ **தமிழால் ஒன்றுபட மறுக்கும் சான்றோர்:** 'தனிச் சொத்துடைமையை' ஒழிக்க வேண்டும் எனக்கூறும் 'கம்யூனிஸ் டுகள் வீடு வாசலோடுதான் உள்ளார்கள்' என்று கூறும் நந்தன் யாரைப் பார்த்து 'கம்யூ னிஸ்டுகள்' என்கிறது? ஓட்டுக் கட்சி கம்யூ னிஸ்டுகளைப் பார்த்தா? மேலும் துக்ளக் சோவுக்கு நந்தனின் விளக்கம் சரியல்ல. தமிழ்ச் சான்றோர்களின் பிள்ளைகள் ஆங்கில வழிக் கல்வியில் படிக்கிறார்களே என்று கேட்டால், சட்டம் வரட்டும் வந்தபின் தமிழ் வழிக் கல்வியில் படிக்க வைக்கிறோம் என்கிறார்களே! சட்டம் கிடக்கட்டும் சட்டம், சட்டம் வரும் முன்னே தமிழ்வழிக் கல்வியில் சேர்க்க வேண்டியதுதானே, ஏன் செய்யவில்லை? தமிழ்வழியே நம் மாநிலத்தில் இல்லையா?

**- முகம்மது இலியாஸ்,**
**திருவிடைமருதூர்.**

✱ 'ஸ்டாலின் மீதான அவதூறு' - கட்டுரை முடிவடைவது விரைவிலோ என்ப துபோல் உள்ளது. இருப்பினும் ஸ்டாலின் எனும் 'மகத்தான மனிதனை'ப் பற்றிய எத்தனை நேர்மைக்குப் புறம்பான தாக்கு தல்கள் என்கின்றபோது ஸ்டாலின் பணி புரிகின்றது.

**- கி. முரளி,**
**இராசபாளையம்.**

✱ புதிய கலாச்சாரம் தன்னை மட்டுமல்ல, தன்னோடு சேர்த்து வாசகர்களையும் மார்க்சிய - லெனினிய கண்ணோட்டத்தில் வளர்த்தெடுப்பதில் வெற்றி பெற்றுள்ளது. அரசியல் விசயங்களைவிட பண்பாட்டு, விசயங்களை மா-லெ கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வதும் புரிய வைப்பதும் சற்று கடினமான விசயம்தான்.

**- வர்கீஸ்,**
**தஞ்சை.**


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 18
• குரல்: 2
• ஜூலை - 2000

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# பெட்டகச் சாவுகள்

மாஸ்கோவில் இருந்து தக்காளி ஏற்றப்பட்ட ராட்சத சரக்குப் பெட்டகங்கள் இங்கிலாந்து துறைமுகத்தை அடைந்தன. சரக்கை இறக்குவதற்காக அவற்றைத் திறந்தபோது அதிர்ச்சி! ஒரே பெட்டகத்துக்குள் 58 மனிதர்கள் மூச்சுத் திணறி இறந்து கிடந்தார்கள். இரண்டு பேர் மட்டும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் சீனர்கள். மாஸ்கோவில் போலிக் கடவுச் சீட்டுப் பெற்றுக் கொண்டு, சரக்குப் பெட்டகத்துக்குள் புகுந்து, இங்கிலாந்துக்குப் போய், அங்கே கள்ளத்தனமாகக் குடியேற முயன்றவர்கள். இது நடந்த அடுத்த வாரமே, டென்மார்க்கில் குடியேறுவதற்காக சரக்குப் பெட்டகம் ஒன்றில் அடைக்கப்பட்ட 26 பேரை கிரேக்கப் போலீசார் இடைமறித்துப் பிடித்தனர். இவர்கள் அனைவரும் இந்தியர்கள் மற்றும் பாகிஸ்தானியர்கள்.

அவர்கள் மட்டும் மடிந்து போகாமலிருந்தால், இவர்கள் மட்டும் பிடிபடாமல் தப்பியிருந்தால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஆண்டுதோறும் கள்ளத்தனமாகக் குடியேறும் நான்கு இலட்சம் பேரோடு கரைந்து போயிருப்பார்கள். பிரிட்டனில் மட்டும் கடந்த ஆண்டு 21 ஆயிரம் பேர் இப்படிக் குடியேறியுள்ளனர். பெரும்பாலும் ஆசியாவின் ஏழை நாடுகளில் இருந்து மேலை உலகில் சொர்க்கத்தை நாடி மிகவும் ஆபத்தான பயணம் போகும் இவர்களுக்கு அங்கே காத்திருப்பது என்ன? கழிப்பறை கழுவுதல், உணவு விடுதியில் மேசை துடைப்பது அல்லது பாத்திரம் கழுவுவது, சாக்கடை தள்ளுவது, தோட்டம் பராமரிப்பது, கட்டிடப் பணியாள் அல்லது ஆயத்த ஆடை தைப்பது இவை போன்ற வேலைகள். அதாவது இழிவான வேலைகள் என்று வெள்ளையர்களால் ஒதுக்கப்பட்டவை. மிகவும் மலிவான கூலிதான் என்றாலும், தங்கள் சொந்த நாட்டோடு ஒப்பிடுகையில் இதுவே மிதமிஞ்சியதாகக் கருதுகிறார்கள். அங்கே சிறிது நேரம் வேலைச் செய்தாலே செல்வச் செழிப்பிலே மிதக்கலாம்; தடையற்ற கேளிக்கை, சுகபோகத்தில் திளைக்கலாம் என்பது போன்ற கனவுகளைச் செய்தி ஊடகங்கள் பரப்புவதே இதற்கான காரணம்.

கீழை நாடுகளின் பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற காரணங்கள் இருந்தாலும் இப்படி மேலை உலகின் உழைப்புச் சந்தையில் போய்க் குவியும் எல்லோரும் ஏழை நாட்டு உழைப்பாளிகள், சொந்த நாட்டில் ஏதுமற்ற ஏழை பாழைகள் என்றும் கூறிவிட முடியாது. நடுத்தர வர்க்க வாழ்க்கைக்குச் சொந்தக்காரர்கள்தாம். கிழக்கு - மேற்கு பஞ்சாப், அரியானா, மேற்கு உத்திரப் பிரதேசம் போன்ற செழிப்பான பகுதிகளில் உள்ள வளமான விவசாய பூமியையும் விற்றுவிட்டு, தலைக்கு 10 இலட்சம் ரூபாய்க்கும் குறையாது செலுத்தி போலிக் கடவுச் சீட்டோடு கள்ளப் பயணம் புறப்படுபவர்கள். இவர்களைப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று மேலை உலகில் குடியமர்த்துவதோடு, வேலைதேடித் தருவதாகவும் கூறிக் கடத்திச் செல்லும் கிரிமினல் குற்றக் கும்பல்கள் பல இருக்கின்றன. "பாம்புத் தலையர்கள்" எனப்படும் இக்கும்பல்கள் சரக்குப் பெட்டகங்களில் அடைத்தோ, கடற் கொள்ளையர்களின் கப்பல்களில் ஏற்றியோ, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் எல்லைகளிலே கொண்டுபோய் தள்ளி விடுகிறார்கள். அங்கு பசி - பட்டினியாலோ, கடுங்குளிராலோ பலரும் விரைத்துச் செத்துப் போகிறார்கள். அந்தந்த நாட்டுப் போலீசாரால் பிடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்படுகிறார்கள். வெள்ளையரல்லாத குடியேற்றக்காரர்களை எதிர்க்கும் நிறவெறி - பாசிச இயக்கங்களின் தாக்குதலுக்கும் பலர் பலியாகின்றனர்.

கீழை நாட்டவர்களின் குடியேற்றம் குறித்து மேலை நாடுகளோ இரட்டை அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கின்றன. மூலதனமும், பண்டங்களும் நாடுகள் - தேசங்களிடையே போய் வருவதற்கு எந்தத் தடையும் கூடாது என்கிற உலகமயக் கொள்கையைக் கீழை நாடுகள் மீது திணிக்கின்றன. ஆனால் வேலை வாய்ப்பைத் தேடி உழைப்பாளர்கள் குடியேறுவதை கடுமையாகத் தடுக்கும் சட்ட விதிகளைக் கொண்டுள்ளன. அதாவது மூலதனத்துக்கும் பண்டங்களுக்குா் சுதந்திரச் சந்தைக் கொள்கைக்காக வாதிடும் அதேசமயம் உழைப்பாளர் சந்தையைச் சுதந்திரமாக்க மறுக்கின்றனர். இன்னொரு புறம், சமூகத் தகுதி குறைவான, மலிவான கூலி பெறும் வேலைகளுக்கு ஏராளமான உழைப்பாளிகள் மேலை நாடுகளுக்குத் தேவையாக இருக்கிறது.

மலிவான உழைப்புக்கு ஏழை நாட்டவர்களை வைத்துக் கொள்ளும் அதேசமயம் வேலையில்லாத் திண்டாட்டம், குடியிருப்பு இல்லாத தெருவாசிகள், சூப்புக்கும் ரொட்டிக்கும் வரிசையில் காத்திருப்போரும் அதிகரித்துக் கொண்டே போகிறார்கள். கள்ளத்தனமாகக் குடியேறிவர்களோ, கிரிமினல் கும்பல்களின் அடிமைகளாக்கப்பட்டு, நிலவறைகளில் அடைக்கப்பட்டு, 10, 12 மணிநேரம் உழைத்தும் போதிய உணவும் உடையும் போர்வையும் கூட இல்லாமல் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். ஆனால் உண்மையில் நாளை வெடிக்கவிருக்கும் புரட்சிக்கான (ரிசர்வ்) சேமிப்புப் படையாகவே இவர்கள் அங்கே குவிக்கப்படுகிறார்கள். இந்த நிலவறைக் குண்டுகள் வெடித்துச் சிதறும்போது ஏகாதிபத்தியத்தின் அடித்தளம் நிச்சயம் ஆட்டங்காணும். ◆

படிப்பகம்

www.padippakam.com

# எது தீவிரவாதம்?



**பத்திரிகை - சினிமா - ஓட்டுக்கட்சிகள் என்ற சிமெண்ட் - மணல் - ஜல்லிக் கலவை இடையறாது உருண்டு கொண்டே இருக்கிறது. எது தீவிரவாதம், யார் தீவிரவாதிகள் என்பவை குறித்த பாசிசத்தன்மை கொண்ட தேசவெறிக் கருத்தை, கான்கிரீட்டுக்குரிய உறுதியுடன் மக்கள் மனதில் உருவாக்கிருக்கிறது. இந்தப் பொய்மையை அம்பலப்படுத்துகிறது இக்கட்டுரை.**

**வ**ல்லரசு படத்தைப் பார்த்தபோது முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய காந்தாராவ், ராஜநளா நடித்த தெலுங்கு டப்பிங் படங்கள் அனைத்தையும் ஒரே படத்திற்குள் பார்ப்பதைப் போல இருந்தது. படத்தில் நாம் வயிறு வலிக்கச் சிரிக்கும் காட்சிகளை ரசிகப் பெருமக்கள் ஒன்றிப் போய் ரசிக்கிறார்கள்; நமக்கு ஆத்திரத்தை தூண்டும் வசனங்களுக்கு அவர்கள் ஆர்ப்பரித்துக் கைதட்டுகிறார்கள்.

'தாழ்ந்த தமிழகமே' என்று தலையில் அடித்துக் கொள்ளலாமென்றால், படம் இந்தியிலும் தெலுங்கிலும் தயாராகப் போகிறது என்ற செய்தி அச்சம் கொள்ள வைக்கிறது.

**தீ**விரவாதி எனப்படுபவன் யார்? பிரதமரைக் கொல்ல சதி செய்பவன், பள்ளிக்கூடத்துக்குக் குண்டு வைப்பவன், இந்திய விஞ்ஞானியைக் கடத்துபவன், இராணுவ இரகசியத்தைக்கடத்துபவன், மொத்தத்தில் ஏதோ ஒரு வகையில் இந்திய அரசைத் துன்புறுத்துவதையும், போலீசு அதிகாரிகளைத் தூங்கவிடாமல் செய்வதையுமே தன் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டவன்.

யார் தீவிரவாதி என்ற கேள்விக்குப் படித்தவர் முதல் பாமரர் வரை யாரிடம் கேட்டாலும் கிடைக்கும் விடை இதுதான்.

''ரயில் எப்படிம்மா ஓடுது?'' என்ற கேள்வியை இரண்டு வயதுக் குழந்தையிடம் கேட்டால் ''ஊ... சிக்குபுக்குன்னு ஓடும்'' என்று பதில் சொல்லும். ரயில் எப்படி ஓடுகிறது என்ற இதே கேள்வியை ஒரு மாணவனிடமோ, நாற்பது வயதுக்காரரிடமோகேட்டு, அவர்களும் ''ஊ... சிக்குபுக்குன்னு ஓடும்'' என்று பதில் சொல்லும் காட்சியைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்! அவரைப் பற்றி என்ன முடிவுக்கு வருவீர்கள்? வேறென்ன முடிவுக்கு வருவது, ''பாவம் மன வளர்ச்சி குன்றியவர் போலும்!'' என்ற ஒரே முடிவுக்குத்தான் வர முடியும்.

'எப்படி' என்ற வினாச் சொல் குழந்தைக்கும் இளைஞனுக்கும் பொதுவாக இருந்தாலும் இளைஞனிடம் அந்தக் கேள்விக்கு அறிவுபூர்வமான விளக்கத்தை நாம் எதிர்பார்க்கிறோம்.

பிரதமரைக் கொல்வது, முதல்வரைக் கொல்வது போன்ற அதிபயங்கரமான நடவடிக்கைகளில் உயிரைப் பணயம் வைத்து ஈடுபடுகிறார்களே இந்தச் சினிமாத் தீவிரவாதிகள் - எதற்காகச் செய்கிறார்கள்?

எழுபதுகளில் வெளிவந்த சினிமாக்களின் கடத்தல்கார வில்லன்கள் என்ன காரியங்களைச் செய்தார்களோ அதே விதமான காரியங்களைச் செய்கின்ற வில்லன்கள் எதற்காக இப்போது தீவிரவாதிகள் - பயங்கரவாதிகள் என்று பெயர் மாற்றி அழைக்கப்படுகிறார்கள் - என்பது போன்ற சில கேள்விகளையாவது ரசிகர்கள் கேட்டிருக்க வேண்டும். ஆனால் கேட்பதில்லை. அதனால்தான் 'வல்லரசு' போன்ற அருவெறுக்கத்தக்க அசிங்கங்கள் நூறுநாள் ஓடுகின்றன.

### அசிங்கமான நிழல்
### அச்சுறுத்தும் நிஜம்!

நிழல் அசிங்கமானதாக இருக்கலாம்; நிஜமோ அச்சுறுத்தும் அபாயமாக இருக்கிறது. நரசிம்மராவின் ஆட்சிக் காலத்தில் மக்களுடைய கடுமையான எதிர்ப்பின் விளைவாக புதுப்பிக்காமல் காலாவதியாக்கப்பட்ட ''பயங்கரவாதத் தடைச் சட்டம்'', கிரிமினல் சட்டத் திருத்தம் என்ற புதிய பெயரில் மீண்டும் உயிர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இது அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பறிக்கக் கூடிய சட்டம் என்றும், தங்கள் கோரிக்கைகளுக்காகப் போராடும் தொழிலாளர்கள் முதல் மாமூல் கொடுக்க மறுக்கும் தரைக்கடை வியாபாரி வரை, யாரை வேண்டுமானாலும் 'பயங்கரவாதி' என்று குற்றம் சாட்டிக் கைது செய்யும் அதிகாரத்தை இந்தச் சட்டம் போலீசுக்கு வழங்குகிறது என்றும் ஆதாரங்களுடன் குற்றம் சாட்டுகின்றன சிவில் உரிமை அமைப்புகள்.

''இத்தகையதொரு ஜனநாயக விரோதச் சட்டத்தைத் திணிக்கக் கூடாது; தேசிய அளவில் ஒரு பொதுவிவாதம் நடத்



படிப்பகம்

www.padippakam.com

தப்படவேண்டும்; இதற்கெதிரான பொதுக் கருத்தை உருவாக்க வேண்டும்'' என்று கோருகிறார்கள் வழக்கறிஞர்கள் மற்றும் ஜனநாயகவாதிகள்.

ஆனால் 'யார் தீவிரவாதி' என்பது குறித்தும் அவர்களை எப்படி ஒடுக்க வேண்டும் என்பது குறித்துமான பொதுக் கருத்து ஏற்கனவே உருவாக்கப்பட்டு விட்டது. எந்தப் பத்திரிகைகளின் நடுப்பக்கத்தில் இந்த விவாதம் நடக்கிறதோ அதே பத்திரிகைகளின் முதல் பக்கம் இக் கருத்தை ஏற்கனவே உருவாக்கி விட்டது. எந்தத் தொலைக்காட்சிகளின் அரைமணி நேர விவாதமாக இது இடம் பெறக் கூடுமோ அதே தொலைக்காட்சியில் மூன்று மணிநேர 'தேசபக்தி'ப் படங்கள் இக்கருத்தை ஏற்கனவே உருவாக்கிவிட்டன.

**தீவிரவாதம்:**
**பொதுக் கருத்தின் பாசிசத் தன்மை**

அந்தப் பொதுக் கருத்தின் முக்கியமான கூறுகளைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்.

''தீவிரவாதிகள் எனப்படுவோர் திருத்தவே முடியாத வன்முறை வெறியர்கள். பெண்களைக் கற்பழிப்பது, குழந்தைகளைக் கொல்வது, போதை மருந்து கடத்துவது, அப்பாவி மக்களைக் கொல்வது போன்ற எல்லாக் கொலைபாதகங்களையும் கூசாமல் செய்யக் கூடியவர்கள்.

''ஊழல் அரசியல்வாதிகள் போலீசு அதிகாரிகளால் பாதிக்கப்பட்டு, விரக்தியடைந்த சில இளைஞர்களும் தீவிரவாதிகளாய் மாறி இருக்கலாம்; நேர்மையான அரசியல்வாதிகளும் போலீசு அதிகாரிகளும் முயன்றால் அவர்களை நல்வழிப்படுத்த முடியும்.''

''தீவிரவாதம் என்பது அரசியல் பிரச்சினை அல்ல; இந்தியாவின் முன்னேற்றத்தைக் காணப் பொறுக்காத தீய சக்திகளின் சதி; எல்லைக்கு வெளியிலிருந்து மோதி இந்தியாவை வெல்ல முடியாத பாகிஸ்தான், எல்லைக்கு உள்ளே தூண்டிவிடும் போர்தான் தீவிரவாதம்.''

''தீவிரவாதிகள் ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். எனவே ஜனநாயக வழிமுறையில் அவர்களைக் கையாள முடியாது. தீவிரவாதத்தை முற்றாகத் துடைத்தெறியும் திறமை நம் போலீசுக்கும் இராணுவத்துக்கும் உள்ளது. எனவே இப்பிரச்சினையை அரசியலாக்காமல் போலீசுக்கு முழு சுதந்திரம் கொடுத்தால் தீவிரவாதத்தை ஒழித்துவிட முடியும்.''

தீவிரவாதம் குறித்த மேற்கூறிய பாசிசக் கருத்துக்களைத்தான் அனைத்து ஆளும் வர்க்கப் பத்திரிகைகளும் உருவாக்கியிருக்கின்றன. இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் தீவிரவாத ஒழிப்பு குறித்து விவாதிக்கின்றன. திரைப்படங்களோ கதை - வசனம் - காட்சியமைப்புகளின் மூலம் இந்தக் கருத்துக்களுக்கு உயிரூட்டுகின்றன.

**ரோஜா முதல் வல்லரசு வரை:**
**கொலைகாரத் தீவிரவாதிகள்**
**கொள்கைக் குன்றாய் போலீசு!**

இதுவரை நீங்கள் பார்த்த 'தேசபக்தி' திரைப்படங்கள், பத்திரிகைகளில் படித்த செய்திகள் கட்டுரைகள், அரசியல்வாதிகளின் அறிக்கைகள் சட்டசபை விவாதங்கள் ஆகியவற்றுடன் மேற்கூறிய கருத்துக்களைப் பொருத்திப் பாருங்கள்.

தற்போது ஓகோவென்று ஓடிக் கொண்டிருக்கும் வல்லரசு படத்தின் கதை என்ன? கார்கில் போரில் தோற்றதற்குப் பழிவாங்க இந்தியாவையே துண்டு துண்டாகச் சிதறடிக்க சதி செய்யும் பாகிஸ்தான் தீவிரவாதியின் கதை.

கதாநாயகனைப் பேசவிடுகிறார். ''நீங்கள் பாகிஸ்தான் கைக்கூலிகள்'' என்று கதாநாயகன் குற்றம் சாட்டும்போது தீவிரவாதிகள் பதில் பேசமுடியாமல் தடுமாறுகிறார்கள். பாரதீய ஜனதாவின் பாராட்டைப் பெற்ற படம் இது.

தேசபக்தத் திலகம் அர்ஜுனின் நடித்த டஜன் கணக்கிலான படங்களில் எல்லாம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் அல்லது அவர்களது இந்தியக் கைக்கூலிகள் தான் வில்லன்கள்.

சரத்குமாரின் **சூரியன்** படத்தில் தீவிரவாதிகள் யார், என்ன என்ற எதுவும் இயக்குனருக்கு தெரியாது; படம் 100 நாள் ஓடியது மட்டும்தான் அவருக்குத் தெரியும்.

உயிரே படத்தில் கதாநாயகியே தீவிரவாதி. இராணுவக் கொடுமையினால் ஏதோ ஒரு வேகத்தில் தீவிரவாதியாகி விட்டுப் பிறகு திரும்ப முடியாமல் தவிப்பவள். அவளுக்கும் கொள்கை என்று எதையும் சொல்லத் தெரியாது.

தீவிரவாதம் குறித்த ஒரு போலீஸ்காரனின் பார்வை குருதிப் புனல். தீவிரவாதிகளிடம் தன் உயிரையே தியாகம் செய்யும் போலீசு அதிகாரிதான் கதாநாயகன். தீவிரவாதிகளோ குழந்தைகளைக் கொல்வது, மந்திரியைக் கொல்வது, கற்பழிப்பது என வெறிபிடித்து அலையும் கயவர்கள்.

**ஐயப்பன் பஜனைபோல எட்டுத்திக்கிலும் விடிய விடிய ஒலித்துக் கொண்டே இருக்கிறது ''தீவிரவாத எதிர்ப்பு - தேசபக்தி பஜனை''. ஐயப்ப பஜனையின் மீதான பக்தர்களின் கவர்ச்சி அது ஒரு மண்டலத்துடன் முடிவதில்தான் இருக்கிறது. ஆண்டு முழுவதும் பஜனை, ஆண்டுக்கணக்கில் பஜனை என்றால் குருசாமிகளே சலூனுக்கு ஓடிவிடுவார்கள். சமீபத்தில் சிங்கள இராணுவம் அப்படித்தான் ஓடியது.**

அணுகுண்டு வெடித்தவுடன் அத்வானி அடித்த சவடால்கள், வை.கோ - ராமதாசு போன்ற ஆழ்வார்களின் உதார்கள், ''அடுத்தடுத்து அணுகுண்டு - பாகிஸ்தான் ஆஃப்'' என்ற தினமலரின் தலைப்புச் செய்தி போன்றவை அனைத்தையும் கலந்த லேகியம்தான் இந்தப் படத்தில் விஜயகாந்தின் வசனம்.

தீவிரவாதிகளுக்கெதிராக இராணுவம் உயிரைக் கொடுத்துப் போராடும்போது அரசியல்வாதிகள் தம் சுயநலனுக்காகக் குறுக்கிட்டு கெடுக்கிறார்கள் என்ற புள்ளியில் துவங்குகிறது ரோஜா. மத்திய அமைச்சர் மப்டி முகமது சயீதின் மகளை மீட்பதற்காக தீவிரவாதிகள் (ஜே.கே.எல்.எப் கைதிகள்) விடுவிக்கப்பட்டதை அன்று எதிர்க் கட்சிகளும் பத்திரிகைகளும் கண்டித்தன.

அதிலிருந்து தொடங்கி சத்யவான் - சாவித்திரி சென்டிமென்டால் தீவிரவாதிகளை அடிக்கிறது ரோஜா. காஷ்மீர் பிரச்சினை என்ன என்று சொல்வதற்குத் தீவிரவாதிகளை அனுமதிக்காத மணிரத்தினம்

தீவிரவாதிகளின் கொள்கை என்ன? அவர்களைப் பேசவிட்டால்தானே அதை அவர்கள் சொல்ல முடியும்! ''கொள்கை ஏதுமற்ற பொறுக்கிகள்'' என்று போலீசு அதிகாரி கமலஹாசன் கூறுவதுதான் தீவிரவாதிகளைப் பற்றிய தீர்ப்பு. நரவேட்டையில் புகழ் பெற்ற கே.பி.எஸ். கில், தேவாரம் போன்ற போலீசு அதிகாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியதுதான் இந்த வசனம். ஆனால் இவரோ அன்புக் கடல். கைதியாக இருக்கும் தீவிரவாதியை போலி மோதலில் கொல்ல வாய்ப்பிருந்தும் மனச்சாட்சிக்குப் பயந்து கொலை செய்ய மறுப்பவர்.

வல்லரசு கதாநாயகன் வேறு ரகம். தேசபக்தியால் உந்தப்பட்டு சட்டத்தை மீறுகிறார். போலீசு அதிகாரியான சொந்த மாமனார் அந்நியக் கைக்கூலி என்று தெரிந்


படிப்பகம்

www.padippakam.com

ததும் அவரைக் கேப் சுடுவது போல பக்க வாட்டிலேயே சுட்டுத் தள்ளும் கதாநாயக னுக்கு மற்றவர்கள் எம்மாத்திரம்?

தீவிரவாதம் என்ற பிரச்சினையை திரைப்படங்கள் எந்தக் கோணங்களிலி ருந்து சித்தரிக்கின்றன என்பதற்கு இவை யெல்லாம் சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே.

தனது தங்கையைப் பண்ணையார் கற்ப ழித்ததால் தீவிரவாதியாகி, வேலை வாங்க லஞ்சம் கொடுக்க முடியாததால் பயங்கர வாதியாகி பின்னர் ஒரு நேர்மையான போலீசு அதிகாரியால் 'ஞான தரிசனம்' பெற்று மனம் திருந்திய கதைகளை இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை.

**சினிமா தீவிரவாதம்:**
**சொறிநாய் கவ்விய ரொட்டி**

ஒரு தீவிரவாதியின் கதை கோடம்பாக் கத்தில் எப்படி உருவாக்கப்படுகிறது? வல்லரசு என்ற 'காப்பியம்' உருவான கதையை விஜயகாந்த் வாயாலேயே கேளுங்கள். சென்னை பண்பலை வானொ லியில் ஒலிபரப்பான அவருடைய பேட்டி இது.

''உங்களுக்கு சுப்பரா செட் ஆகிற மாதிரி ஒரு கதை இருக்குண்ணேன்னு டைரக்டர் தம்பி ரொம்ப நாளா சொல்லி கிட்டு இருந்திச்சி. 'என்ன சப்ஜெக்ட் டுப்பா'ன்னு கேட்டேன். ''போலீசு சப்ஜெக்ட்டுதாண்ணே ஆனா இது ரொம்ப வித்தியாசமா இருக்கும்ணே''ன்னிச்சி. போலீசுதான் நெறய பண்ணிட்டே னேப்பா. வேற யாரையாவது வச்சி பண்றா ரான்னு ராவுத்தர வேணா கேக்குறேன்னு சொல்லி ராவுத்தர கேட்டேன். ராவுத்தரும் வேணான்னுட்டாரு. அப்புறம் கதையக் கேட்டேன். கதை நல்லாருக்குன்னு வீட்ல யும் எல்லாரும் சொன்னாங்க சரி. பண்ணித் தான் பாப்பமேன்னு பண்ணினேன்.''

பாகிஸ்தான் சதி செய்தாலென்ன, நாடே நாலாய் உடைந்தாலென்ன, கதாநாய கனின் கவலையெல்லாம் கதை தன்னு டைய இமேஜுக்குப் பொருந்துமா என்ப துதான். காதல் படமோ, கருமாதிப் படமோ, தீவிரவாதி படமோ எதுவாக இருந்தாலும் கதையைத் தீர்மானிக்கும் முதல் விதி இது.

அடுத்து தயாரிப்பாளரின் பணப்பை - அதாவது பட்ஜெட். வெளிநாட்டுப் படப்பி டிப்பு என்றால் இந்தியாவுக்கெதிராக 'சர்வ தேச தீவிரவாதிகள் சதி' உருவாகும். இல்லையென்றால் உள்நாட்டிலேயே பிர தமர், முதல்வர் யாரையாவது கொல்வது, கட்டிடத்துக்கு குண்டு வைப்பது, ரயிலுக்கு குண்டு வைப்பது என்று கதை மாறும்.



**கிறித்தவப் பாதிரியார் களைக் கொன்று தேவா லயங்களுக்குக் குண்டு வைத்த பஜ்ரங் தள் பகிரங்கமாக ஆயுதப் பயிற்சி எடுக்கிறது. அதைச் சேவை அமைப்பு என்கிறார், அத்வானி.**

காதல் படங்கள் நிறைய வருவதால் ஒவ்வொரு படத்திலும் காதலை வித்தியா சமாக சொல்ல வேண்டியிருக்கிறதல்லவா, அதேபோல தீவிரவாதி படமும் நிறைய வருவதால் இந்தியாவுக்கு எதிரான புதுவி தமான சதிகளை இயக்குனர்தான் யோசித்து உருவாக்க வேண்டியிருக்கிறது. ''பழைய சதிதானா, புது சதி எதுவும் இல்லையா'' என்று ரசிகர்கள் சோர்ந்துவிடக் கூடாதே!

சதி மட்டும் செய்தால் போதாது, நாக்கை அறுத்துக் கொள்வது, காதை அறுத்துக் கொள்வது போன்ற நடவடிக் கைகள் மூலம் தன்னுடைய காதலின் ஆழத்தைக் காதலன் வெளிப்படுத்து கிறான் அல்லவா? அதுபோல இந்தியா மீதான வெறுப்பின் ஆழத்தை வெளியிட, தீவிரவாதியானவன் கொடூரமான முறை களைக் கடைப்பிடிக்க வேண்டும். தேசபக் தர்களின் ஆசனவாயில் குண்டு வைப்பது, தலைமுடியில் மட்டும் பெட்ரோல் தடவிக் கொளுத்துவது போன்ற வித்தியாசமான சித்திரவதை முறைகளையும் இயக்குனர் யோசிக்க வேண்டும்.

எல்லாம் சரி. காசுமீர், அஸ்ஸாம் தீவிர வாதிகளின் கோரிக்கை என்ன? அதைப் பற்றி யார் யோசிப்பது? அதைப் பற்றி யெல்லாம் எந்தச் சொறி நாயும் யோசிக் காது. குப்பைத் தொட்டியில் எகிறிக் குதித்து ரொட்டியைக் கவ்வும் சொறிநாய், அது பார்லே பிஸ்கட்டா, பிரிட்டானியா பிஸ்கட்டா என்று படித்துப் பார்த்தா கவ்வு கிறது? காசுமீராவது, அஸ்ஸாமாவது! தீவிரவாதி என்றால் எவனோ ஒரு தீவிர வாதி. அவ்வளவுதான்.

**திருகாணி கழன்ற தண்டவாளம்-**
**தினசரிகளுக்கு தீவிரவாதம்!**

அரசியல் அறிவு, சமூகப் பொறுப்பு ணர்ச்சி, தன்மானம் என்ற எதுவுமே இல்லாத, வாயும் வயிறும் ஆசனவாயும் பிறப்புறுப்புக்களும் மட்டுமே கொண்ட இந்த சினிமாக் கும்பல், நாட்டையே தங்கள் தரத்திற்குக் கொண்டுவர இடைய றாது சிந்திக்கிறது.

சினிமாக்காரர்களைக் காட்டிலும் அறிவும், பொறுப்புணர்ச்சியும் உள்ளவர் களாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் பத்தி ரிகைகளின் யோக் கியதை என்ன? ''விவ ரங்கள் புனிதமானவை - விமரிசனத்துக்கு மட்டும்தான் சுதந்திரம்'' என்று கூறிக் கொள்வோர் செய்திகளைக் கொடுக்கும் முறை என்ன?

எங்காவது ஒரு சம்பவம் நடக்கிறது என்றால் அது குறித்து போலீசு தரும் செய்தியை மட்டும் வெளியிடுவதுடன் இறுக்கமாக நிறுத்திக் கொள்கிறது தின மணி. போலீசு செய்தியையே கொஞ்சம் அலங்கரித்துப் பெரிதாக்கிக் காட்டுகிறது தினத்தந்தி. காலையில் வெளிவந்த செய்திக்கு மேல் புதிதாக ஏதும் இல்லை யென்றாலும் ஏதோ இருப்பதுபோலக் காட்டி பத்திரிகையை விற்பதற்காக சுவ ரொட்டியின் தலைப்பில் பரபரப்பை பெரி தாக்குகிறது மாலைமுரசு.

தனது பார்ப்பன பாசிசக் கண்ணோட் டத்திற்கு ஏற்ப செய்தியைத் திரித்து, சேர்த்து பச்சைப் பொய்யையே தலைப்பா கவும் போடுகிறது தினமலர். உளவுத்துறை யினர் பரப்பும் வதந்திகளுடன், அடுத்த மூன்று நாட்களின் விற்பனைக்குத் தேவைப்படும் அளவிற்கு திகிலூட்டும் பொய்களையும் கலந்து பிரச்சினையை ஊதி உப்ப வைக்கிறது ஜூனியர் விகடன்.

இப்படியாக ஒரு சம்பவம் - எடுத்துக் காட்டாக திருச்சி ரயில் தண்டவாளத்தில் ஒரு திருகாணி கழன்றிருந்தது என்று வைத்துக் கொள்வோம் - ''ரயிலைக் கவிழ்க்க தீவிரவாதிகள் சதியா - திருச் சியில் பரபரப்பு'' என்று செய்தியாகிறது. திருச்சியைத் தவிர தமிழகம் முழுவதும் இச்செய்தியால் பரபரப்பூட்டப்படுகிறது.

பத்திரிகைகள் உருவாக்கிய இந்தப் பொய், சட்டமன்றத்தின் விவாதப் பொரு ளாகிறது. ''தீவிரவாதம் ஒடுக்கப்பட வில்லை'' என்பதற்கான ஆதாரமாகிறது.

www.padippakam.com



தீவிரவாதிகள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படுவார்கள் என்று அரசு அறிவிக்கிறது. தண்டவாளத்தை மோப்பம் பிடிக்க நாய் வருகிறது. நாய் கவ்விய மனிதன் தீவிரவாதியாக்கப்படுகிறான்.

''துருப்பிடித்துத் தேய்ந்து போனதால்தான் திருகாணி கழன்று விட்டது'' என்று ஒரு வாரம் கழித்து ரயில்வே அதிகாரி தரும் ஆய்வறிக்கை சீந்துவாரின்றி கோப்புக்குள் போகிறது. ஆனால் தீவிரவாதிகளுக்கெதிரான பொதுக் கருத்தில் இந்த 'ரயில் கவிழ்ப்பு சதி' கூடுதல் ஆதாரமாக மக்களின் மூளைக்குள் நுழைந்து விடுகிறது.

சந்தையில் போட்டியிடும் சோப்பு வியாபாரிகள் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக ''நறுமணம், ஆரோக்கியம், சுறுசுறுப்பு, அழகு, நம்பிக்கை, தூய்மை'' என்று பல்வேறு குணாதிசயங்களை ஒரு பாவமுமறியாத சோப்புக் கட்டியின் மீது ஏற்றுவதைப் போல, தீவிரவாதிகள் மீது குற்றச்சாட்டுகளைக் கூட்டுகின்றன பத்திரிகைகள்.

அது மட்டுமல்ல, எதிர்மறையான செய்திகள் வெளியிடும் போதெல்லாம் குற்றவாளிகள் 'தீவிரவாதிகள்' என்றே சித்திரிக்கப்படுகின்றனர். பிஜி பிரதமரைப் பிடித்து வைத்திருக்கும் ஆட்சிக் கவிழ்ப்புக் கும்பலின் தலைவன் 'ஸ்பைட்'டை தீவிரவாதக் கும்பலின் தலைவன் என்று எழுதுகின்றன பத்திரிகைகள்.

வங்கிக் கொள்ளை நடந்தால் ''தீவிரவாதிகள் கைவரிசையா?'' என்கின்றன தலைப்புச் செய்திகள். வழக்கமான கிரிமினல்களின் வேலைதான் என்று தெரிய வந்தால், பணமே திரும்பக் கிடைத்துவிட்டதைப் போல அந்தச் செய்தியையே மறந்து விடுகின்றன.

பொய்களைப் புனைந்து புனைந்து செய்திக் கதையாகவும் திரைக்கதையாகவும் விற்பனை செய்யும் இந்தக் கூட்டம், விற்பனை அதிகரிக்குமென்ற உத்திரவாதம் இருந்தாலும், அரசின் ஒடுக்குமுறைகளையும் தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் போலீசு நடத்தும் கொலைகளையும் கதையாக்கி விற்பார்களா? மாட்டார்கள். அங்கேதான் ஒளிந்திருக்கிறது இவர்களது ஆளும் வர்க்க சேவகம்.

**ஓட்டுக் கட்சிகள்:**
**ஆட்காட்டி வேலை அல்லது ஆட்சியைக் கலை!**

ஓட்டுக் கட்சிகளைப் பொருத்தவரை அவர்களுக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், முந்தைய நாள் சட்டசபையில் கட்டிப் புரண்டிருந்தாலும் மறுநாள் ''அரசியல் வேறு - நட்பு வேறு'' என்று பொது மேடையில் கட்டிப் பிடித்துக் கொள்வதைப் போல, ''அரசியல் வேறு தீவிரவாதம் வேறு - இதை அரசியல் ஆக்கக் கூடாது'' என்று இலக்கணமே வகுத்திருக்கிறார்கள். இதில் 'எதிர்க்கட்சி'களின் பங்கு அளப்பரியது.

**எழுபதுகளில் வந்த சினிமாக்களின் கடத்தல் கார வில்லன்கள் என்ன காரியங்களைச் செய்தார்களோ, அதேவிதமான காரியங்களைச் செய்யும் வில்லன்களை இப்போது தீவிரவாதிகள் என்று பெயர் மாற்றி அழைக்கிறது சினிமா.**

'ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சி'யாகச் செயல்படும் போது ''அங்கே புலி ஆதரவு மாநாடு நடக்கிறது; தடை செய்ய வேண்டும்'' என்று அன்புடன் கேட்டுக் கொள் கிறார்கள். ஆட்சியைக் கலைப்பது என முடிவு செய்துவிட்டால் அதையே சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையாக்கி டெல்லிக்கு ஆள்காட்டுகிறார்கள்.

ஜெ. ஆட்சியின் போது பீட்டர் அல்போன்ஸ், சோ. பாலகிருஷ்ணன், வாழப்பாடி போன்றவர்கள் கிளப்பிய புலி பீதியையும், அப்போது தினமலர் வெளியிட்ட செய்திகளையும் அதைத் தொடர்ந்து பலர் தடாவில் கைது செய்யப்பட்டதையும் நினைவுபடுத்திப் பாருங்கள்.

கோவை குண்டு வெடிப்பையொட்டி ஜெயலலிதா, பாரதீய ஜனதா மற்றும் தமிழகப் பத்திரிகைகள் கிளப்பிய வெடி குண்டு புரளிகள், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு குறித்த குற்றச்சாட்டுகள், பின்லாடன் சதி, பாகிஸ்தான் சதி போன்ற செய்திகள் அனைத்தையும் நினைவு படுத்திப் பாருங்கள் - இதன் பரிமாணத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

பத்திரிகைகள் - சினிமா - ஓட்டுக்கட்சி அரசியல் என்ற இந்த சிமெண்ட் - மணல் - ஜல்லிக் கலவை இடையறாது உருண்டு கொண்டே இருக்கிறது. தீவிரவாதம் - தீவிரவாதிகள் என்பவை பற்றிய பாசிசத் தன்மை கொண்ட தேசவெறிக் கருத்தை, ஒரு கான்கிரீட்டுக்குரிய உறுதியுடன் மக்களின் மனதில் இவை உருவாக்கியிருக்கின்றன.

தினத்தந்தி வாசகர் முதல் தொலைக் காட்சி விவாதங்களில் பங்குபெறும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் வரை இதற்குப் பலியாகாதவர்கள் இல்லை.

**அரசு பயங்கரவாதம்**
**ஆதார பூர்வமாக...**

சமீபத்தில் இந்திய விமானம் கடத்தப்பட்ட போது தீவிரவாதிகளை விடுவிப்பதாக இருந்தால் அவர்களுடைய உடலில் எயிட்ஸ் கிருமிகளை ஏற்றி பின்னர் விடுவிக்கலாம் என்று 'அவுட்லுக்' இதழில் வாசகர் கடிதம் எழுதியிருக்கிறார் ஒருவர். பாமர மக்களின் அறியாமையை விட படித்த வர்க்கத்தின் 'அறிவு' ஆபத்தானதாக இருக்கிறது.

ஒரு வாசகனுக்கே இவ்வளவு 'அறிவுக் கூர்மை' இருக்குமானால் போலீசு, ராணுவத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

குருதிப் புனல் படத்தில் ஒரு காட்சி. போலீசு அதிகாரியின் மகளான பள்ளிச் சிறுமியை படுக்கைக்கு இழுக்கிறான் தீவிரவாதி. அந்தச் சிறுமியைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அவனுடைய காமவெறிக்குப் பலியாகத் தருகிறாள் இன்னொரு போலீசு அதிகாரியின் மனைவி.

உண்மையில் எங்கும் எப்போதும் இப்படி நடந்ததில்லை. ஆனால் காசுமீரில் நடந்த ஆதாரபூர்வமான சம்பவத்தைக் கேளுங்கள் (யாசின் மாலிக் - பிரான்டியர் இதழில்) ஒரு இராணுவ அதிகாரியின் காமவெறியிலிருந்து தன் இரு பெண்களையும் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அவனுடைய வன்புணர்ச்சிக்குப் பலியாக்கிக் கொண்டிருக்கிறாள் ஒரு தாய்.

போலீசு அதிகாரியின் குடும்பத்தையே தீவிரவாதிகள் பழிவாங்குவதாகக் காட்டாத திரைப்படம் இல்லை. ஆனால், சமீபத்தில் உல்ஃபா அமைப்பின் தலைவர் ஒருவரைக் கைது செய்ய முடியவில்லை என்பதற்காக அவரது மனைவி, மகள் உள்ளிட்ட குடும்பத்தையே ஆள்வைத்துச்

www.padippakam.com

சுட்டுக் கொன்றிருக்கிறது இராணுவம்.

தாங்கள் செய்யும் கொலையைக் கண்ணால் கண்ட சாட்சிகளைத் தீவிரவாதக் கும்பல் துரத்தித் துரத்திக் கொல்வதாக திரைப்படங்கள் சித்தரிக்கின்றன. சமீபத்தில் இந்து மதவெறிப் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்ட பாதிரியாரின் சமையல்காரரை, அவர்தான் சாட்சி என்ற ஒரே காரணத்திற்காக காவல் நிலையத்தில் வைத்தே கொலை செய்திருக்கிறது போலீசு.

குற்றம் செய்துவிட்டுத் தடயங்களை அழிக்கும் கிரிமினல்களாகத் தீவிரவாதிகளைச் சித்தரிக்கின்றன திரைப்படங்கள். ஆந்திராவிலும், பீகாரிலும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கில் கொல்லப்படும் நக்சல்பாரிகளின் பிணத்தின் அருகில் துப்பாக்கியை வைத்துப் புகைப்படம் எடுத்து மோதலில் கொல்லப்பட்டதாகத் தடயத்தை உருவாக்குகிறது போலீசு. காசுமீரிலோ இத்தகைய அக்கிரமங்களை அம்பலப்படுத்தும் மனித உரிமை அமைப்பினரே 'தடயமின்றி' காணாமல் போகின்றனர்.

ஃபியூகிட்டிவ்ஸ் என்ற தொலைக் காட்சித் தொடர் மக்கள் யுத்தக் குழுவின் செயலர் தோழர் கணபதியைக் கொலைகாரன் என்று சித்தரித்தது. அந்தத் தொடரின் இயக்குனர் தன்னுடைய மனைவியைக் கொலை செய்து பிடிபட்டிருக்கிறான். நேர்மையான போலீசு அதிகாரியாக நடிக்கும் சினிமாக்கதாநாயகர்கள் மற்றும் அந்தப்பட இயக்குனர்களோ இதுவரை பிடிபடாமல் தப்பித்து வரும் கிரிமினல்கள்.

ஆதாரங்களைப் பட்டியலிட்டு மாளாது. வாச்சாத்தியைப் போல ஊர்ப் பெண்கள் அனைவரையும் வன்புணர்ச்சிக்கும் சித்திரவதைக்கும் ஆளாக்கிய கொடுமை வேறெங்கே நடந்திருக்கிறது?

தீவிரவாதிகளைக், காட்டிக் கொடுக்க மறுக்கும் கிராமங்களையே காஷ்மீரில் இராணுவம் வெடி வைத்துத் தகர்க்கிறது என்று தற்போது ஹுரியத் குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்தி வரும் சங்கராச்சாரியே கூறுகிறாரே, எத்தனை போலீசு குடியிருப்புகள் அம்மாதிரி தகர்க்கப்பட்டுள்ளன?

வக்கிரம், கொடூரம் என்ற வார்த்தைகளாலும் விவரிக்க முடியாத சித்திரவதை முறைகளை உருவாக்கிய வண்ணமிருக்கிறது போலீசு. சித்திரவதையில் அதிநவீன உத்திகள், தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்வதற்காகவும், உலகத்தரத்தை எட்டுவதற்காகவும் இஸ்ரேலுக்கு விஜயம் செய்கிறார்கள் அதிகாரிகள்.

இத்தகைய வக்கிரமான முறைகளில் ஈடுபடும் சில தீவிரவாத அமைப்பினர் கூட இதையெல்லாம் போலீசைப் பார்த்துத் தான் கற்றுக் கொண்டிருக்கின்றனர். அல்லது போலீசாலேயே பயிற்றுவிக்கப்படுகின்றனர். போதை மருந்து கடத்தவும், சிவிலியன் மக்களைக் கொல்லவும் ஈழப் போராளிகளைப் பயிற்றுவித்துச் சீரழித்தது இந்திய உளவுத்துறைதான் என்பது உலக றிந்த உண்மையல்லவா?

ஆம்! இந்த அரசுதான் முதல் பயங்கரவாதி. ஜனநாயக முகமூடியணிந்த பயங்கரவாதி. ஊமையாக இருக்கும் வரை ஜனநாயகவாதியாக நடந்து கொள்ளும் அரசு, நீங்கள் பேசத் துவங்கியவுடனே பயங்கரவாதியாகி விடுகிறது.

## துப்பாக்கியும் தீவிரவாதமும் சில கேள்விகள்

இருப்பினும், காக்கி அல்லது பச்சைச் சீருடை அணியாதவன் கையில் துப்பாக்கி இருந்தால் அவன்தான் தீவிரவாதி என்ற அளவுக்கு எளிமையான சூத்திரம் மக்களின் மனதில் பதிய வைக்கப்பட்டுள்ளது.

பணக்காரர்களும்தான் துப்பாக்கி வைத்திருக்கிறார்கள். பீகாரில் பண்ணையார்கள் படையே வைத்திருக்கிறார்கள். ரவுடிகளும் குண்டர்களும் அதிநவீன ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள்; சொல்லப் போனால் பயங்கரவாதி என்ற சொல் புழக்கத்தில் வருமுன்பே இவர்களிடம் ஆயுதம் புழங்கிக் கொண்டிருக்கிறது.

நக்சல்பாரிகள் தீவிரவாதிகள் என்றால் இவர்களும் தீவிரவாதிகள்தானே என்று சிந்திக்கத் தெரிந்த சிலர் கேட்கலாம்.

ஐயா, அது சுரண்டலையும், சாதியையும், சொத்தையும், சாராயத்தையும், கஞ்சாவையும் மொத்தத்தில் இந்த அமைப்பைப் பாதுகாக்க ஏந்தப்பட்ட துப்பாக்கி. நக்சல்பாரிகளின் துப்பாக்கியோ இந்த அமைப்பு முறையை ஒழிப்பதற்கு ஏந்தப்பட்ட துப்பாக்கி. துப்பாக்கி அல்ல பிரச்சினை. அது யாரைக் குறி பார்க்கிறது என்பதுதான் பிரச்சினை.

அதனால்தான் பஜ்ரங்தள் பகிரங்கமாக ஆயுதப்பயிற்சி எடுக்க அனுமதிக்கப்படுகிறது. பல கிறித்தவப் பாதிரியார்களைக் கொன்ற பின்னும், தேவாலயங்களைக் குண்டு வைத்துத் தகர்த்த பின்னும் அதைச் 'சேவை அமைப்பு' என்றே அழைக்கிறார் அத்வானி.

ஆம். ஆயுதம் அல்ல பிரச்சினை. அதை ஏந்தியிருப்பவனின் இலட்சியம்தான் பிரச்சினை. அதனால்தான் மசூதியை இடித்து பம்பாயில் 2000 முசுலீம்களைக் கொலை செய்த இந்து பயங்கரவாதிகள் தடாவில் கைது செய்யப்படவில்லை - ஆனால் அதற்கு பதிலடியாக பங்குச் சந்தையைத் தகர்த்த இசுலாமியத் தீவிரவாதிகளுக்குத் தடா; கோவையில் அப்பாவி முசுலீம்களை வேட்டையாடிய இந்து முன்னணிக்குத் தடா இல்லை - அல் உம்மாவுக்குத் தடா. பீகாரில் ரன்வீர்சேனாவுக்குத் தடா இல்லை; மாவோயிஸ்டு கம்யூனிஸ்டு மையத்திற்குத்தான் தடா.

கம்யூனிசப் புரட்சியாளர்களான நக்சல்பாரிகள், இசுலாமியத் தீவிரவாதிகளான அல்உம்மா - ஹிஸ்புல் முஜாகிதீன் போன்ற அமைப்புகள், இனவிடுதலைக்குப் போராடும் நாகா, மிசோ, அசாம் போராளிகள் ஆகிய அனைவரும் ஏதோ ஒரு நோக்கத்திற்காக இந்த அரசை எதிர்க்கிறார்கள் என்பதால் எல்லோரையும் 'தீவிரவாதம்' என்ற பட்டிக்குள் அடைக்க முடியாது.

**தன் மகன் தீவிரவாதி அல்ல என்று இராணுவத்திடம் மன்றாடும் காசுமீரித் தாய்.**



அவர்கள் என்ன நோக்கத்துக்காக எதிர்க்கிறார்கள் என்பதுதான் அவர்களை வேறுபடுத்துகிறது. ஒவ்வொரு 'தீவிரவாதத்திற்கும்' ஒரு சமூக, அரசியல் பின்புலம் இருக்கிறது. 'தீவிரவாத இயக்கங்கள்' என்று கூறப்படும் இயக்கங்கள் முரண்பட்ட அரசியல் சித்தாந்த வேர்களைக் கொண்டுள்ளன. பல அமைப்புகள் ஒன்றுக்கொன்று எதிராய் இருக்கின்றன.

'மதச்சார்பற்ற சுதந்திர காசுமீர்' என்ற கோரிக்கையை முன் வைக்கும் ஜம்மு காசுமீர் விடுதலை முன்னணியினரை இந்திய அரசும் வேட்டையாடியது; 'இசுலாமிய காசுமீர்' கோரும் ஹிஸ்புல் முஜாகி

www.padippakam.com

தீனும் வேட்டையாடியது. சீக்கிய மதவெறியை எதிர்த்த நக்சல்பாரிகளைக் கொன்று குவித்தார்கள் காலிஸ்தான் தீவிரவாதிகள். எல்லாத் தீவிரவாதிகளும் ஒன்றுதான் என்று எப்படிக் கூற முடியும்?

ஒரே காதல் கதையை அரைக்கும் சினிமா இயக்குனர்கள் ''அதே காதல் கதை தானே'' என்று கேட்டால், ''இல்லை நான் இதை வித்தியாசமாகச் சொல்லியிருக்கிறேன்'' என்கிறார்கள். கொள்கை வேறுபாடு ஏதுமற்ற ஓட்டுப் பொறுக்கிகள் தமக்குள் தீவிர கொள்கை வேறுபாடு உள்ளது போல நடிக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் தெளிவான கொள்கை வேறுபாடு கொண்டவர்களைத் 'தீவிரவாதிகள்' என்று மொத்தமாக முத்திரை குத்துகிறார்கள். அந்நியக் கைக்கூலிகள் என்றும் இரக்கமற்ற அரக்கர்கள் என்றும் பிரச்சாரம் செய்கிறார்கள்.

**எட்டுத் திக்கும் தேசபக்தி பஜனை பன்னிரு கரங்களிலும் புளுகு மூட்டை**

இந்த ஜனநாயகவாதிகளைக் காட்டிலும் ஜனநாயகம் என்ற சொல்லையே அறியாத வால்மீகி யோக்கியமானவன். இராமாயணத்தின் வில்லனாக இருந்த போதிலும் இராவணனின் நற்குணங்கள் பற்றி நாலு வரி எழுதினான். செத்து விழுவதற்கு முன்னால் வாலிக்குப் பேச வாய்ப்பளித்தான்.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கைகள், சினிமா என்று ஆறுமுகங்கள் பன்னிரு கரங்களாலும் புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டபடி இருக்கும் அரசு ஒரே ஒரு எதிர்ப்புச் சுவரொட்டி ஒட்டினால் உடனே அதைச் சுரண்டுகிறது; சுவரில் எழுதினால் நக்குகிறது; பேச வாயெடுத்தால் குரைத்து அடக்குகிறது.

ஐயப்பன் பஜனை போல எட்டுத் திக்குகளிலிருந்தும் விடிய விடிய ஒலித்துக் கொண்டேயிருக்கிறது இந்தத் ''தீவிரவாத எதிர்ப்பு - தேசபக்தி பஜனை''.

ஐயப்ப பஜனையின் மீதான பக்தர்களின் கவர்ச்சி, அது ஒரு மண்டலத்துடன் முடிவதில்தான் இருக்கிறது; அதே காரணத்தினால்தான் அது மற்றவர்களால் சகித்துக் கொள்ளவும் படுகிறது. ஆண்டு முழுவதும் பஜனை, ஆண்டுக்கணக்கில் பஜனை என்றால் குருசாமிகளே சலூனுக்கு ஓடிவிடுவார்கள். சமீபத்தில் சிங்கள இராணுவம் அப்படித்தான் ஓடியது.

பத்தாண்டுகளாக காசுமீரின் குளிரிலும், அசாமின் மழையிலும் வெடவெடத்துக் கொண்டிருக்கும் இந்திய இராணுவத்தின் நிலையும் அதுதான்.

## நலம், நலமறிய நக்சல்பாரி...

*நக்சலைட்டுகளை*
*இயங்கவிடாமல் செய்துவிட்டதாம் அரசு*
*நம்புகிறார்கள் சிலர்.*

*உண்மையில்*
*இயங்கமுடியவில்லை மக்களால்.*

*கத்திக்கு எத்தனைச் சாணைபிடித்தாலும்*
*ஒரு இழவு விசாரித்துவர*
*பேருந்து கட்டணத்தைப்*
*பிடிக்க முடியாமல்*
*துருப்பிடித்துக் கிடக்கிறது*
*தொழிலாளியின் வாழ்க்கை.*

*அங்கங்கே ஆள் வைத்து*
*பணத்தாலே கண்ணி வைத்து*
*எத்தனை முறை கிளப்பினாலும்*
*எழுப்ப முடியவில்லை*
*'எம்ப்ளாய்மென்ட்' எண்ணை.*

*ராகு மூணாம் இடம் போகிறார்*
*கேது நாலாம் இடம் வருகிறார்*
*கேட்ட பவுனைப் போடமுடியாததால்*
*அக்காமார்கள் மட்டும்*
*அடுப்படியிலேயே கிடக்கிறார்கள்.*

*ரேசன் அரிசி வடித்த கஞ்சியில்*
*சலவை செய்த உயிரை உடுத்தி உடுத்தி*
*ராத்திரி அறுப்புக்குப் போய் வந்து படுத்த*
*அம்மாவின் கண்கள்*
*கடைசிவரை திறக்கவே இல்லை..*

*ஊரெல்லாம் கடன்பட்டு*
*தலைமறைவு வாழ்க்கை நடத்தும்*
*உங்களுக்குத் தெரியாதா?*
*புரட்சிக்குக் கடன்படாமல்*
*இனி இயங்க முடியாது என்பது.*

● துரை. சண்முகம்

தீவிரவாதிகளிடமிருந்து ஜனநாயகத்தையும் ஒருமைப்பாட்டையும் காப்பாற்றத்தான் 5 லட்சம் சிப்பாய்களைக் குளிரில் நிற்க வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள் இந்த ஜனநாயகவாதிகள்.

ஆனால் இந்த ஜனநாயகவாதிகள் தேர்தலை நடத்துவதற்கே இராணுவம் தேவைப்பட்டது. காசுமீரிலிருந்து ஒரு பகுதி இராணுவம் தருவிக்கப்பட்டது. தீவிரவாதிகள் காசுமீரைத் தூக்கிக் கொண்டு ஓடி விட மாட்டார்கள்; ஆனால் ஜனநாயகவாதிகள் ஓட்டுப் பெட்டியைத் திருடிக் கொண்டு ஓடி விடுவார்களே!

**மைனர் கெட்டால் மாமா!**

இந்த ஜனநாயகவாதிகளின் புதிய கோரிக்கையைக் கேளுங்கள்: ''ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும்; ஆனால் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கே ஜனநாயகத்தை ஒழிப்பது அவசியமாக இருக்கிறது.'' எனவே, தடா சட்டம் புதிய பெயரில் மீண்டும் வருகிறது.

''மைனர் கெட்டால் மாமா'' என்பார்கள். ராஜீவ் கொண்டு வந்த சட்டத்தின் பெயர் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம். வர இருப்பது கிரிமினல் சட்டத் திருத்தம்.

பெயரிலிருந்து எதையும் கண்டுபிடிக்க முடியாத ஏதோ ஒரு 'கொசுறு' சட்டம் போலத் தெரிகிறதல்லவா? இந்தக் கொசுறு சட்டத்திற்குள் இன்னொரு கொசுறு இருக்கிறது.

பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் செய்வதைத் (அதாவது கொள்ளையடிப்பதை) தடுப்பவர்களும் இடையூறு செய்பவர்களும் கூட இனி பயங்கரவாதிகள் எனக் கருதப்படுவார்கள். ராஜீவ் கொண்டு வந்த 'தடா'வைக் காட்டிலும் இது ஒரு முன்னேற்றம்! மைனர் என்ற சொல்லுக்குரிய பொருளில் ராஜீவ் மைனர்தான்; பாரதீய ஜனதாவும் மாமாதான்.

முன்னேற்றம் இது மட்டுமல்ல; இச்சட்டத்தின்படி நீங்கள் தீவிரவாதியாகக் கருதப்பட அத்தகைய பேச்சைக் கேட்டால் போதுமானது; எதற்கு அந்த வம்பெல்லாம் என்று வீட்டோடு இருக்கலாம்; இருந்தாலும் தீவிரவாதக் கொள்கை உடைய நபர் உங்கள் தெருவிலோ கிராமத்திலோ குடியிருந்தால் அவரைப் பற்றிய தகவலை நீங்கள் போலீசுக்குத் தெரிவிக்க வேண்டும். இல்லையேல் தீவிரவாதத்துக்கு உடந்தையாக இருந்ததாக நீங்கள் குற்றம் சாட்டப்படுவீர்கள்.

ஆள்காட்டியாக இருக்க மறுப்போர் அனைவரும் தீவிரவாதிகளே. இரண்டுக்கும் நடுவில், கருப்பும் இல்லாமல் வெள்ளையும் இல்லாமல் சாம்பல் நிறமாக இருந்துவிட்டுப் போகலாம் என்று சிலர் கருதக்கூடும். யார் கண்டது? வல்லரசு படத்தில் கைதட்ட வேண்டிய காட்சிகளில் சும்மாயிருப்பவர்கள் கூட கண்காணிக்கப் படலாம்!

தீவிரவாதி அல்லது ஆள்காட்டி! யார் தீவிரவாதி என்ற கேள்விக்கு விடை காண்பது எத்தனை எளிதாகிவிட்டது!

● மருதையன்

www.padippakam.com

# உங்களுக்குள் குரோனியே இல்லையா?



"நான் தேசத்தை நேசிக்கிறேன். பணத்தையும் நேசிக்கிறேன்" என்று விசாரணை நீதிபதியின் முன் வாக்குமூலம் அளித்திருக்கிறார் ஹன்சி குரோனியே.

"நாட்டை நேசிக்கிறேன் - நோட்டையும் நேசிக்கிறேன்" அடடா, இது ஒரு கவிதை! லட்சோப லட்சம் மனச்சாட்சிகள் குரோனியேவின் இந்தக் கவிதை மூலம் பேசுகின்றன.

"நான் மனைவியை நேசிக்கிறேன். காதலியையும் நேசிக்கிறேன்" "நேர்மையை நேசிக்கிறேன். லஞ்சத்தையும் நேசிக்கிறேன்" "புரட்சியை நேசிக்கிறேன். சொத்தையும் நேசிக்கிறேன்" "சேவையை நேசிக்கிறேன். சன்மானத்தையும் நேசிக்கிறேன்" என்று பலவாறாக நம் காதில் ஒலிக்கிறது இந்தக் கவிதை!

போவோர் வருவோரெல்லாம் குரோனியேவைக் காறித்துப்புகிறார்கள். எப்போதுமே கூட்டத்தோடு கூட்டமாக தரும அடி போடுவது மிகச் சுலபமான காரியம்.

இப்படித்தான் ஒரு விலை மாதுவுக்கு தரும அடி போட்டுக் கொண்டிருந்த கூட்டத்தாரிடம் ஏசு சொன்னார், "உங்களில் பாவம் செய்யாதவர்கள் அவள் மீது கல் எறியுங்கள்."

உடனே அந்த யோக்கியர்கள் அனைவரும் கல்லைக் கீழே போட்டு விட்டார்கள். தானும் பாவிதான் என்றால், கல்லை தன்மீதே எறிந்து கொள்ளலாமே என்று அவர்களுக்குத் தோன்றவில்லை.

ஏன் தோன்றவில்லை? "அடுத்தவர்களை விமரிசனம் செய்வது எளிது. தன்னைத்தானே விமரிசனத்துக்கு உட்படுத்திக் கொள்வதென்பது தன்மீதே நெருப்பை அள்ளிக் கொட்டிக் கொள்வதைப் போன்றது" என்றார் மாவோ. நெருப்பு மேலே பட்டால் சுடும் என்பது இரண்டாவது பிரச்சினைதான். அந்த நெருப்பை எடுப்பதற்கே நமக்குக் கை வருவதில்லையே அதுதான் மூல முதல் பிரச்சினை.

குரோனியே நிறவெறி பிடித்த தென் ஆப்பிரிக்காவின் கிரிக்கெட் ஆட்டக்காரன். விளையாட்டையே ஒரு பணம் கறக்கும் தொழிலாகக் கொண்டவர்கள் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள். இத்தகைய பேர்வழிகளுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதும் பரிசீலனை செய்வதும் நியாயம்தானா என்று சிலர் கருதக் கூடும்.

நேர்மை, தியாகம், உழைப்பு போன்ற சிறந்த பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு உன்னதமான மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து கற்பது சரியென்றால், இழிந்த பண்புகளைக் களைந்து கொள்வதற்கு இழிந்தவர்கள் எனப்படுவோர் அந்நிலையை எங்ஙனம் அடைந்தனர் என்று அறிந்து கொள்வதும் சரியானது தான்.

எனவே, குரோனியே மீதான விசாரணையின் ஊடாக நம்மை நாமே குறுக்கு விசாரணையும் செய்து பார்த்துக் கொள்வோம்.

★★★

ஒரு இளைஞனாக தென் ஆப்பிரிக்க அணியில் சேர்ந்த போது இப்போது கூறுவதைப் போல தேசத்தை, ஆட்டத்தை, அணியை குரோனியே நேசித்திருக்க மாட்டார் என்றா நினைக்கிறீர்கள்? நேசித்திருப்பார். அன்று ஒருவேளை யாரேனும் ஒரு சூதாட்டத் தரகன் தோற்பதற்காகக் காசு கொடுக்க முன் வந்திருந்தால் அதை அவன் முகத்தில் எறிந்திருக்க மாட்டார் என்றா நினைக்கிறீர்கள்? எறிந்திருப்பார்.

இன்றோ, அவருடைய பணத்தாசை கூண்டில் ஏற்றப்பட்டவுடன் அவருக்குத் தனது அன்றைய நாட்டுப் பற்று நினைவுக்கு வருகிறது.

சன் டிவி அதிபருக்கு அந்த நாளில் அரைக்கால் சட்டையுடன் திருவாரூரில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய காட்சிகள் நினைவுக்கு வருவதைப் போல.

காங்கிரசுக்குத் தரகு வேலை பார்த்துக் கொண்டிருக்கும் சுர்ஜித் போன்றோருக்கு விடுதலைப் போராட்ட காலத்தில் அனுபவித்த போலீசு சித்திரவதைகள் நினைவுக்கு வருவதைப் போல.

ஒரு மாதிரியாக ஓய்வு பெற்று உறங்கும் முன்னாள் புரட்சிக்காரர்களுக்குத் தாங்கள் ஓய்வு உறக்கமின்றிப் பாடுபட்ட நாட்கள் கனவில் வருவது போல.

தான் இன்னமும் தேசத்தை நேசிப்பதாகத்தான் கருதுகிறார் குரோனியே. "பணத்துக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகி" என்று தன்னைத்தானே அவரால் மதிப்பிட்டுக் கொள்ள முடியவில்லை. "சூதாடியிடம் கை நீட்டிய அந்தத் தருணம் என்பது கம்பீரமான வாழ்க்கையில் நேர்ந்த ஒரு எதிர்பாராத சறுக்கல். நீண்ட தெளிந்த நீரோடையில் கலந்த சிறு கசடு" என்று அவர் தன்னைத்தானே தேற்றிக் கொள்கிறார். நம்மையும் நம்பச் சொல்கிறார்.

தவறிழைத்தவர்கள் பலரும், "அது தனக்கே தெரியாமல் தன்னில் நிகழ்ந்த விபத்து" என்றே நிரூபிக்க முயல்கிறார்கள். தன்னுடைய இயல்புக்கே முரணான இந்த இழிசெயலை எப்படிச் செய்தேன் என்று தனக்கே புரியவில்லை என்கிறார்கள்.

இப்படியொரு பதிலால் திகைத்துத் தடுமாறும் மனைவிமார்கள் "எம் புருசன் சொக்கத் தங்கமாச்சே. அந்தச் சிறுக்கி என்ன மருந்து வைத்து மயக்கினாளோ" என்று மந்திரவாதியிடம் ஓடுகிறார்கள்.

நாம் மந்திரவாதியிடம் ஓடத் தேவையில்லை. அதைவிட சூதாட்டத் தரகனிடம் கை நீட்டிக் காசு வாங்கும்போது குரோனியே எப்படிச் செயல்பட்டிருப்பார் என ஆய்வது பயன் தரும்.

ஒரு ஊழல் சிந்தனை செயல் வடிவம் பெறும்போதுதான் சம்பந்தப்பட்ட மனிதனின் ஆகக் கீழ்த்தரமான குணாதிசயங்கள் அனைத்தும் ஆகத்துல்லியமான விழிப்புணர்வுடன் இயங்குகின்றன. அவன் ஒரு கம்யூனிஸ்டாகவோ, பொது நலவாதியாகவோ, மக்களிடையே நற்பெயரெடுத்த தலைவனாகவோ இருக்கும் பட்சத்தில். அவன் தனது நடைமுறைத் தந்திரத்தில் நரியை விஞ்சி விடுகிறான்.

குரோனியே ஒரு தூய கிறித்தவ நல்லொழுக்க சீலர். கிரிக்கெட் அணிக்குள்ளேயே இருந்த பைபிள் குழுவின் தலைவர். எனவே அணியில் தான் மட்டும்தான் சபல புத்திக்காரனா, தனக்கு 'தோழர்கள்' இருக்கிறார்களா என்று அவர் அறிய விரும்புகிறார்.

"இந்த ஆட்டத்தில் தோற்றால் இத்தனை ஆயிரம் டாலர் கிடைக்கும் என்ன சொல்கிறீர்கள்" என்று போகிற போக்கில் ஒரு நகைச்சுவை போல சக வீரர்களிடம் எடுத்து விடுகிறார். இவன்

www.padippakam.com

கிண்டல் செய்கிறானா ஆழம் பார்க்கிறானா என்று புரிந்து கொள்ள முடியாதவர்கள் அதை சிரித்து ஒதுக்குகிறார்கள், புரிந்தவர்கள் ஒப்பந்தம் போட்டுக் கொள்கிறார்கள்.

இப்போது குரோனியே தனி ஆள் இல்லை. அணிக்குள் ஒரு ஊழல் அணி இருக்கிறது. ஊழல் அமைப்பு ரீதியாகத் திரண்டு விட்டது. இனி அது தன்னுடைய தரும நியாயங்களைப் பேச வேண்டும்.

''நான் காசு வாங்கியது உண்மை. ஆனால் அதற்காக எந்த ஒரு ஆட்டத்தையும் விட்டுக் கொடுக்கவில்லை'' என்று விளக்கமளிக்கிறார் குரோனியே. அதனால்தான் ''தேசத்தை நேசிக்கிறேன் - பணத்தையும் நேசிக்கிறேன்'' என்று கவிதை சொல்கிறார்.

★☆★

ஒரு போலி கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவரை எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய மகனுக்கு நிர்வாகம் ஒரு வேலை போட்டுக் கொடுக்கிறது. ஒரு விசேடச் சலுகையாகத்தான் நிர்வாகம் அதைச் செய்கிறது. ஆனால் அதற்காகத் தொழிலாளர்களின் கோரிக்கை எதையும் அவர் விட்டுக் கொடுத்ததாக நிரூபிக்க முடியாது. விட்டுக் கொடுக்கவில்லை என்றே கொள்வோம்.

அவ்வாறு விட்டுத் தரவில்லை என்பதே அவர் பெற்ற சலுகையை நியாயமாக்கி விடுமா? மற்ற தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குக் கிடைக்காத அந்தச் சலுகை தனக்கு அளிக்கப்படுவது குறித்து அவர் கூச்சப்படவில்லை; அதைப் பெறுவதற்காக அவர் வெட்கித் தலைகுனியவுமில்லை.

தொழிலாளர் கோரிக்கையை விட்டுத் தரவில்லை எனும்போது இந்தச் சலுகையைப் பெறுவதில் தவறென்ன என்று கேட்கிறார். அனைவருக்கும் வேலை என்பதுதானே கட்சியின் முழக்கம், அதில் என் மகன் மட்டும் கிடையாதா என்று தன்னைத் தேற்றிக் கொள்கிறார். இப்படிப் பேசுவதற்காக அவர் கடுகளவும் கூச்சப் படவில்லை என்பதுதான் அவருடைய தரத்துக்குச் சான்று.

ஒரு வரியில் சொன்னால், குரோனியே கூறுவதைப் போல, இவர் சேவையையும் நேசிக்கிறார் சன்மானத்தையும் நேசிக்கிறார். திருவாரூரில் புறப்பட்ட கழகத் தொண்டர்சன்டிவி அதிபரான கதையும் இதுவேதான்.

தி.மு.க. ஆட்சியைப் பற்றி ஒரு அடிமட்ட கட்சித் தொண்டனிடம் கேளுங்கள். எல்லாவற்றையும் தலைவர்களே சுருட்டிக் கொள்கிறார்களென்றும் தன்னைப் போன்ற தொண்டனுக்கு ஆட்சியால் பயனில்லை என்றும் அலுத்துக் கொள்வான். ''ஒரு வேலைவாய்ப்பு, ஒரு புறம்போக்கு நிலம், ஒரு காண்டிராக்டு... எதுவுமே இல்லையென்றால் எதற்காகத்தான் பாடுபட்டோம்?'' என்று மிக யதார்த்தமாகக் கேட்பான்.

''தம்பி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதல்லவா உன் லட்சியம்'' என்று கேட்டால், ''நானும் ஏழைதான்; என்னுடைய சிரிப்பில் இறைவனைப் பார்த்துக் கொள்'' என்பான்.

பதவியை மேல்துண்டு என்றும், கொள்கையை வேட்டியென்றும் உவமானம் சொன்னவர்கள் இன்று ஊரறிய அம்மணமாக நிற்கும்போதும் தங்கள் இடுப்பில் வேட்டி இருப்பதாகத்தான் விளக்கம் சொல்கிறார்கள்.

தெலிங்கானா உழவர் ''போராட்டத்தைச் சித்தரிக்கும் மாபூமி என்ற திரைப்படத்தின் ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது. நிலமற்ற ஏழை விவசாயியின் மகனான கதாநாயகன், விவசாயிகளுக்கு நிலத்தைப் பிரித்து விநியோகம் செய்கிறான். தனக்கும் நிலம் ஒதுக்குமாறு மகனிடம் கெஞ்சுகிறான் தந்தை. ஊருக்கெல்லாம் கொடுத்து முடித்தபின் எஞ்சியிருக்கும் ஒரு துண்டு நிலத்தைத் தந்தைக்குக் காட்டுகிறான் மகன்.

முதலில் தந்தைக்கு நிலத்தை ஒதுக்கி விட்டு, ''நான் தந்தையை நேசிக்கிறேன் மக்களையும் நேசிக்கிறேன்'' என்று அவன் கவிதை சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் அந்தக் கவிதை அவனை வில்லனாக்கியிருக்கும். குரோனியேவைப் போல.

குற்றவாளிக் கூண்டில் நிற்கும் குரோனியே பணத்துக்காக நாட்டுக்கும் அணிக்கும் துரோகம் செய்து விட்டதாக இந்தக் கணம் வரை ஒப்புக் கொள்ளவில்லை. அதுவும் இதுவும்தான் என்கிறார்.

காசுக்குப் பாய் விரிப்பவள் காதலி அல்ல, சன்மானத்திற்கு எதிர்பார்த்து செய்யும் வேலை சேவை அல்ல என்று தெரிந்தும் 'அதுவும் இதுவும்தான்' என்கிறார்கள் போலி கம்யூனிஸ்டு தலைவர்கள்.

அதுவும் இதுவும் என்ன இன்னும் பலதும் சேர்ந்ததாகத்தான் இருக்கிறது வாழ்க்கை. கொள்கைக்கும் நடைமுறைக்கும், ஆசைக்கும் அறநெறிக்கும், காதலுக்கும் கசப்புக்கும், தோழமைக்கும் பகைமைக்கும், தோற்றத்துக்கும் உண்மைக்கும் இன்னும் பலவிதமான எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டம்தான் வாழ்க்கை.

இவற்றில் அதுவா - இதுவா என்று தெரிவு செய்ய வேண்டிய தருணங்கள் பல வருகின்றன. பல நேரங்களில் அந்தத் தெரிவு, வாழ்க்கையின் திசையையே மாற்றி விடுகிறது. சிறியதொரு சறுக்கல் என்று நீங்கள் கருதுவது உங்களைத் திரும்ப முடியாத அதல பாதாளத்திலும் கூடத் தள்ளி விடுகிறது.

நெறி பிறழ்தல் என்பது எதிர்பாராத சறுக்கலல்ல; நெறி பிறழாமை தற்செயலான சாதனையுமல்ல.

உடலில் நுழையும் கிருமியைப் போன்றதல்ல உங்கள் சிந்தனையில் நுழையும் கிருமி. அதன் வரவையும், வளர்ச்சியையும் நீங்கள் அறிவீர்கள். நீங்கள் போற்றும் மதிப்பீடுகளை அந்தக் கிருமி மெல்ல மெல்ல அரிப்பதையும் நீங்கள் அறிவீர்கள். சொல்லப் போனால் நீங்கள் மட்டுமே அறிவீர்கள்.


நீங்கள் அறுந்து விழும்போதுதான் உலகம் நிமிர்ந்து பார்க்கிறது: ஆய்வு தொடங்குகிறது. இந்த ஆய்வின் சோதனைச் சாலை சமூகம். நீங்களோ நோயாளி அல்ல குற்றவாளி.

உங்கள் வீழ்ச்சியை நோயென்று கருதும் பக்குவமிருந்தால் வீழ்ந்த பாதையைத் திறந்து காட்டுவீர்கள். இல்லையேல் குற்றத்தையே புதியதொரு ஒழுக்கம் என்று நிலை நாட்ட முயல்வீர்கள். 'அதுவும் இதுவும் தான்' என்று குரோனியே சொன்னதைப் போல நீங்களும் ஒரு புதிய கவிதை சொல்லக் கூடும்.

◆ சூரியன்

> *ஒரு ஊழல் சிந்தனை செயல் வடிவம் பெறும் போது தான் சம்பந்தப்பட்ட மனிதனின் ஆகக் கீழ்த் தரமான குணாதிசயங்கள் அனைத்தும் ஆகத் துல்லியமான விழிப்புணர்வுடன் இயங்குகின்றன. அவன் ஒரு கம்யூனிஸ்டாகவோ, மக்களிடையே நற்பெயரெடுத்த தலைவனாகவோ இருக்கும் பட்சத்தில் அவன் தனது நடைமுறைத் தந்திரத்தில் நரியை விஞ்சிவிடுகிறான்.*

www.padippakam.com



# மண்

நிதி. கோமேதகம்

அன்புள்ள அப்பாவுக்கு,

மகன் பாலு எழுதிக் கொண்டது நலம் நலமறிய அவா!

ஊருக்கு வந்து சென்றதிலிருந்து நான் கடிதம் எழுதவில்லை என்று கோபம் வேண்டாம்.

மாமாவை போய்ப் பார்க்கவில்லை என்று கோபப்பட்டீர்கள். காலை எட்டு மணிக்குப் போனால் வீடு வந்து சேர இரவு பன்னிரெண்டு மணி ஆகிவிடுகிறது. இதில் சொந்த பந்தங்களைச் சுற்றி பார்க்க நேரம் எங்கே இருக்கிறது? அப்படியே போனா லும் எங்கென்று போய்ப் பார்ப்பது? அவரிடம் எத்தனைமுறை சொல்லியிருக்கிறேன் ஒரு வீடு எடுத்து தங்குங்கள் என்று.

அன்றைக்கு நான் பில்லர் வழியாகப் போகும்போது மாமா கூப்பிட கூப்பிட கண்டுகொள்ளாமல் போனதாக உன்னிடம் சொல்லிச் சொல்லி அழுததாக கூறினாய். மெய்தான் எனக்கும் சங்கடமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அன்று என் நண்பர்களோடு போய்க் கொண்டிருந்தேன் அப்போது நின்று எப்படி இவரோடு பேசிக் கொண்டிருக்க முடியும், நீங்களே சொல்லுங்கள்?

முக்கியமான விசயம். எனக்கு ஏர்ப்போட்டிலிருந்து இண்டர்வியூ வந்தது உங்களுக்கும் தெரியும். எனக்கும் வயசாயிட்டே போகிறதே. தனியார் கம்பெனிகளில் வேலை பார்த்து ஒரு பிரயோசனமும் இல்லை. வேலையாவது நிரந்தரமென்றால் அதுவும் இல்லை. எதிர்காலத்த நினைத்தால் எனக்கே பயமாக உள்ளது. எனவே இந்த இண்டர்வியூ கார்டை நம்ம இன்ஜினியர் நயினா சொன்ன ஆளிடம் காட்டினேன். அவர் அனைத்து ஃபார்மாலிட்டிகளையும் பார்த்து முடித்து விடுவதாகவும் பணம் மட்டும் ஒரு ஒன்றரை லட்சம் ஆகும் என்றும் கூறினார்.

பார்ப்பதற்கு நம்பிக்கையான ஆள் போலதான் இருக்கிறார். எனவே நீ நம் சோளக் கொல்லையையும் வாழைப்பட்டு கழனியையும் கிரையமாக விற்றுவிட ஏற்பாடு செய்யவும்.

போனவருசமே ஹைவே டிபார்மண்ட்டிலிருந்து இண்டர்வியூ வந்தப்ப சொன்னேன். 50,000 ஆவும் என்கிறார்கள் நீ அந்த நிலத்தை விற்கமாட்டேன் என்று ஒத்தை காலில் நின்றுவிட்டாய். இதுவும் நல்ல வேலைதான். ஆனால் இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால் என்னோட வாழ்க்கை அவ்வளவுதான்.

அந்த சூனியக்கார ஊரில் வந்து நான் ஏர் அடிக்கவோ, அண்டை வெட்டவோ போவது கிடையாது. உன்னாலும் முன்பு போல் கழனிவேலைகள் செய்ய முடியாது. எனவே எதற்கும் தயங்காமல் விற்று ஒழித்துவிட்டு இன்னும் ஒரு மாதத்திற்கு பணத்தோடு வரவும்.

தயவு செய்து குருவி சேர்ப்பதுபோல் சேர்த்து வாங்கின மண், கொக்கு சேர்க்கற மாதிரி சேர்த்து கண்டுபிடிச்ச மண் என்று பழைய பல்லவியையே பாடவேண்டாம். இது என் வாழ்க்கை பிரச்சினை. மற்றவை உங்கள் நல்ல பதில் கண்டு.

மகன்,பாலு.

சீவுக்காதன் எழுத்துக் கூட்டி கூட்டி படித்து முடித்ததும் தன்னுடைய வாழ்வே முடிந்துவிட்டது போல் சலனமற்று குந்திவிட்டார் பூச்சிக் கிழவன். படாதபாடு பட்டு மகனைப் படிக்க வைக்கும்போது கூட இப்படி நொறுங்கிப் போய் உட்கார்ந்ததில்லை.

தன் மகனை கல்லூரியில் சேர்த்ததிலிருந்து எத்தனைப் பேரிடம் அடமானம் போட்ட நிலம். அந்த பொன்விளைந்த பூமிகளை விற்று ஒழித்துவிடு என்று கேவலமாய் குறிப்பிட்ட கடித வரிகள் கிழவனை பாடாய்ப்படுத்தியது.

விற்று ஒழித்துவிடுவதா? எதை? இவனுக்குத் தெரியுமா அந்த பூமியை கண்டுபிடிக்க யார் யார் என்னென்ன பாடுபட்டார்கள் என்று; எதற்காக இவன் மாமன்காரன் முட்டிக்காலன் பட்டணம் போனான் என்று.

ஒருமுறை கன்னியம்மா தன்னை ''என் தம்பிக்காரன் பட்டணம்போய் வவுத்த வாய கட்டி மாடுபுடி, ஆடுபுடி மாமான்னு நூறு அம்பத குடுத்தா அதுல சாராயம் வாங்கி குடிச்சுட்டு வந்து மீனாக்கல கறி யாக்கலன்னா சண்ட போடற?'' என பூச்சிக் கிழவனைக் கேட்டு விட்டாள்.

''யார பாத்துடி உன் தம்பி குடுத்த காசுல குடிச்சன்னு சொன்ன நாரமுண்ட பெத்த வள'' என்று கேட்டு தவடைமேல் அடிக்க கன்னியம்மா தலைபோய் வாரையில் முட்டி மண்டை உடைந்தது.

''ஏன் மாமா இந்த காரியம் பண்ணீங்க'' என்று கேக்க வந்த மாவுபானை மீதும் கோபமாய்ப் பாய்ந்தார் பூச்சிக் கிழவன்.

''டேய் நான் இன்னா உன்னைமேரி பிளாட்பாரத்துல பொங்கித் துண்ணுட்டு பில்லாம் பிச்சிமேல கழுவி கவுக்கரவ னாடா? முட்டிக்கால் எலும்ப பேத்துடுவ(ன்) பேத்து'' என கேட்டு மச்சானையும் தாள்மேலையே அடிச்சி விரட்டினார்.

எப்போதும் ''போயுட்டு வர்ரேன் மாமா'' என வயிர்குளுர கூப்பிட்டுக் கிளம்பும் மச்சான் குனிந்த தலை நிமிராமல் பட்டணம் சென்றான்.

அந்தப் பழைய சண்டையும், மகன் இப்படி திடீர் என்று குண்டைத் தூக்கி தலையில் போட்டது எல்லாம் சேர்ந்து.

பூச்சி கிழவனுக்கு ஏனோ இருப்பு கொள்ள வில்லை. மாவாளியம்மா கோயிலுக்கும் ரேடியோ செட்டுக்கும் எத்தனை தடவை தான் திரும்பத் திரும்ப நடப்பது? வீட்டில் தரைகொண்டு படுக்கவும் பிடிக்கவில்லை.

இந்தக் கணமே கழனிகள் எல்லாம் கை விட்டுப் போவது போலவும் ஊரார் எல்லோரும் ஒன்னுமத்தவனைக் கேவ லமாய்ப் பார்ப்பதுபோல் தன்னைப் பார்ப்பதாயும் தெரிந்தன.

சாப்பிடக்கூட இஷ்டமின்றி, கன்னியம் மாவிடம் சொல்லாமல் கொள்ளாமல் அந்த கருக்கலிலேயே சோளக் கொல்லைக்கு கிளம்பினார்.

சோளக் கொல்லையில் போனமாசம் அறுத்துவிட்ட தாளடிகள் காய்ந்து கிடந் தன. இதை பார்த்த பிறகும் நம்பிக்கையில் லாமல் குனிந்து கைகளால் தாளடிகளை தடவிப் பார்த்த பின்தான் பூச்சிக்கு குண்டி யாங்குலையில் (அடிவயிறு) தண்ணீர் வந்தது.

வாழைப்பட்டு சவுக்குத் தோப்பில் கூவும் நரிகளின் ஊளை சத்தமும், தண்ணீர் பந்தலில் குலைக்கும் நாய்களின் சத்தமும் தவிர ஆள் அரவம் கிடையாது. அக்குளில் சுருண்டு கிடந்த வேட்டியை உதறிப் போட்டு நீட்டிப் படுத்துக் கொண்டு கழனி மண்ணை இரண்டு கைகளாலும் பீராய்ந்தும், சீய்த்தும் பார்த்து என் மண் என்னிடம்தான் இருக்கிறது என்னை விட்டுப் போகவில்லை என்பதை உறுதிப டுத்திக் கொண்ட பின்தான் கண்ரெப்பை களை கண்ணீரே போர்த்தி மூடியது.

முதல் கோழி கூவியதும் விழிக்கும் கிழ வனுக்கும் மூன்றாங்கோழி கூவின பின்தான் விழிப்பு வந்தது. பொழுது பளப ளவென்று விடியத் துவங்கிவிட்டதால் அரக்கப் பறக்க எழுந்து "ஒக்கட்டாமூட்டு தூக்கம் எங்கயிருந்துதான் வந்துச்சியின்னு தெரியலய" என்று தன்னைத்தானே திட்டிக் கொண்டு கழனி தலைமாட்டில் தான் வைத்த தென்னங்கன்றுக்கு ஒரு தோண்டி தண்ணீர் மொண்டு ஊற்றிவிட்டு வீடு செல்ல பிடிக்காமல் அந்த மரத்தடியி லேயே உட்கார்ந்து மரத்தைக் கட்டிக் கொண்டு அழுவதுபோல் ஒருகுறை அழுது தீர்த்துவுட்டு வீடு வந்து சேர மணி பதினொன்று ஆகிவிட்டது.

●○●

காலை கையை கழுவிவிட்டு காலாணி (குச்சு வீடு) குடிசைக்குள் நுழைய முயன்ற வரை, "தாத்தோவ் மாமா லட்டர் போட்டுக் கீறாரு மெட்ராசிலிருந்து" என்ற சீவுகா தனின் குரல் வெளியே இழுத்தது.

பூவரசமரத்தடியில் தலைசாய்த்து உட்கார்ந்து "படிடி எம்பொண்ணு" என சீவு காதனை மடியில் உட்கார வைத்துக் கொண்டார்.

"அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த தேடிக் கிடைக்கப் பெற்ற எனதா ருயிர் மாமா அக்கா சொந்த பந்தங்கள் அனைவருக்கும் ஆயிரங்கோடி நமஸ்கா ரங்களுடன் மச்சான் முட்டிக்காலன் எழுதிக் கொண்டது. பேர்கூடியம்மா புண்ணியத்தில் நான் குந்தியம்மா எல்லோரும் சேமம். அதுபோல உங்கள் சேமலாபங்களை அறிய பேரவாவாக இருக்கிறோம். நிற்க.

மேற்கொண்டு அறிவது. இங்க மெட்ராஸ் வெள்ளத்தில் மிதக்குது. வேலை ஒரு நாளைக்கு கிடைப்பது கஉந்த ரமாய் இருந்தாலும், குந்தகூட இடம் இல்லாம கஷ்டமாத்தான் இருக்குது. அது கெடக்கட்டும்: அங்கு ஊர்நாட்டு பக்கம் மழை கிழை பேய்ஞ்சுதா. ஓடைவெளி பக்கமெல்லாம் தண்ணி நிக்குதா. பெரிய ஏரி ரொம்பிடிச்சா. குட்டையமூட்டு கழனி ஏலத்துல போவுதுன்னும், செம்பிளி ஆட்டுக்குட்டி ரெண்டையும் சேங்கணு கன்று குட்டிவளையும் வெலகட்டிட்டு அந்த பூமிய வாங்கிப் போடலாமுன்னும் கடுதாசி போட்டிருந்தீங்க. நம்ம கைல கால்ல நல்ல ரத்தம் ஓடச் சொல்லவே காணிய பூமிய வாங்கிப் போட்டாத்தான் பிற்காலத்துல பெத்த புள்ளைவ கூட பயந் துக்குனு தண்ணி ஊத்தும், இருந்தாலும் உசு ருக்கும் உடலுக்கும்ன்னு இருக்கிற குட்டி வள வித்துப்புட்டா மாவாளியம்மா புண்யத்துல பூமி குளிர மழைபேஞ்சிச் சின்னா ஒரு நாத்தங்கால் ஒட்டனும் மின்னா கூட யாரு வூட்லபோய் எரவமாட் டுக்கு நிக்க முடியும். அதனால மாட்டை கன்னை விக்கப் போறேன்னு ஊர்ல இருக் கிறவனுவளாண்ட வாயவுட்டுடவேணாம்.

> "அந்த சூனியக்கார ஊரில் வந்து நான் ஏர் அடிக்கவோ அண்டை வெட்டவோ போவது கிடையாது. குருவி சேர்ப்பது போல சேர்த்து வாங்கின மண் என்று பழைய பல்லவியையே பாட வேண்டாம். விற்று ஒழித்துவிட்டு பணத்தோடு வரவும்"

நான் இங்க மேஸ்திரியாண்ட பத்து பைசா வட்டிக்கி 8,000 ரூபா கடன் கேட்டு இருக்கிறேன். தங்கமான மனுசன். கண் டிப்பா கொடுப்பாரு. கொடுத்ததும் நம்ம சுப்பராயன், திருப்புரம் கல்யாணத்துக்கு ஊருக்கு வருகிறான். அவன்கிட்ட கொடுத் தனுப்புரேன். எப்படியாவது பேசி அந்த பூமியை வாங்கிப் போடவும். சோளக் கொல்லை கழனிக்குப் பக்கத்தில் இருப்ப தால பயிறு பச்சை வக்கிறதுக்கு தோதாக இருக்கும். அதுமட்டும் இல்ல மாமா. "என் அக்காளப்பாத்து துன்ன மண்ணு குடுப்பா னாடின்னு கேட்டாளே அழவம்மா அவ ளுக்கு எதுர என் கட்டையில் காத்து இருக் கும்போதே, ஒரு கால்காணி வாங்கி எங்கக்கா பேர்ல எழுதிப்புடனும். இல்லைன்னா நான் செத்தாக்கூட இந்த நெஞ்சு கூண்டு சுடுகாட்ல வேவாது."

வாழப்பட்டு கழனி சேடை கூட்டும் போது லட்டர் போடவும். எங்கடா கடன கச்ச வாங்குறதுன்னு பயிறு பச்சை வக்காத மட்டும் உட்டுடப் போறே, ஆறுமாசந்தான் கடனாவது வாங்கி மண்ணை கொத்தி கொழப்பி வரவாவது நட்டுப் போடவும். பூமாதேவி குடுக்கறத குடுப்பா. நாமதான் வஞ்சனை பண்ணாம பாடுபடணும். பட்டம் தவறி மட்டும் பயிரிடவேணாம். எந்தலையை அடமானம் வச்சாவது கடனை நான் அடைக்கிறேன்.

களவாயாவூட்ல எருவுக்குச் சொல்லி வைக்கவும். பசுமாட்டுச் சாணியும் வெள் ளாட்டு பீக்கையும் போட்டா சும்மா பயிறு கரகரன்னு கரும்பு கணக்கா பூமியை பிச்சிக் கினுவரும். தப்பித் தவறி இந்த மருந்த மாசானத்தை போட்டு மண்ணை சாவடிக்க வேணாம். எருவு பத்தலைன்னா பூவரசந் தழை ரெண்டு சுமை கொந்தி போடவும்.

ஊருக்கு வரும்போது அவசரத்தில் சொல்ல மறந்துட்டேன். வூட்டு செவுத்தும் பின்னால பூசிணி, வெள்ளேரி வெதைய மொழுவி வச்சிட்டு வந்தேன். அதை எடுத்து தென்னந்தோப்பில் சூரமூட்டுல ஒரு துண்டைக் கேட்டு நட்டுப் போடவும். இல்லைன்னா புள்ளைங்க சித்திரை வையாசி கருப்பில் அண்டை வூட்டுக்கு போய் நிக்கும்.

பில்லைமாடு சினையா இருந்திச்சே கன்னு போட்டுவிட்டதா. வண்டிமாட்டுக்கு கண்ணுல சாட்டிகோல் பட்டு கலங்கிப் போச்சே அதுக்கு அன்னக்கிளி அக்கா விடம் ஓட்டிம்போய் பச்சிலை மருந்து விட்டு வரவும். முக்கியமா குட்டையம் மூட்டு கழனிய கைமாற விட்டுடப்போற கவனம், கவனம். பொங்கலுக்கு ஊருக்கு வரும்போது பத்திரம் முடிச்சிக்கிடலாம். இவ்வளவுதான் சங்கதி. மேற்கொண்டு நேரில். வணக்கம்.

**உங்கள் அன்புள்ள மச்சான்**
**முட்டிக்காலன்.**

◆

www.padippakam.com




# ஒரு இரயில் நிலையத்தின் கதை

**இக்கதையில் வரும் இரயில்நிலையம் போலவே நம் நாட்டிலும் ஆயிரக்கணக்கான இரயில் நிலையங்கள் உள்ளன. தனியார் மயத்தைத் தீவிரமாக அமலாக்கும் அரசு உள்ளது. சேவைத்தரம் உயர தனியார்மயமே தீர்வு என்று பேசும் மேட்டுக்குடியினரும் உள்ளார்கள். அவர்களுக்கு ஐரோப்பாவிலிருந்து பல ஆடம்பரப் பொருட்கள் தேவைப்படுகின்றன. நமக்கு இந்தக் கதை தேவைப் படுகிறது. ஃபிரண்ட்லைன் இதழில் (சூலை – 7) ஜெயாதி கோஷ் எழுதிய கட்டுரைக்குள் இடம் பெற்ற கதை இது. பொருள் சிதை யாமல், சில திருத்தங்களுடன் மொழியாக்கம் செய்து தருகிறோம்.**

முன்னொரு காலத்தில் ஹாலந்து நாட்டில் ஒரு சிற்றூர் இருந்தது. அந்தச் சிற்றூரில் ஒரு சின்ன ரயில் நிலையமும் இருந்தது. முன்னொரு காலத்தில் என்று சொன்னதால் ரொம்பப் பழைய காலத்தில் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

ஹாலந்து நாட்டில் பொதுவாகவே ரயில் வசதி அதிகம். அதற்காக சின்னச் சின்ன ரயில் நிலையங்களிலெல்லாம் கூட்டம் அலைமோதும் போலிருக்கிறது என்று கற்பனை செய்து கொள்ளாதீர்கள். பெரிய நகரங்களில்தான் பெரிய கூட்டம். சின்ன ரயில் நிலையத்தில் அப்படி ஒன்றும் பெரிய அளவு பயணிகள் கூட்டம் இருக்காது.

ஆகையினால் இப்படிப்பட்ட சின்ன ரயில் நிலையங்களில் ஸ்டேசன் மாஸ்டர் ஒருவர் மட்டும்தான் இருப்பார். அவர்தான் டிக்கெட் கொடுக்க வேண்டும்; பயணிகள் ஏதாவது விவரம் கேட்டால் அவர்தான் பதில் சொல்ல வேண்டும்; ஸ்டேசன் மாஸ்டர் வேலையும் பார்த்துக் கொள்ள வேண்டும். எல்லாம் நம்மூர் போலத்தான்.

சரி, நாம் கதைக்கு வருவோம். அந்த சிற்றூரின் ஸ்டேசன் மாஸ்டருக்கு வேலை அவ்வளவு கடுமையாக இல்லாததால், ரயிலுக்குக் காத்திருக்கும் பயணிகளுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பார். யாராவது ஏதாவது விவரம் கேட்டால் பொறுமையாக விளக்கிச் சொல்லுவார்.

எல்லோருக்கும் அவரை ரொம்பப் பிடித்திருந்தது. பார்த்தவுடனே சிரித்த முகத்துடன் வணக்கம் சொல்லும் மனிதனை யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்? பயணிகளைப் பொறுத்தவரை அவர் ரயில் நிலையத்திலுள்ள ஒரு நண்பர். ஸ்டேசன் மாஸ்டர் என்ப தெல்லாம் அடுத்தபடிதான்.

இப்படியிருக்கையில் அந்த நாட்டின் ரயில்வே துறைக்கு ஒரு சோதனை




படிப்பகம்

www.padippakam.com

வந்தது. சோதனை ஹாலந்துக்கு மட்டுமல்ல, ஐரோப்பாவுக்கே வந்த சோதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

"பொதுத் துறைகளில் ஆட்குறைப்பு செய்ய வேண்டும்; அநாவசியமான தொழிலாளிகளைக் கழித்துக் கட்டிவிட்டு அவர்களுக்குப் பதிலாக கம்ப்யூட்டர்களையும் எந்திரங்களையும் புகுத்தலாம்; இதனால் சேவையின் தரம் உயரும், லாபமும் அதிகரிக்கும்" - என்ற கொள்கை ஐரோப்பா முழுவதும் அமலுக்கு வந்தது.

பாவம் நம்முடைய இனிய நண்பரான ஸ்டேசன் மாஸ்டர் இனித் தேவையில்லாதவர் ஆகிவிட்டார். அவருடைய வேலையைச் செய்ய ஒரு எந்திரம் வந்துவிட்டது. அது டிக்கெட் கொடுக்கும், பாக்கி சில்லறை கொடுக்கும், ரயில் நேரம் பற்றிய தகவல்களையும் கொடுக்கும். அவ்வளவு புத்திசாலித்தனமான எந்திரம்! அதே நேரத்தில் ஸ்டேசன் மாஸ்டருக்குக் கொடுத்த சம்பளத்தை ஒப்பிட்டால் செலவும் மிகக் குறைவு!

இப்போதெல்லாம் நெரிசல் நேரம் தவிர மற்ற நேரங்களில் அந்தச் சின்ன ரயில் நிலையம் வெறிச்சோடிக் கிடக்கிறது. ஸ்டேசன் மாஸ்டர் நீக்கப்பட்ட பிறகு அந்த ரயில் நிலையத்திற்கென்று ஒரு ஆள் கூடக் கிடையாது.

தனியார்துறை, பொதுத்துறை இரண்டிலுமே ஆட்குறைப்பு ஒரு கொள்கையாக அமல்படுத்தப்பட்டதால் எங்கு பார்த்தாலும் வேலை நீக்கம்தான். இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதும் குதிரைக் கொம்பாகி விட்டது.

வேலையில்லாத இளைஞர்கள் தெருவில் கும்பல் கும்பலாக அலைவது இப்போதெல்லாம் சகஜமான காட்சியாகிவிட்டது. ஆள் அரவமே இல்லாத ரயில் நிலையம் இளைஞர்கள் கூடுவதற்கு வசதியான இடமாகிவிட்டது. வீடில்லாதவர்கள் சில பேருக்கும் ரயில் நிலையமே புகலிடமானது.

அதிகம் கூட்டமில்லாத நேரங்களில் ரயில் நிலையத்தில் நிலவிய இந்தச் சூழ்நிலை பயணிகளுக்கு இனம்புரியாத அச்சத்தை ஏற்படுத்தியது. பயணிகளுக்கும் இளைஞர்களுக்குமிடையே அவ்வப்போது சில வாய்த் தகராறுகளும் ஏற்பட்டது.

சட்டம் - ஒழுங்கு நிலைமை சரியில்லை. ரயில் நிலைய நிர்வாகமும் சரியில்லை என்று பயணிகள் புகார் செய்யத் தொடங்கினர். உடனே நிர்வாகம் ரயில் நிலையத்தில் ஆங்காங்கே விளம்பரப் பலகைகளை வைத்தது. "அங்கே உட்காராதே, இங்கே நிற்காதே" என்பது போன்ற உத்தரவுகள் அதில் எழுதப்பட்டிருந்தன.

நல்ல விதமாக எடுத்துச் சொல்வது ஒரு விதம். இப்படி அதிகார தோரணையில் உத்தரவு போட்டு அதைக் கடைப்பிடிக்கச் செய்வதென்றால் அது கொஞ்சம் சிரமம்தான். சும்மாயிருப்பவர்களைக் கூட இந்த மாதிரி அறிவிப்புகள் தூண்டி விடுகின்றன.

பயணிகளுக்கும் இளைஞர்களுக்கும் நடந்து கொண்டிருந்த சின்ன, சின்னத் தகராறுகள் ஒருநாள் விபரீதத்தில் போய் முடிந்தது. ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களை சில இளைஞர்கள் அடித்து நொறுக்க, அந்த நேரம் பார்த்து அங்கே வந்த பயணி ஒருவர் அதைத் தடுக்க, விவகாரம் கொலையில் போய் முடிந்தது. அந்தப் பயணி கொல்லப்பட்டு விட்டார். இந்தக் கொலைக்கு என்ன காரணம் சொல்வது? இந்த மாதிரி சம்பவங்களுக்கெல்லாம் "அர்த்தமில்லாத வன்முறைகள்" என்று விளக்கம் சொல்கிறார்கள்.

"நாட்டில் சட்டம் - ஒழுங்கு ரொம்பவும் கெட்டுப் போய்விட்டது. காவல், கண்காணிப்பு, கெடுபிடியை அதிகப்படுத்தினால்தான் ஒழுங்கை நிலைநாட்ட முடியும்" என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட கருத்து நாடெங்கும் வளர்ந்து வருகிறது என்ற விசயம் அரசுக்கும் தெரியாமலில்லை. கைவசம் சில 'புதிய' திட்டங்களை வைத்திருந்தது அரசாங்கம்.

"ரயில் நிலையத்துக்கு வருவோர் போவோரின் நடவடிக்கைகளையெல்லாம் கண்காணிக்க வேண்டும், ரயில்வே நிர்வாகத்தின் கட்டளைகளை தயவு தாட்சண்யமின்றி அமல்படுத்த வேண்டும்" என்ற உத்தரவுடன் எல்லா ரயில் நிலையங்களிலும் தனியார் போலீஸ் படைகளை அரசாங்கம் நியமிக்கக் கூடும்.

நம் சிற்றூரின் சின்ன ரயில் நிலையத்திற்கு வரப்போகிற போலீஸ்காரரின் பணி ரொம்பக் கடினமானது; இன்னொரு விதத்தில் பார்த்தால் ஆபத்தானதும் கூட. அவருடைய வேலைக்கு உத்திரவாதம் இருக்கப் போவதில்லை. ஏதாவது ஒரு சிறிய தவறு நடந்தால் போதும் - அவரைக் கூலிக்கு அமர்த்தியிருக்கும் தனியார் போலீஸ் நிறுவனம் அடுத்த கணமே அவரைத் தூக்கி எறிந்துவிடும்.

எனவே அவருடைய நடவடிக்கைகள் கொஞ்சம் கடுமையாக இருந்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை; பயணிகளிடம் அவரால் இன்முகத்துடன் நடந்து கொள்ள முடியாது. கொஞ்சம் சிடுசிடுவென்றுதான் இருப்பார்; மேலும் கையில் துப்பாக்கியும் வைத்திருப்பார்.

எப்படியோ, நம்முடைய அழகான சின்ன ரயில் நிலையத்தில் ஆளில்லாக் குறை தீரப் போகிறது; இனி டிக்கெட் கொடுக்கும் எந்திரத்துடன் ஒரு மனிதரையும் நாம் பார்க்கலாம்.

ஆனால் என்ன, நம்முடைய பழைய ஸ்டேசன் மாஸ்டரின் சிரித்த முகம், இனிமையான பேச்சு, அவரைப் பார்த்தவுடனே நமக்குள் தோன்றும் சிறியதொரு மகிழ்ச்சி... இதெல்லாம் இருக்காது.

டிக்கெட் எந்திரம் இருக்கும்; அதன் பக்கத்தில் இன்னொரு எந்திரம் நின்று கொண்டிருக்கும். ◆



படிப்பகம்

www.padippakam.com





## சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்

# முசுலிம்கள் கடத்தல்காரர்களா? ஜிகாத் — மதம் மாற்றும் போரா?

''இராமநாதபுரம் கிழக்கரையில் தொடங்கி பம்பாய் தாவுத் இப்ராஹிம் வரை, கடத்தல் போன்ற சட்ட விரோத தொழில்களில் முசுலீம்கள்தான் அதிகம் ஈடு படுகிறார்கள்.''

- இந்து முன்னணியின் மேடைகளிலும், ஆர்.எஸ்.எஸ்.-இன் சாகாக்களிலும் அடிக்கடி வலியுறுத்தப்படும் ஒரு அவதூறு.

மேலோட்டமாகப் பார்த்தால் 'ஆமாம் உண்மைதானே' என்று தோன்றும். திரைப்பட உலகமும், செய்தி நிறுவனங்களும் முசுலீம்களை கடத்தல்காரர்களாக பல ஆண்டுகளாகச் சித்தரித்ததன் விளைவே மேற்கண்ட கருத்து. விவாதத்திற்கும் அப்பாற்பட்ட உண்மை போல இது உருவெடுத்திருக்கிறது. உண்மையில் கடத்தல் தொழிலுக்கு உகந்த மதம் என்று எதுவும் இல்லை. கடத்தல் தொழிலில் எல்லா மதங்களைச் சேர்ந்தோரும் இருக்கிறார்கள். அவர்களின் மதமே சட்ட விரோதமாக கொள்ளை லாபம் சம்பாதிப்பதுதான்.

பம்பாயின் வரதராஜ முதலியார், அமர் நாயக், அருண் காவ்லி, சிவசேனாவின் குண்டர்படைத் தொழிற்சங்கம், தாவூத் இப்ராகிமிடம் வேலை பார்க்கும் இந்துத் தளபதிகள் போன்ற தாதாக்களெல்லாம் யார்? சென்னையில் ஏழுமலை, சிவா, ரமணி, பாக்சர் வடிவேலு, எர்ணாவூர் நாராயணன், ஆதி ராஜாராம், மதுசூதனன், ஜெயா - சசி கும்பலின் தலைமையில் தமிழகத்தை மொட்டையடித்த வட்டாரத் தளபதிகள் இவர்களெல்லாம் யார்?

சமீபத்தில் அந்நியச் செலவாணி மோசடியில் ஈடுபட்டமைக்காக தினகரனுக்கு 28 கோடி ருபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் 'இந்துக்கள்' என்பதால்தான் கடத்தல், சட்ட விரோத தொழில்களில் கொடிகட்டிப் பறக்கிறார்கள் என்று கூறலாமா?

கடத்தல் மற்றும் அந்நியச் செலாவணி மோசடியைத் தண்டனைக்குரிய கிரிமினல் குற்றமாகக் கருதிய ஃபெரா (FERA) சட்டத்தை ரத்து செய்து, அதை சிவில் குற்றமாக மாற்றி ஃபெமா (FEMA) என்ற புதிய சட்டத்தைப் பிறப்பித்திருப்பதே தற்போதைய பா.ஜ.க. அரசுதான். எனவே கடத்தல் பேர்வழிகளெல்லாம் இந்துக்கள்தான் என்பதற்கு இதையே நிருபணமாக எடுத்துக் கொள்ளலாமா?

ஆனால் ஆர்.எஸ்.எஸ். கூறுகிறது, முசுலீம்கள் மட்டுமே கடத்தல் செய்து, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாகிறார்களாம்.

உண்மையில் கடத்தல் என்றால் என்ன? சுங்கவரி, இறக்குமதித் தீர்வைப் பட்டியலில் உள்ள பொருட்களை சட்ட விரோதமாகக் கடத்தி வந்து விற்று லாபம் சம்பாதிப்பது. ஆனால் இன்றைய உலகமயமாக்கமும், புதிய பொருளாதாரக் கொள்கையும் இத்தகைய மரபுவழிக் கடத்தலைத் தேவையற்றதாக்கி வருகிறது.

தங்கமும், டாலரும் தடையின்றி வர அனுமதிக்கப்படுகின்றன. முக்கியமாக அரசே கடத்தல் தொழிலுக்கு லைசன்ஸ் கொடுத்து வருகிறது. ஓ.ஜி.எல் (Open Government License) என்ற லைசன்ஸ் பெற்று எந்தப் பொருளையும் இறக்குமதி செய்யலாம். தற்போதைய பா.ஜ.க. அரசும், முந்தைய அரசுகளும் செய்வது இத்தகைய கடத்தல்தான்.

பர்மா பஜாரில் லுங்கியும் சென்ட் பாட்டிலும் விற்கும் முசுலீமைக் காட்டி ''பார் முசுலீம்தான் கடத்தல்காரன்'' என்கிறது இந்து முன்னணி. லுங்கி கிடக்கட்டும்; பனியன் ஜட்டி முதல் பல் குத்தும் குச்சி வரை, ஊறுகாய் மட்டை முதல் துடைப்பக்கட்டை வரை சுமார் 750 பொருட்களை வெளிநாடுகளிலிருந்து 'கடத்தலாம்' என்று இப்போது சட்டமே போட்டிருக்கிறது பா.ஜ.க. அரசு. கடத்தல் அனுமதிக்கப்பட்ட 750 சரக்குகளில் ''ஹிந்துக்களின் புனிதமான குங்குமமும்'' அடக்கம். பர்மா பஜார் முசுலீம்களை ஒழிக்கத்தான் பா.ஜ.க. அரசு நாட்டையே பர்மா பஜார் ஆக்கிவிட்டது போலும்!

இதுவன்றி ஏற்றுமதி - இறக்குமதி மோசடி, வருமான வரி ஏய்ப்பு, அந்நியச் செலாவணி மோசடி, கழிவு, தரகு, ஊழல் என்று பல்லாயிரங் கோடிக் கணக்கில் சுருட்டுவது பார்ப்பன - பனியா தரகு முதலளிகள்தான். தன்னுடைய கணக்குப்படி ஒரு ஆண்டில் சுருட்டப்படும் மோசடிப் பணம் குறைந்தது ஒரு லட்சம் கோடியிருக்கும் என்று சி.பி.ஐ.யின் முன்னாள் இயக்குநர் மாதவன் கூறியிருக்கிறார்.

மேலும் இந்தியாவின் சமீபத்திய ஊழல் வழக்குகளான போஃபர்ஸ், சர்க்கரை, நிலக்கரி, தொலைபேசி, ஜெயின் டைரி, ஹவாலா, இந்தியன் வங்கி, பங்குச் சந்தை, ஜெயா - சசி ஊழல் போன்ற அனைத்து வழக்குகளிலும் கோடிகளைக் கொள்ளையடித்தவர்கள் யார்? முஸ்லீம்களை? இல்லை; ஒருவர் கூட இல்லை. மாறாக பார்ப்பன பனியா கும்பல்தான் கொள்ளையடிக்கும் கூட்டமாக இருந்து நாட்டு மக்களின் ரத்தத்தை உறிஞ்சி வருகிறது.

எனவே இத்தகைய மோசடிகளைத் தடுப்பதோ, தடை செய்வதோ இந்து மத வெறியர்களின் நோக்கமல்ல. மாறாக இந்த சட்ட விரோத - சமூக விரோத கும்பல்கள் அனைத்தும் தனக்கு மட்டும் விசுவாசிகளாக இருக்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய விருப்பம். ''கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், குண்டர் படை நடத்துபவர்கள், விபச்சாரத் தொழில் செய்பவர்கள் - அனைவரும் மராத்திய இந்துக்களாக இருப்பதையே விரும்புகிறேன்'' என்று அவர்களின் நோக்கத்தை பால் தாக்கரே பச்சையாக வெளியிடுகிறார். இது இந்து தர்மத்துக்கு விரோதமானதல்ல என்பதையே கீழ்க்கண்ட கீதையின் சுலோகமும் மெய்ப்பிக்கின்றது.

''எவனொருவன் மிக்க கெட்ட குணங்களை உடையவனாக இருந்தாலும்,

**பர்மா பஜாரில் சென்ட் பாட்டில் விற்கும் முசுலீமைக் காட்டி முசுலீம்களெல்லோரும் கடத்தல்காரர்கள் என்கிறது இந்து முன்னணி. ஆனால் 'ஹிந்துக்களின் புனிதமான குங்குமம்', ஊறுகாய் மட்டை, துடைப்பக் கட்டை உட்பட 750 பொருட்களைக் 'கடத்தலாம்' என்று சட்டமே போட்டிருக்கிறது மைய அரசு. பர்மாபஜார் முசுலீம்களை ஒழிக்கத்தான் பா.ஜ.க. அரசு நாட்டையே பர்மாபஜார் ஆக்கி விட்டது போலும்!**



படிப்பகம்

www.padippakam.com

"மற்றொரு தெய்வத்தையன்றி என்னையே வழிபடுவானேயானால் அவன் நல்லவன் என்றே அறிய வேண்டும்."

– கீதை 9:30

●●●

**''ஜிகாத் என்றால் புனிதப் போர். இந்த ஜிகாத் 'தாருல் ஹாப்' நாடுகளின் மீது அங்கு உள்ள முசுலீம்களால் வெளிநாட்டு (தாருல் இஸ்லாம் நாடுகளின்) முசுலீம்களின் உதவியால் நடத்தப்படும். இசுலாத்தை நம்பாதவர்களைக் கொன்று குவித்து, அவர்கள் சொத்துக்களைக் கொள்ளையடித்து, பெண்களை அபகரித்து, கோயில்களைத் தரைமட்டமாக்கி (கொள்ளையில் ஐந்தில் ஒரு பங்கு இசுலாத்திற்கு போக வேண்டும். அபகரிக்கப்பட்ட பெண்கள் உட்பட) அந்த நாட்டை முசுலீம் நாடாக மாற்ற நடத்தப்படும் புனிதப் போருக்குப் பெயர் ஜிகாத் – ஜிகாத்தில் ஈடுபட வேண்டியது ஒவ்வொரு முசுலீமின் கடமை.''**

– மதமாற்றத் தடை சட்டம் ஏன், இந்து முன்னணி வெளியீடு – பக்: 26,27.



அயோத்தியில் பகிரங்கமாக ஆயுதப்பயிற்சி நடத்துகிறது பஜ்ரங் தள் குண்டர்படை – 'புனிதப் போர்' நடத்துவது யார்?

ஒவ்வொரு முசுலீமும் கொலைகாரன், கொள்ளைக்காரன், காமவெறியன் என்று இந்து முன்னணி கூறுகிறது. நீங்கள் சந்திக்கும் முசுலீம்கள் அப்படித்தான் உள்ளனரா? வாசகர்கள் பரிசீலிக்க வேண்டும்.

குர் – ஆன் மற்றும் இசுலாமிய இலக்கியங்களில் ஜகாத், ஜிகாத் என இரண்டு வார்த்தைகள் குறிப்பிடப்படுகின்றன. ஜகாத் என்பதன் பொருள் தன் இதயத்தை தூய்மைப்படுத்திக் கொள்ள முசுலீம் மக்கள் செலுத்தும் வரியாகும். முசுலீம் அல்லாதவரிடமும் இவ்வரி வசூலிக்கப்பட்டது. நாட்டின் நலிவடைந்த பிரிவினருக்கு செலவழிப்பதற்காக இசுலாமிய அரசுகள் இவ்வரியைப் பயன்படுத்தியதாகக் கூறுகின்றன. இந்தியாவின் மொகலாய மன்னர்கள் வசூலித்த ஜசியா வரியும் இத்தகையதே.

அடுத்து, உலகிலுள்ள எல்லா அரசர்களும், அரசுகளும் தாம் வென்ற நாடுகளில் கிடைத்த செல்வத்தை தம் வீரர்களிடையே பங்கிட்டுக் கொண்டன. அந்த வழக்கம் இசுலாமிய மன்னர்களிடையேயும் இருந்தது. அதிலும் ஐந்தில் ஒரு பங்கு அரசின் சமூகச் செலவினங்களுக்காக கொடுக்கப்பட்டது.

'ஜிகாத்' எனப்படும் புனிதப்போர் மெக்காவில் ஒடுக்கு முறைகளுக்கு ஆளாகியிருந்த முசுலீம் மக்களை மீட்பதற்காக மதினாவிலிருந்து நபிகள் தலைமையில் முசுலீம்கள் சென்று நடத்திய தற்காப்புப் போரேயன்றி ஆக்கிரமிப்புச் சண்டையல்ல.

நபிகளுக்குப் பிறகு விரிவடைந்த இசுலாமியப் பேரரசு பல ஆக்கிரமிப்புப் போர்களை நடத்தினாலும் அதற்கு காரணம் மதமோ, 'ஜிகாத்தோ' அல்ல. ஏனைய அரசுகள் தத்தமது அதிகாரத்தையும், செல்வத்தையும் பெருக்குவதற்காக நடத்திய படையெடுப்புக்களைத்தான் இசுலாமிய அரசர்களும் நடத்தினர். மற்றபடி மாற்று மதத்தவர்கள், சிலை வழிபாடு செய்பவர்களைப் பாதுகாத்து, மதிக்கும்படி குர்ஆனில் ஏராளமான வசனங்கள் உள்ளன.

அதன் பின் பல இசுலாமிய நாடுகளில் உள்ள ஆளும் வர்க்கங்கள் தங்களது போர்களுக்கு 'ஜிகாத்' என்ற மதச்சாயம் பூசியே மக்களை அணி திரட்டின. இந்த நூற்றாண்டிலும் இதைப் பார்க்க முடியும். அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்த்த ஈரான், ரசிய ஆதிக்கத்தை எதிர்த்த ஆப்கானிஸ்தானின் முஜாகதீன்கள், ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்த காலனிய நாடுகளின் முசு
லீம்கள் அனைவரும்
தங்களது போரை
'ஜிகாத்' என்றே
அழைத்தனர். மத
விளக்கப்படி ... வ
'ஜிகாத்தா' இல்லையா
என்பது ஒருபுறமி
ருக்க, இந்தப்
போர்களின் சாரம்
வல்லரசு நாடுகளின்
ஆதிக்கத்திற்கு எதி
ரான உரிமைப்போர்
என்பதே முக்கியம்.

இதுவன்றி தாலிபான்
போன்ற கடுங்கோட்
பாட்டுவாதிகளும்
அல்-உம்மா போன்ற
இசுலாமியத் தீவிரவ
திகளும் தங்களது ந
வடிக்கைகளை ஜிகா
என்கின்றனர். ஆனா
இந்த விளக்கத்தை பெரும்பான்மை மு
லீம்களும், மிதவாதிகளும் எதிர்க்கி
றனர். இப்படி 'ஜிகாத்துக்கு' வேறுபட்ட ப
விளக்கங்கள் இருப்பினும், இந்துமதவெ
யர்கள் கூறும் அவதூறு விளக்கம் வ
லாற்று ரீதியாகவே பொய்யென நிருபிக்க
பட்டுள்ளது.

மேலும் இந்துக் கோவில்களுக்கும்
பார்ப்பனர்களுக்கும் இனாம், மானிய
வழங்கியும், வேதம் – கீதை – பாரத
போன்றவற்றை பாரசீகத்தில் மொழி
யர்த்தும், பல மொகலாய மன்னர்க
செய்திருக்கின்றனர். இதனாலே
இவர்கள் யாரும் மதநீக்கம் செய்யப்ப
வில்லை.

இப்படி ஏனைய சமூகங்களுட
உறவு கொண்டு புதியவற்றைத் தெரிந்
கொள்ளும் ஆர்வம் பாரசீக – அராபிய அ
ஞர்களிடம் வியப்பூட்டும் வகையில் இரு
தது. அதனால்தான் மத்திய காலத்தின் அ
வியல், மருத்துவ, கலைத்துறை சாதன
களும், சிகரங்களும் இவ்வறிஞர்களிட
ருந்து தோன்றின.

ஆனால் மதத்தில் இல்லாத வி
கத்தை ஜிகாத்துக்குள் புகுத்தி, மக்களி
மதஉணர்வுகளுடன் விளையாடி அ
களை அடக்கி ஒடுக்கவே அரபு ஷேக்கு
முயல்கின்றனர். அதனாலேயே பல்
இசுலாமிய குழுக்களுக்குப் பொருளு
செய்து 'ஜிகாத்தை' ஆதரிக்கும் புனித
ளாகக் காட்டிக் கொள்கின்ற
இன்னொரு புறம் அமெரிக்காவுட
பொருளாதார உறவுகளை வைத்திருக்
கைக்கூலிகளாகவும் இருக்கின்ற
எனவே இசுலாமிய ஆளும் வர்க்க
ளிடம் இருக்கும் 'ஜிகாத்' இசுலாமிய ம



படிப்பகம்

www.padippakam.com

ளிடமும், மதத்திடமும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

1947 பிரிவினைக்குப் பின் பாகிஸ்தான், பங்களாதேசம், இந்தோனேசியா போன்ற முசுலீம் பெரும்பான்மையினர் நாடுகளில் ஆர்.எஸ்.எஸ். கூறுவது போல மாற்றுமத கோவில் இடிப்பு, மத மாற்றம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்ற 'ஜிகாத் போர்' எதுவும் நடக்கவில்லை. அப்படி நடந்த ஓரிரு கலவரங்களும் பாபர் மசூதியை இந்துமதவெறியர்கள் இடித்ததன் எதிர்விளைவாகத்தான் நடந்தன. முசுலீம்கள் சிறுபான்மையாக உள்ள இந்தியா, இலங்கை போன்ற எந்த ஒரு நாட்டிலும் யாரும் ஜிகாத் நடத்தவில்லை.

சமீபத்தில் வங்காளதேசம் சென்று வந்த காஞ்சி சங்கராச்சாரி அங்கே ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட கோயில்கள் இருப்பதாகவும், தான் சென்றுவந்த ஒரு காளி கோயிலைப் புதுப்பிக்க அரசே ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும் ஜுனியர் விகடனுக்குப் பேட்டி கொடுத்திருக்கிறார். அங்கே இந்துக் கோயில்கள் இடிக்கப்படுவதாகவோ, இந்துக்கள் கொல்லப்படுவதாகவோ இருந்தால் அதை வெளியிடுவதில் சங்கராச்சாரிக்குத் தயக்கமோ தடையோ இருக்க முடியாது.

ஆனால் இந்துமதவெறியர்கள் வாழும் இங்கேதான் பிரிவினைக்கு முன்னும், பின்னும் இன்று வரையிலும் கலவரங்கள், மசூதி இடிப்பு, கொலை, சர்ச் மீது தாக்குதல், கன்னியா ஸ்திரி கற்பழிப்பு போன்றவைகள் நாள் தவறாமல் நடக்கின்றன. இதன் எதிர்விளைவாகவே இசுலாமிய தீவிரவாதம் தோன்றியது. எனவே (இந்துமதவெறியர்கள் கூறுவது போன்ற ஜிகாத்) புனிதப் போரில் முசுலீம்கள் ஈடுபடவில்லை. மாறாக பார்ப்பன - மேல் சாதியினரும், அவர்களின் பிரதிநிதிகளான இந்துமதவெறியருமே ஈடுபட்டுள்ளனர்.

சிறுபான்மையினருக்கு எதிராக மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட சாதியினர் அனைவரின் மீதும் அன்று முதல் இன்று வரை இந்த தருமயுத்தம் தொடர்கிறது. ஜிகாத் என்ற சொல்லுக்கு வேண்டுமானால் பலர் பலவித விளக்கங்கள் தரமுடியும். ஆனால் பார்ப்பனியத்தின் இந்த தர்ம யுத்தத்திற்கு வேறு விளக்கமே கிடையாது. பார்ப்பன இலக்கியங்களும், நேற்றைய - இன்றைய வரலாறும் அதன் சாட்சியமாக இருக்கிறது.

சாமி கும்பிடாவிட்டாலும், விரதமிருக்காவிட்டாலும் உயர்சாதி இந்துக்கள் அந்த தருமயுத்தக் கடமையிலிருந்து தவறுவதில்லை. இப்படி அடுத்தவனைத் துன்புறுத்துவதற்கும், இழிவு படுத்துவதற்கும் அவர்கள் குற்றஉணர்வு ஏதும் அடைவதில்லை. "குல தர்மத்தை நிலைநாட்டக் கொலை செய்ய வேண்டியிருந்தாலும் அதற்காக வருந்தாதே" என்கிறது கீதை. அதனால்தான் சாதி ஆதிக்கம் என்பது இந்துக்களின் மதஉணர்வு என்கிறார் அம்பேத்கார்.

எனவே ஜிகாத் என்ற பெயரில் முசுலீம் மக்களுக்கெதிராக அவர்கள் கூறும் ஒவ்வொரு குற்றச் சாட்டும் சாதிவெறி கொண்ட இந்துக்களுக்கும், குறிப்பாக பார்ப்பன இந்துமதவெறிக் கும்பலுக்குமே பொருந்தும்.

* * *

**"குடும்பக் கட்டுப்பாடு ஹிந்துக்களுக்கு மட்டும் அமல்படுத்தப்படுகிறது. முசுலீம்கள் நான்கு மனைவிகளைக் கட்டிக் கொண்டு வதவதவென்று குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் இந்துக்கள் சிறுபான்மையினராகி இந்தியா ஒரு இசுலாமிய நாடாக மாறும் அபாயம் இருக்கிறது. எனவே குடும்பக் கட்டுப்பாட்டில் ஹிந்துக்களை மட்டுமின்றி மற்ற மதத்தினரையும் முழுமையாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்."**

- இந்து முன்னணி மேடைப் பேச்சு.

**ஒவ்வொரு முசுலீம் ஆணும் தலா நான்கு மனைவிகளை மணம் செய்ய வேண்டுமெனில் முசுலீம் ஆண் - பெண் விகிதம் 1:4 என்று இருக்க வேண்டும். ஆனால் இருபாலரின் விகிதம் சமமாகத்தான் உள்ளது என்பதிலிருந்தே, இது அவதூறு என்று மரமண்டைகள் கூடப் புரிந்து கொள்ள முடியும். மேலும் பலதார மண விகிதம் இந்துக்கள் மத்தியில்தான் அதிகம் என்கிறது மைய அரசின் ஆய்வு.**

குடும்பக் கட்டுப்பாடு என்பது சட்டப்படி யாருக்கும் கட்டாயமான ஒன்றல்ல. இந்துக்கள் மட்டும் கட்டாய கருத்தடை செய்யுமாறு எந்தச் சட்டமும் கூறவில்லை. இது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. அறுவை சிகிச்சை செய்து கொண்டோ, செய்யாமலேயோ அளவாய்ப் பெற்றுக் கொள்வோரும் உண்டு.

முசுலீம் ஆண் ஒவ்வொருவரும் தலா நான்கு மனைவிகள் மணம் செய்ய வேண்டுமெனில் முசுலீம் ஆண், பெண் விகிதம் 1:4 என இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருபால் விகிதம் சமமாகவே உள்ளது. மேலும் 1975-ல் மைய அரசினால் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வின்படி பலதார மண விகிதம் முசுலீம்களை விட இந்துக்களிடம்தான் அதிகம் உள்ளது. 1981 மக்கள் தொகை கணக்கின்படி இந்துக்களின் சதவீதம் 82.35, முசுலீம்களின் சதவீதம் 11.73 என உள்ளது. இதன்படி முசுலீம் மக்கள் என்றுமே பெரும்பான்மையாக முடியாது.

அடுத்து குடும்பக் கட்டுப்பாடு எனும் கருத்து கல்வியறிவு, பண்பாட்டு வளர்ச்சி, அதிகரித்து வரும் வாழ்க்கைச் சிக்கல்கள் போன்றவற்றினால் நடைமுறைக்கு வருகிறது. கிராமங்கள், நகரங்களில் வாழும் ஏழைகள்தான் மதவேறுபாடின்றி பிள்ளைகள் அதிகம் பெற்றுக் கொள்கின்றனர். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் தமிழ்நாடு, கேரளா போன்ற தென்னிந்திய மாநிலங்கள் முதலிடத்தில் இருப்பதற்கும், வடஇந்திய மாநிலங்கள் பின்தங்கி இருப்பதற்கும் இதுதான் காரணம்.

இந்து முன்னணியின் கூற்றுப்படி முசுலீம்கள் பிள்ளை பெற்றுக் கொள்வதே ஒரு சதித்திட்டத்திற்காகத் தான் என்றால், இந்த சதியின் விளைவாகப் பிறக்கும் பிள்ளைகளுக்குச் சோறு போடுவது யார்? ஒரு பிள்ளைக்கு 1000 தினார் என்று அராபிய ஷேக்குகள் மணியார்டர் அனுப்புகிறார்களா என்ன? ஒருவேளை அப்படிப்பட்ட வாய்ப்பு மட்டும் இருந்தால், அந்நியச் செலாவணிக்காக அம்மணமாக நிற்கவும் தயாராக இருக்கும் பா.ஜ.க. அரசு, "உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று முசுலீம்களுக்கு உத்திரவிடவும் வாய்ப்பிருக்கிறது.

அதிருக்கட்டும். இரண்டு மட்டும் பெற்றுக் கொண்டால், உணவு, வீடு, வேலை போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவோம் என இந்நாட்டின் அரசோ, ஆளும் வர்க்கங்களோ, இந்துமத வெறியர்களோ பொறுப்பேற்கத் தயாரா? அதைத் தர முடியாதவர்கள் இரண்டுக்கும் மேல் பெறாதே என்று யாரிடமும் - இந்துக்கள் உட்படத்தான் - கூற அருகதை இல்லை.

- தொடரும்.



படிப்பகம்

www.padippakam.com

# பணந்தின்னி வவ்வால்கள்

## துரை. சண்முகம்

"நம்ப பரம்பரையிலேயே யாரும் கோர்ட்டு, கேசுன்னு கால் வச்சது கெடையாது. எப்படி பண்ணிட்டான் பாத்தியா?" மாணிக்கம் சொல்லி சொல்லி ஆத்துப் போனார்.

"என்ன இருந்தாலும் உங்க தம்பி தானே வாசாக்கு வுடாதீங்கண்ணே. என்னா பெரிய வக்கீலு நோட்டீசு? அம்பது ரூபா செலவு பண்ணா நாம கூட ஒண்ணு வுடலாம். நாம் பார்க்கப் போற வக்கீலு பூண்டி வாண்டையா ருக்கே ஆஜரானவருன்னு மாரியப்பன் சொன்னான். பாத்துக்கலாம் கவலைப்பாட தீங்க. இதோ இதான் போர்டை பாருங்க."

ஒரு காட்போர்டு அட்டையால் அறை யாக தடுக்கப்பட்டிருந்த அந்த இடத்தை நெருங்கியவுடன் மாணிக்கமும், சுப்பை யனும் கண் ஜாடையால் தயக்கத்தை வெளிக்காட்டியபடி சற்றுநேரம் கதவுக்குப் பக்கம் நின்றுபடி "ஏங்க.. ஏங்க" என்று இறைஞ்சம் குரலில் வேண்டுதல் போல் குரல் எழுப்பினர். பதில் வராததால் கதவைத் திறக்கப் போன சுப்பையனை ஒரு கணம் வேண்டாம் என்று தடுத்த மாணிக்கம், "சரி... சரி... மெதுவா தட்டு" என்று ஆவலோடு கதவுக்குப் பக்கம் நின்று கொண்டார்.

அய்ந்து நிமிடம் கழித்து கையில் பேப்பர் கட்டுக்களை திட்டமாக வைத்துக் கொண்டு வெளியே வந்தவர். "யாரு? என்ன வேண்டும்?" என்று வேகமாகக் கேட்க,. ஒரு நிமிடம் வாய் குளறினார் மாணிக்கம்.

"என் தம்பி ஒருத்தன். ச்சீ... ஐயாவ ஒரு கேஸ் விசயமாக பாக்க வந்தேங்க" என்று முடிப்பதற்குள்ளாகவே, "ஓ கேஸ் விச யமா? சார் கோர்ட்ல இருக்காரு, இப்ப வந்துடுவாரு, இருந்து பாத்துட்டுப் போங்க. நீங்க பாட்டுக்கும் போயிடாதீங்க அப்புறம் அவர புடிக்க முடியாது. என்னா?" அழுத்தமாகக் கேட்க "சரிங்க" என்று வேகமாகத் தலையாட்டினார்கள் மாணிக்கமும், சுப்பையனும்.

அவர் போன வழியையே பார்த்து முடித்த மாணிக்கம் "டாப்பு டூப்ப பாத்தா இவர்தான் வக்கீலுன்னு நெனச்சேன்."

"இவுரு வக்கீலு குமாஸ்தாவா இருக்கும். பெரிய வக்கீலு கூட இருக்குற வங்க அப்படித்தான் இருப்பாங்க, இவுங்க ளுக்குத்தாண்ணே முழு விவரமே தெரியும். இவரத்தான் நம்ப நைஸ் பண்ணி வச்சுக்கணும்."

"வர்றாரு பாரு... வர்றாரு பாரு" மாணிக்கம் கையை இடித்துவிட சுப்பை யனும் வெடுக்கென்று எழுந்து குமாஸ்தா வுக்கு மரியாதை செய்தான். வேலைச் சுமையில் மூழ்கியவர் போல குமாஸ்தா நேராகப் போக, "அய்யா வந்துடுவாங் களா?" என்று மாணிக்கம் பயந்து பயந்து கேட்டார். "ஹூம் வருவாரு" என்று அள வெடுத்துப் பேசிய குமாஸ்தாவிடம் மேற் கொண்டு பேச மாணிக்கத்திற்கு தயக்கமாக இருந்தது. குமாஸ்தாவின் பார்வையில் படும்படி சுப்பையனும் சிரித்து வைத்தார்.

"இப்படி வாங்க" குமாஸ்தாவின் அழைப்பு கணீரென்று வர காத்துக் கொண்டிருந்த மாணிக்கம் கக்கத்தில் வைத்திருந்த மஞ்சள் துணிப் பையை கையில் எடுத்துக் கொண்டு உள்ளே போனார். மனப்பாடம் செய்ததை ஒப்பு விப்பது போல மாணிக்கம் மஞ்சள் பையின் முடிச்சுகளோடு மனதில் உள்ள தையும் அவிழ்த்தார்.

"விவரம் என்னாண்ணா? எனக்கு ஒரே தம்பிங்க. நான்தான் அவன படிக்க வச்சி, தச்சமயம் கல்யாணமும் பண்ணி வச்சேன். பொண்டாட்டி வந்தோன்ன புத்தி மாறிச்சி, சரி இனிமே சரிபட்டு வராதுண்ணு பாகத் தையும் பிரிச்சு கொடுத்து தனியா வச்சிட்டேன். கொல்ல கடைசியில எருக் குழி மாதிரி ஒரு துண்டு இடம் இருக்கு. எனக்கு மாடு கன்னு இருக்கறதால அத நான் வச்சிருக்கேன். இப்ப அந்தப்பய பொண்டாட்டி பேச்ச கேட்டுட்டு எனக்கு புல்லட் நிறுத்த அந்த இடம் வேணும்னு வந்து கேட்டான். யாரோ தூண்டிவிட்டு கேக்குறான்னு இடத்த தரமாட்டேன்னு தீர்மானமா சொல்லிட்டேன். நாலு எழுத்து படிக்கவச்ச திமிரு இப்ப எனக்கே வக்கீல் நோட்டீசு அனுப்பிட்டான் சார், இதோ இதாங்க நோட்டீசு" பிரசாதம் போல மரியா தையுடன் நீட்டினார் மாணிக்கம்.

குமாஸ்தா நோட்டீசை நோட்டமிட்டுக் கொண்டிருக்கும் போதே மாணிக்கம் ஆத்திரத்தை இறக்கி வைத்தார். "அவன சும்மா விடக்கூடாதுங்க. என் கால்ல விழுந்து அண்ணே மன்னிச்சிடுங்கண்ணு கேக்கும்படி பலமா ஒரு கேஸை திருப்பி போடணும் சார், அய்யாகிட்ட சொல்லி நீங்கதான் நல்லவிதமா முடிச்சுக் கொடுக்கணும்." மாணிக்கம் சுப்பைய னுக்கு ஜாடை காட்டினார்.

"ஆமா சார், அந்த நோட்டீசு வந்தது லேந்து வீட்ல கலகலப்பே போச்சு நீங்கதான் ஒரு நல்ல முடிவுக்கு கொண்டு வரணும்" சுப்பையனும் தன் பங்குக்கு சொன்ன பிறகுதான் மாணிக் கத்திற்கு நிதானம் வந்தது.

"சரி சரி இதானே இதுக்குப் போயி ஏன் அலட்டிக்கிறீங்க, பார்ட்டி நம்பள தேடி வர்ற மாதிரி பண்ணிடுவோம்" குமாஸ்தா பேசிக் கொண்டிருக்கும்போதே வக்கீல் பூட்ஸ் ஒலியை சீராக எழுப்பி நடந்து வர "வணக்கங்க" என்று கோரஸாக மாணிக்கமும், சுப்பையனும் எழுந்து வளைந்தனர்.

"கொஞ்சம் வெளியில இருங்க. கூப்பி டறேன்" என்று அவர்களை வெளியே அனுப்பி வைத்தார் வக்கீல். ஒரு பத்து நிமிடம் கழித்து "ஐயா உங்கள கூப்பிட றாரு" என்று குமாஸ்தா அழைப்புவிட இரு வரும் உள்ளே போனார்கள்.

சடாரென்று டெலிபோனை எடுத்து கழுத்துக்கும் காதுக்கும் செருகிக் கொண்ட வக்கீல் "யோவ் கவலைய வுடுய்யா. அவன வாரண்ட் போட்டு தூக்கிட்டு வரச் சொல்றேன் பாரு. அவன் கெடக்குறான். நீ அமவுன்ட்ட ரெடி பண்ணு, மத்தத நான் பாக்குறேன்" என்று எதிரே நிற்பவர்களை கவனிக்காதது மாதிரி பேசிக் கொண்டே மேசையில் தடிமனான புத்தகத்தை அப்ப டியும் இப்படியும் புரட்டிக் கொண்டே இருந்தார். மாணிக்கமும், சுப்பையனும் ஒருவொருக்கொருவர் கண்களிலேயே வியப்பை வெளிப்படுத்திக் கொண்டனர்.

பேசி முடித்து வக்கீல் லொடக்கென்று போனை வைக்க மாணிக்கத்தின் தொண்டையும் ஒருமுறை அடைத்து திறந் ததுபோல இருந்தது.

"ஆங்.. நீங்தான் அந்த திருப்ப றம்பியம் பார்ட்டியா? எனக்கு இருக்குற வேலையில இந்த கேசே தேவ இல்லேன்னு நெனச்சேன். தெரிஞ்ச ஊர்கா ரரா இருக்கறதால பாக்குறேன், சொன்ன டயத்துக்கு கரெக்ட்டா வந்து பாக்கணும். கிரிமினல்னா கூட ஈஸி. இது சிவில் கேசு ஏன்னா பொறுமை வேணும் புரியுதா? நம்மகிட்டே இந்த வளவளா, கொள கொளால்லாம் புடிக்காது!"

"அதுக்கென்ன ஆவட்டுங்க பணங் காச பத்தி இல்ல, மொதல்ல அவன பணிய வைக்கணும், அதான்யா தேவை."

"சரி இன்னைக்கு வெள்ளிக் கிழ மய்யா, அப்புறம் ரெண்டு நாளு கோர்ட்


படிப்பகம்

www.padippakam.com

லீவு. இன்னைக்கே கேஸ் பைல் பண்ணா நல்லது. என்னா?'' அதிகாரமாய் குரல் இறங்க ''சரிங்கய்யா நீங்க சொல்ற மாதிரியே செய்யலாம்''

''கோர்ட்ல ஸ்டாம்ப் விக்கறவன் வேற டயத்துக்கு போயிருப்பான். குமாஸ்தாவ அனுப்பி தஞ்சாவூர் போயி வாங்கிவரச் செய்யணும். வெளியில இருங்க குமாஸ்தாவ அனுப்புறேன். அவரு சொல்ற மாதிரி செஞ்சிட்டு போங்க என்னா? இது சும்மா ஊசிவெடி கேசு. பாத்துக்கலாம் போங்க?''

''சரிங்க கொஞ்சம் பாத்து. அந்தப்பய என் தயவு தேவைன்னு நினைக்குற மாதிரி பண்ணி வுடுங்கய்யா.''

அதற்கு மேல் வக்கீல் பேசவில்லை, வாயிலிருந்து சிகரெட் சாம்பல் உதிர்த்துக் கொண்டிருந்தது.

''ஏன் சுப்பையா ஸ்டாம்பு கும்பகோணத்துல கெடைக்காது தஞ்சாவூர் போவணுங்குறாரு''

''யாரு கண்டாண்ணே, அது என்னா ஸ்டாம்ப்போ, வக்கீல், டாக்டர் விவகாரமெல்லாம் நமக்கு எங்க புரியுது?''

''ஆமாமாம், முன்ன பின்ன செத்தால் நமக்கு சுடுகாடு தெரியும்'' என்று புலம்பிக் கொண்டார் மாணிக்கம்.

விறுவிறுப்போடு வந்த குமாஸ்தா ''தெரிஞ்ச ஊருங்கறதுனால அய்யா அம்பது ரூவாதான் பீஸ் வாங்கச் சொன்னாரு, பெரிய பெரிய ஆளுங்களுக்கு பாக்குறவரு, ஏதோ உங்களுக்காக ஒத்துக்கிட்டாரு'' என்று பணம் வாங்க பீடிகை போட்டார் குமாஸ்தா.

வெத்தல பாக்கு பொட்டலத்தில நான்காக மடித்து வைத்திருந்த அய்ம்பது ரூபாய் நோட்டை பக்குவமாக விரித்து, சரி பார்த்து குமாஸ்தாவிடம் நீட்டினார் மாணிக்கம்.

''பீஸ் சரி, அய்யா சொன்னபடி தஞ்சாவூர் போயி ஸ்டாம்ப் வாங்கி வரணும். அதுவும் ரெண்டு மணிக்குள்ள வரணும். பஸ் செலவு, ஸ்டாம்ப் எல்லாம் சேர்த்து ஒரு முன்னூறு ரூபா தாங்க. சீக்கிரம்''

குமாஸ்தாவின் பரபரப்பில் மாணிக்கத்தால் எதையும் யோசிக்க முடியவில்லை, இடுப்பிலிருந்த வாரில் பத்திரமாக எடுத்து வைத்திருந்த நூறு ரூபாய் தாள்களில் மூன்றை எடுத்து சுப்பையன் கையால் குடுக்கச் செய்தார் மாணிக்கம்.

பணத்தை எண்ணி வாங்கிய குமாஸ்தா ஏதோ ஆழ்ந்து யோசிப்பது போல முகபாவத்தை மாற்றிக் கொண்டு, ''நீங்க போயிட்டு அடுத்த வியாழன், வெள்ளியில வாங்க, என்னைக்கு கேசுன்னு பாத்துச் சொல்றேன், அப்ப வந்தா போதும்,'' என்று பரபரப்பாகப் பேசிய குமாஸ்தாவிடம் 'சார்' என்று சுப்பையன் வாயெடுக்க ''ஐயா நீங்க கவலைப்படாம போங்க, ஊர்ல வேலவெட்டிய பாருங்க. வர்றப்ப மட்டும் ஒரு ஐநூறு, ஆயிரத்தோட வாங்க. ஏன்னா எப்ப, எவ்வளவு ஆகும்னு சொல்ல முடியாது. கோர்ட்ல எல்லாருக்கும் பணத்த வெட்டி



ஆகணும் புரியுதா?''

''அந்த நம்பிக்கைலதான் அய்யாவ பாக்க வந்தது, என் மானம் மரியாதைய காப்பாத்துனா போதும், அப்ப வர்றேங்க, ஏய் சுப்பையா சொல்லிக்க'' என்று நகரும் போது குமாஸ்தா மறந்தது நினைவுக்கு வந்தவராய் ''ஏங்க அப்படியே ஒரு ரெண்டு குயர் கோடு போடாத பேப்பர் வாங்கி குடுத்துட்டு போங்க என்ன? அய்யா கேட்டாரு.''

மின்னல் வேகத்தில் வேலையை முடித்துவிட்டு விடைபெற்றுக் கொண்டனர்.

''என்னங்க கூப்பிட கூப்பிட மோட்டு வளைய பாத்துட்டு உக்காந்திருக்கீங்க. சதா கோர்ட்டு, கேசு நெனப்புதானா, ரெண்டு மாசமாக அதான் ஈரங்கி ஈரங்கின்னு அலையுறீங்க. நாம என்னா பண்ண முடியும்? நேரம், காலம் வர வேணாமா? அதுக்குன்னு மத்த நெனப்பே இல்லாம இருந்தா எப்படி? உங்க தங்கச்சி பொண்ணு சமைஞ்சிருக்குன்னு கடுதாசி வந்து எத்தன நாளாகுது? போய் மாமன் மொற சீர் செய்யலேன்னாலும், ஒரு தாவணி சட்டையாவது எடுத்து வச்சி பாத்துட்டு வரவேணாம், அவுங்க சும்மா இருந்தாலும் ஊரு கேக்கும்ல.''

''முடிச்சிட்டியா உன் புராணத்த, இப்ப சீர் வக்கறதுதான் பாக்கி. நானே மாசம் ரெண்டு ஆயிடுச்சி இன்னம் கேசு முடிஞ்ச பாடில்லையேன்னு யோசனையில இருக்கேன். சும்மா இல்ல, இதுவரைக்கும் பத்தாயிரம் ஆயிருக்கு. உனக்கு எங்க அத பத்தி கவலை?''

''இதுக்குத்தான் அப்பவே தலையால அடிச்சுகிட்டேன். பேசாம அந்த துண்டு துக்காணிய விட்டுத் தொலைங்கண்ணு.''

''ஏன்? எச்சி பாலு குடிச்ச பயலுக்கே அவளோ திமிறு இருக்குண்ணா, நான் விட்டுத் தருவேனா? அவன் பத்தாயிரம் செலவு பண்றப்ப நான் என்ன வெறும் பயலா? பாத்துடறேன், வீட்டு பேர்ல அய்யா வாங்குன கடன் பத்திரம் எல்லாம் வச்சி அவன் பாகத்தையே அனுபவிக்காதபடிக்கு கேசதிருப்பி விடறேன் பாரு. அதுக்குதான் சுப்பையன வக்கீலு கிட்ட முடிவா ஏதும் பண்ண பத்திரத்தோட அனுப்பியிருக்கேன், முழுக்கதையும் முடிச்சிடறேன் பாரு'' பொரிந்து தள்ளினார் மாணிக்கம்.

அவரது பார்வையை நேருக்குநேர் எதிர்கொள்ள முடியாத செல்லம்மா தயக்கத்துடன் ''ஏங்க'' என்று ஆரம்பித்தவுடனேயே ''என்ன இப்ப அதவுட்டு குடுங்கண்ணு சொல்ல வர்றியா?'' என்றார் வேகமாக. ''இல்ல சாப்பிட வாங்க'' என்று சமாளித்தாள்.

''ஏன் செல்லம்மா அந்த ஒதுங்குன இடம் நத்தம் புறம்போக்குங்கறதுனால கேசு பலமா இல்லையோ? அப்படின்னா



படிப்பகம்

www.padippakam.com

அவனுக்குந்தான் கெடைக்காது, வெறப்பா அவனும் பணத்த இறைச்சி வுட்டுட்ல இருக்கான், புலி வால புடிச்ச கதையா புடிக்கவும் முடியல விடவும் முடியல."

"சாப்பிடறப்ப அந்த கதைய விடுங்க, அதபத்தி அப்புறம் பேசிக்கலாம்" அருகில் அமர்ந்து பரிமாறினாள். மாதக் கணக்கில் அலைச்சலும், பண விரயமும் நினைவுக்கு வந்து வந்து நெஞ்சைப் பிசைய, வயிறு உணவை ஏற்க மறுத்தது.

"அண்ணே... அண்ணே" படபடப்புடன் வந்த சுப்பையனைப் பார்த்து சாப்பாட்டை விட்டு எழுந்து கொண்டார் மாணிக்கம்.

"வக்கீல் என்னா சொன்னாரு சுப்பையா?"

"அது ஏதோ முக்கியமா உங்ககிட்ட பேசி முடிக்கணுமாம், உங்கள உடனே அழைச்சிகிட்டு வரச்சொன்னாரு, சாயங்காலம் அவுரு மெட்ராஸ் போறாராம் அதுக்குள்ள அழைச்சிட்டு வரச் சொன்னாரு."

"இப்பதானே ஈரங்கி முடிஞ்சுது. கோர்ட்டு நேரமும் இல்லையே ஏன் கூப்பிடறாரு?"

"அது என்னமோ உங்க தம்பியும், அவருவக்கீலும் கூட அங்கு வந்து உக்காந்திருக்காங்க. வேற விவரம் சொல்லல. கையோட அழைச்சிட்டு வரத்தான் சொன்னாரு, குமாஸ்தா எதுக்கும் இரண்டாயிரம் எடுத்துட்டு வரச்சொல்லி காதை கடிச்சாரு."

"பணத்த ஆயிரம், ஆயிரமா அழுது என்ன பண்றது. கேசு முடிஞ்சபாடில்ல, பெரிய வக்கீல்னு போனா இப்படி பந்தாடுறானுங்களே, சரி என் தம்பி, இந்த பய வேற ஏன் அங்க வந்துருக்கான், சரி சரி வா வா."

அவசரமாய் கிளம்பியவரை தடுக்க முடியாதபடி செல்லம்மா தவித்துப் போய் "நிதானமா பதட்டப்படமா அழைச்சிட்டு போ சுப்பையா" என்று கவலையாகக் கேட்டுக் கொண்டாள்.

வக்கீல் நோட்டீசு விட்ட தம்பியின் வக்கீலும், தனது வக்கீலும் தம்பியோடு சேர்ந்து உட்கார்ந்திருக்க ஒரு கனம் அதிர்ச்சியானார் மாணிக்கம். முதலில் குமாஸ்தாவைப் பிடித்து ஏதும் விசாரிக்கலாம் என்றால் வக்கீலின் கறுப்புக் கோட்டை கையில் தாங்கியபடி அங்குமிங்கும் பரபரப்பாக வௌவால் போல அலைந்து கொண்டிருக்க மாணிக்கத்திற்குள் எரிச்சல் கூடியது.

"ஏன் சுப்பையா நம்ப வக்கீலையும்

**"அவன சும்மா விடக்கூடாதுங்க. என் கால்ல விழுந்து, அண்ணே மன்னிச்சுடுங்கன்னு கேக்கும்படி பலமா ஒரு கேஸைப் போடணும் சார்" என்றார் மாணிக்கம்.**

சேர்த்து வாங்கிட்ட மாதிரி உட்கார்ந்திருக்கான் பாத்தியா?"

"தொழில்ல இதெல்லாம் சகஜம்ணே, நீங்கதான் அண்ணன் தம்பி எதிர்கட்சி, வக்கீலுக்கென்ன?" சுப்பையா விளக்க "போதுண்டா வுட்டா நீயும் போயி சேர்ந்துடுவ போல இருக்கு" என்று முனகினார்.

மாணிக்கத்தின் முகபாவனையை கவனித்த வக்கீல் "வாங்க நல்ல நேரம் வந்துருக்கு. இன்னைக்கு உங்க பிரச்சினையை எல்லாம் முடிச்சிடலாம். அதான் அவசரமாக அழைச்சிட்டு வரச் சொன்னேன், குமாஸ்தா ஆறு காபி கொண்டு வரச் சொல்லு."

"இப்பதாங்க சாப்பிட்டு வந்தேன், காபியெல்லாம் வேண்டாம், அவசரமா வரச் சொன்னீங்களாம் பயந்து போய் வந்தேன்."

"சொல்றேன். நீங்க ரெண்டு பேருமே எந்த இடத்துக்கு கேசு போட்டு வாதாடறீங்களோ அது உங்களுக்கு அனுபவ பாத்தியமாதான் இருக்கு, பட்டா கெடையாது, இப்ப இந்த விவகாரத்த பெரிசுபடுத்துனா, ரெண்டு பேருக்குமே இடம் இல்லாம போயிடும், அதனால கேச வாபஸ் வாங்கிட்டு சமாதானமா போனா பிற்பாடு நத்தம் புறம்போக்குக்கு பட்டா வர்றப்ப யாராவது எடுத்துக்கலாம். புரியுதுங்களா?" வக்கீல் சொன்னதைக் கேட்டவுடன் மாணிக்கத்திற்கு தூக்கிவாரிப் போட்டது.

"அப்போ நாம இவளோ செலவு பண்ணி என்ன சார் புண்ணியம்?"

"எல்லாம் நேரம் சரியா இல்லேன்னா அப்படித்தான். இப்ப உங்க தம்பிக்கு கூடத்தான் பத்தாயிரம் செலவு ஆயிருக்கு. இதோட நல்ல காலம்னு நெனைங்க. வக்கீலுங்க எங்களபத்தி ஒண்ணுமில்ல. இன்னும்கூட கேச நடத்தலாம். ஏதோ நம்ம ஊருகாரங்களாச்சே வீணா இழுத்துவுட வேணாம்னு பாக்குறேன், அப்புறம் உங்க இஷ்டம்."

மலைத்துப்போய் உட்கார்ந்திருந்த மாணிக்கம், பக்கத்திலேயே வராமல் அங்கும் இங்கும் கேஸ் கட்டுக்களை தூக்கி கொண்டு அலைந்து கொண்டிருந்த குமாஸ்தாவை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இதான் நல்ல ஐடியா. உங்க தம்பிய கூட சரி பண்ணி கூப்புட்டு வந்துருக்கோம், எடத்த எடுத்துக்குறவங்க அடுத்தாளுக்கு ஐயாயிரம் குடுத்துடுங்க, நீங்க மாடு கட்டலாம், அந்த ரெண்டு புளியமரம் உங்க தம்பி எடுத்துக்கட்டும். ரெண்டு பேரும் சமாதானமா போறோம்னு இதை ஒத்துகிட்டு ஒரு கையெழுத்துப் போடுங்க, எதுக்கு வீணா இன்னும் கோர்ட்டு கேசுன்னு அலையுறீங்க, உங்க தம்பியும் செலவு பண்ணி பாத்து வுட்டுட்டாரு, கேஸ் நடத்தியும் பிரயோசனமில்லை என்னா யோசிக்கிறீங்க?" இரண்டு வக்கீலும் சிரித்தபடி வலியுறுத்தினார்கள்.

"இப்ப எதிர்தரப்பு வக்கீல் நாங்க சந்தோசமா இல்ல? அண்ணன் தம்பி நீங்க ஒத்துப் போறதுலே என்னா கௌரவக் குறைச்சல். ம். போடுங்க."

இனிமேல் யோசிப்பதற்கு எதுவுமில்லை என்ற முடிவுக்கு வந்த மாணிக்கம் பெருவிரல் ரேகையை வைத்தார். மை டப்பாவில் விரலை அழுத்தி எடுத்த குமாஸ்தாவிடம் கோபத்தை அடக்கிக் கொண்டு மாணிக்கம் பொருமினார். "ஏன்யா இதெல்லாம் நீயாவது முன்னாடியே சொல்லக்கூடாது? எவ்வளவு பணம் விரயம் தெரியுமா?"

"எனக்கென்ன ஜோஸியமா தெரியும் முன்னாடி சொல்ல. கேசுன்னா இப்படித்தான்" பதிலுக்கு எரிச்சலைக் கொட்டினான் குமாஸ்தா.

"சரி பிரச்சினை நல்லவிதமா முடிஞ்சிது, இந்த வக்கீலுக்கு ரெண்டாயிரம், அந்த வக்கீலுக்கு ரெண்டாயிரம் தரணும், இதே போலீசு கேசுன்னா அவனுங்க பத்து, பதினைந்து ஆயிரம் கேப்பானுங்க. பணத்த குடுத்துட்டு நேரத்தோட பொறப்படுங்க" குமாஸ்தா பணம் வாங்க ஆயத்தமானார்.

"பணமா, எதுக்கு? அதான் கேஸ் நிக்கலையே" மாணிக்கம் அப்பாவியாய்க் கேட்டார்.

"என்னது பணமாவா? போட்ட கேஸ் வாபஸ் வாங்க, உங்க தம்பி வக்கீலை சரி கட்டி கூட்டி வர்ற, இதுக்கெல்லாம் யார் பணம் தர்றது? தரலேன்னா பழையபடி மாசம் மூவாயிரம்னு அலைய வேண்டி வரும். அப்புறம் உங்க விருப்பம்."

ஒரு கொலை வெறிப் பார்வையுடன் மாணிக்கம் பணத்தை எண்ணிக் எடுத்துக்

www.padippakam.com

கொண்டிருந்தார். அவரின் தம்பியிடமும் குமாஸ்தா இதே பல்லவியைப் பாடுவது காதில் விழுந்தது.

●○●

இருட்டிப் போய் மாணிக்கம் ஊருக்குள் நுழைவதற்குள்ளாகவே செய்தி பரவி இருந்தது. வறண்ட தொண்டையை நனைத்துக்கொள்ள டீக்கடை பக்கம் ஒதுங்கியபோது பேச்சு காதில் விழுந்தது.

''வஜ்ரவேலுக்கு பொறந்ததுங்கள பாரு. வழிமொற தெரியாம வாழுதுங்க, ஆயிரம், ரெண்டாயிரம் பொறாத துண்டு இடத்துக்காக ரெண்டு பேரும் ஆளுக்கு பத்தாயிரம் கோர்ட்டு, கேசுன்னு செலவு பண்ணிட்டு வக்கீலுங்ககிட்டேயே சமாதானமா போயிட்டானுவளாம். சுத்த பைத்தியக்காரனுங்களா இருப்பானுங்களோ? ஒரு பைசா செலவு இல்லாம ஊர் மத்தியஸ்தத்துல தீர்த்துக்கக் கூடாது?''

''பாத்தியா சுப்பையா நம்ம கததான் சந்தி சிரிக்குது, வக்கீல்தான் திருடன்னா இந்த குமாஸ்தா பய போண்டா, வடை, சாப்பாடுன்னு என்னமா நம்மள கரைச்சான்யா. அவன்கூட இந்த கேசு நிக்காதுன்னு உண்மைய சொல்லாம கடைசி வரைக்கும் கழுத்தறுத்துட்டான் பாத்தியா'' என்றார் மாணிக்கம்.

''வயித்தெரிச்சலைக் கௌப்பாதீங்க அண்ணே, இவனுக நம்ப இழவெடுக்கறதுக்கு நாமதான் கறுப்பு துணி போட்டுட்டு அலையணும்'' பேசிக் கொண்டே சுப்பையா நகர எதிரே பெட்டியுடன் வந்தான் இராமலிங்கம் மகன் வேலு,

''என்ன மாமா. நல்லா இருக்கீங்களா? மெட்ராஸ் போறேன் வரட்டுங்களா? எதுவும் வாங்கிட்டு வரணுமா?... என்று வாஞ்சையோடு விசாரித்தான்.

''மெட்ராஸ்ல ஒரு நல்ல வக்கீலா பாரு மாப்பிள்ளை'' வேலுவோடு சுப்பையனும் சேர்ந்து குழம்பினர்.

''என்ன மாமா இப்பதான் இங்க கோர்ட், கேசுன்னு எல்லாம் முடிஞ்சுதுன்னு கேள்விப்பட்டேன், திரும்பவும் நல்ல வக்கீலா பாருன்னு சொல்றீங்க.''

அதான் மாப்பிள்ளை. இங்க என் கேச எடுத்தான் பாரு வக்கீலு, குமாஸ்தா ரெண்டு பயலையும் வெட்டிட்டு வரணும்னு இருக்கேன்.''

விளையாட்டாகச் சொன்னாரா விவரமாகச் சொன்னரா என்பதைப் புரிந்து கொள்ள முடியாதபடிக்கு மாணிக்கத்தின் முகம் இறுகிக் கிடந்தது.

◆

# கள்ளத்தோணி

இரவிரவாக தாலாட்டாகிப் போன வெடிச் சத்தத்திலும் அமைதியாக சிறுசுகள் நித்திரை கொள்வதை முழித்து முழித்து பார்த்துக் கொண்டிருந்தனர் நாதனும் ஜோதியும். விட்டு விட்டு ஏக்கப் பெரு மூச்சு வந்தது...

''அரையிருட்டும் தூக்கமற்ற நாளும் நம்ம சனத்துக்குப் பழகிப் போச்சு...''

''ஒழுங்கான சோறு களி இல்ல, உழைப்பில்ல... விடிஞ்சா பிள்ளையளுக்கு என்னத்த குடுத்து பசியாற்றது...

''இதைப் பத்தி நினைக்கும் போதெல்லாம் கண் மரத்துப் போகுது. வேதனையில நெஞ்சு வேகுது...

''இப்படியே பேசிக் கொண்டு அசந்து தூக்கத்தில் ஆழ்ந்தனர்.

விடிய இன்னும் நேரமிருக்கும். திடீரென அக்கம் பக்கமெல்லாம் சனங்களின் பேச்சுக் குரல் நாதனை உசுப்பி எழுப்பியது.

என்ன சத்தமென பார்க்க பரபரப்பாய் வெளிவாசலுக்கு ஓடினான். தெருவில் சிதறிக் கிடந்த துண்டுப் பேப்பர்களை சனங்கள் எடுத்துப் படித்துக் கொண்டிருந்தனர்.

ராணுவத் தாக்குதலுக்கு பதிலடியாக இயக்கத்தினர் பதில் தாக்குதல் நடத்தப் போவதாகவும் சனங்களை வீடுகளை விட்டு அகதி முகாம்களில் தஞ்சமடையச் சொல்லி அறிவிச்சிருக்கினம். இதைப் படிச்ச சற்று நேரத்துக்குள் கூடைப்பையில் கொஞ்சம் உடுப்புகளை அடைஞ்சு கொண்டு, பிள்ளைகளையும் அரைத்தூக்கத்தோடு தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு முகாம்களை நோக்கி சனத்தோடு சனமாகக் கிளம்பினர் ஜோதியும் நாதனும். பள்ளிக் கூட கட்டிடத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் சேர்ந்தது. ஆளுக்கொரு பக்கத்தில் மூட்டை முடிச்சுக்களுடன் அடைக்கலமாயினர்.

பக்கத்தில் சுவரோடு சாய்ந்திருந்த அருளப்பு ''என்ன நாதன்... நாமளும் இங்க ஓடியாறதும், பிரச்சினை கொஞ்சம் குறைஞ்சோண்ண வீட்ட போறதுமா இருக்கிறம். இப்படி காலஞ்கழிஞ்சா நம்மட பிள்ளைகள் படிக்கிற வயசில எந்தப் படிப்பும் இல்லாம பள்ளிக் கூடமும் போகாம கிடக்குதுகள்... இதெல்லாம் பாக்கும்போது... பேசாம இந்தியாவுக்குப் போயிருவமா...''

''கொஞ்ச நாளைக்கு அங்க நிம்மதியா மூச்சு விட்டுட்டு வரலாம். நம்மட சனங்க எவ்வளவு பேர் போயிருக்கினம் தெரியுமா? நாம கடலுக்குப் பக்கத்தில இருக்கிறம். நினைச்சா கெதியா (சீக்கிரம்) போயிரலாம்.''

நாதன் முடிவைக் கூறாமல் ஆழமான யோசனையில் ஆழ்ந்தான். வேனில் பாணும் (ரொட்டி) பால்விடாத வெறுந் தேத்தண்ணியும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

பெண்களை முன்னாடி வரும்படி அரைகுறைத் தமிழில் வக்கிரமாக அழைத்தான் ஒருவன்.

பெண்கள் கூனிக் குறுகி ரொட்டியும் தேநீரும் வாங்கினர்.

அகோரப் பசியில் இருந்தவர்கள் பிள்ளைகளுக்கும் கொடுத்து தாங்களும் உண்ணத் தொடங்கி பாணைப் பிச்சு வாயில் வைக்கும் நேரம் பக்கத்தில் எங்கோ குண்டு வெடிச்சத்தம் காதைப் பிளந்தது.

அவர்களின் இதயத் துடிப்பு ஒரு நிமிடம் நின்றது. பாண் வயிற்றுக்குள் இறங்காமல் வெளியே வந்து விழுந்தது. அத்தனை முகங்களும் வெருண்டு போனது.

''என்னங்க.. சத்தம் வர்ற திக்கப் பாத்தா.. நம்மட பெரியாஸ்பத்திரிக்குக் கிட்ட சண்டை நடக்குது போலேருக்கு...''

''அம்மா... நாம இருக்கிற இடத்திலயும் குண்டு விழுமாம்மா... எனக்கு பயமா இருக்கம்மா..'' - நாதனின் குழந்தைகள் பயத்தில் வெடவெடத்தனர்.

''அழாத தம்பி நீ அழக் கூடாது.. நாமெல்லாம் நல்லா இருக்கோணும் என்று தானே உன்ர மாமா சாப்பிடாம தூங்காம போராடுறார்.''

வைராக்கியத்துடன் ஜோதி கண்களைத் துடைத்து விட்டாள்.

''நம்மட வாழ்க்கை போராடித்தான் வாழணும்னு இருக்கு. இந்தா பாணைச் சாப்பிடு...''

கவலைகள் மறந்து அசதியைப் போக்க



படிப்பகம்

www.padippakam.com

மெதுவாகக் கண்களை மூடினாள்.

திடீரென டிரக் வண்டி வந்து நின்றது... திமுதிமுவென இராணுவம் குதித்து இறங்கியது.

தூங்கிய சனமெல்லாம் மிரள விழித்த படி எழுந்து நின்றது. ஒருவன் ஓடிவந்து இளந்தாரி பொடியன்களாகப் பார்த்து இழுத்து வந்து அதிகாரிமுன் நிறுத்தினான்.

"ஏய்... நீயெல்லாம் கொட்டியாவா? (புலியா) அங்க போய்ட்டு இங்க வந்திருக்கியா..." சிங்களத்தில் கேட்டுக் கொண்டே பூட்ஸ் காலால் வயிற்றில் மிதித்தான்.

"தொரை... நாங்க புலி இல்ல... எங்கட அப்பா அம்மாவோட வந்திருக்கிறம்" என ரத்தம் கக்கியபடியே அவர்கள் கதறினர்.

பார்த்துக் கொண்டு நின்ற அனைவருக்கும் ரத்தம் சூடாகியது.

பெண்களைப் பாத்து ஆபாச சைகைகள் காட்டின அந்த வெறிபிடித்த மிருகங்கள். மேலும் கீழும் வெறிப் பார்வையால் துளைத்தெடுத்தன. மிருக வெறி அடங்கியதும் எக்காளமிட்டபடி நாலைந்து பொடியன்களை அடித்து இழுத்துச் சென்றன.

இந்த வேதனைகளைக் காணப் பொறுக்காமல் தாய் தந்தையர் மூர்ச்சையற்றுப் போயினர்.

நாதன் ஒரு முடிவுக்கு வந்தான்.

"அண்ண... நாம அழுவுறதுல அர்த்தமே இல்ல... அவனுகள் மறுபடியும் வருவானுக. நம்மட பெண்டு பிள்ளைகள கொண்டு போறதுக்கு முதல் நாம இந்தியாவுக்கு ஓடிப் போயிரலாம்."

அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இந்தியக் கரை நோக்கிப் பயணித்தனர்.

●○●

நள்ளிரவில் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த போது, சிங்கள இராணுவ ரோந்துப் படகு தூரத்தில் பேரிரைச்சலுடன் மினுமினுத்தது. தோணிக்காரன் வெலவெலத்துப் போய் நங்கூரத்தை கடலில் இறக்கினான்.

நடுங்கும் குளிர் காற்றும், பசிதாகமும், ரோந்துப் படகும் சேர்ந்து உயிர் பிழைப்பது கனவாய்ப் போகும் நிலையைக் காட்டியது. கிட்ட வந்தானென்றால் அவ்வளவு தான் தோணில உள்ள அத்தனை உசுரையும் காக்கா குருவி போல சுட்டுருவான். மூச்சு விடக் கூட பயந்து கொண்டு இருந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக ரோந்துப் படகு கண்காணா தூரத்தில் மறைந்தது.

கரை வந்து விட்டது.

தாய் மடியில் தவழும் உணர்வுடன் மண்ணை அள்ளி நெற்றிப் பொட்டாய் வைத்தனர்.

தனுஷ்கோடி கடலின் பேரலைகள் வெடி வெடித்து வரவேற்பது போல் இருந்தது.

●○●

நெடு நேரமாகியும் கவனிப்பாரற்று பசி மயக்கத்தால் சுருண்டனர் பெண்களும் சிறியவர்களும்.

## எல்லாம் வரிசையா நில்லு. சோதனை போடணும். "பொம்பிளைங்கள சேலையப் பூரா அவுத்துட்டு உக்காந்து எந்திரிக்கச் சொல்லும்மா" என்று பெண் போலீசை ஏவினர் அதிகாரிகள்.



இதைப் பார்த்த மீனவப் பெண்கள் உணவும் தண்ணீரும் கொடுத்துதவினர்.

சாவகாசமாக அரசு அதிகாரிகள் வந்து தர்... புர்ரென இறங்கினர்.

"யோவ்.. எத்தனை பேருய்யா.. நீங்க எல்லாம் என்ன கள்ளத் தோணியா..."

பஞ்சடைத்தது போன்று இருந்தது அவர்களின் காதுகளும் கண்ணும்.

"ஏன்யா கேக்குறமில்ல. உங்களோட தொல்லை எழவாப் போச்சுய்யா..."

"எல்லாம் வரிசையா நில்லு சோதனை போடணும்."

"அய்யா... சோதன் போட ஏங்கிட்ட கட்டுன துணியவிட்டா வேற ஒண்ணும் இல்லங்கையா..."

— நாதன் தலைகுனிவுடன் கூறினான்.

"அட இப்ப இல்லம்பீங்க.. அப்புறம் எங்க தலைவருங்களுக்கே குண்டு வைப்பீங்க.."

"புலியா இல்லையான்னு நாங்க சொல்லணும். வரிசையா நில்லு."

உடுத்தியிருந்த கடைசித்துணி வரை அவிழ்க்கப்பட்ட போது இளந்தாரி பொடியன்கள் வேதனையுடன் வெட்கத்தை மறைக்க முகம் கவிழ்ந்தனர்.

"பொம்பிளைங்கள சேலையப் பூரா அவுத்துட்டு உக்காந்து எந்திரிக்கச் சொல்லும்மா..." பெண் போலீசை ஏவினர்.

எந்த மானத்தையும் சுய மரியாதையையும் காக்க சொத்து சுகம் சொந்தம் பந்தம் அனைத்தும் உதறி ஓடி வந்தமோ அந்த கற்பனை முகம் சிதறியது. சிங்களக் காடையரின் வெறித்தனம் இங்கு தமிழக அதிகாரி கண்ணில் வெடித்தது.

◆ நிர்மலா

www.padippakam.com

# வர்க்கம்

***இந்தியாவின் தனிச் சிறப்பான பிரச்சினை சாதி. இங்கே சாதிப் போராட்டம் நடந்து முடியாமல் வர்க்கப் போராட்டமே துவங்காது என்று பேசியவர்களும், இன்னும் பேசுபவர்களும் இருக்கிறார்கள். சாதி - வர்க்கம் இவற்றுக்கிடையிலான சிக்கலான உறவையும், வர்க்கப் போராட்டம் மட்டுமே சாதி ஒழிப்புக்கான இறுதித் தீர்வு என்பதையும் இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் இரு வேறு சம்பவங்களும் உணர்த்துகின்றன. இந்து நாளேட்டில் வெவ்வேறு நாட்களில் வெளிவந்த செய்திக் கட்டுரைகளின் அடிப்படையில் இது எழுதப்பட்டது.***

அந்தச் சிறிய ஊர் பீகார் தலைநகர் பாட்னாவிலிருந்து 20 கி.மீ. தொலைவுக்குள் இருக்கிறது. அந்த டீக்கடை ஊரின் பஸ் ஸ்டாண்டிலேயே பிரசித்தமான கடை. கடை கலகலப்பாக இருக்கிறது என்றால் அங்கே கோஷ்பாபு இருக்கிறார் என்று சொல்லிவிடலாம்.

அதோ தீரன் வருகிறான்; அவனை பள்ளி மாணவனாக இருந்த போதிலிருந்தே கோஷ்பாபுவுக்குத் தெரியும். அப்போதிருந்த தீரன் வேறு. இப்போது அவன் அழகான மேல்சட்டையும் கால் சட்டையும் போட்டு, கழுத்தில் மெல்லிய சங்கிலியோடு கம்பீரமாக இருக்கிறான்;

தீரனின் நிழலிலேயே பதுங்கிப் பதுங்கி இன்னொருத்தன் வந்தான். கோஷ்பாபுவுக்கு அவனைத் தெரியவில்லை; தீரனிடம் பேச்சு கொடுத்துக் கொண்டே அடுத்தவனைச் சாடைமாடையாக எடைபோட முயற்சி செய்து கொண்டிருந்தார்.

போன மாசம் வரை தீரனின் அப்பா ஒரு சுரங்கத் தொழிலாளி. சமீபத்தில்தான் அவர் வேலை பார்த்த சுரங்கத்தில் விருப்ப ஓய்வூதியத் திட்டம் கொண்டு வந்தார்கள். கையில் வள்ளிசாக நாலு லகரம் கிடைக்கும் என்றதும் இவரும் தலையை ஆட்டிவிட்டார். தீரனின் குடும்பம் தாழ்த்தப்பட்ட பௌரி சாதி. சந்தன்கியாரி வட்டாரத்திலேயே ரொம்பவும் ஏழைகள் பௌரி சாதியினர்தான். மிக மோசமாகத் தீண்டாமையால் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களும் அவர்கள்தான்.

ஊர் நிலவரம் பற்றி விவாதிக்காவிட்டாலும் அதுபற்றி நாலு விசயம் தெரிந்து கொள்ள டீக்கடைக்கு வந்துவிடுவான் தீரன். சுரங்கத்திலிருந்து வெளியே வந்த அவன் அப்பாவோ இன்னமும் மேல்சாதிக்காரர்களின் ஏவல்களுக்கு அங்கே இங்கே ஓடிக் கொண்டிருந்தார்.

பௌரி சாதிக்காரர்கள் மேல்சாதிக்காரர்களை நம்பித்தான் வாழமுடியும். எந்த ஒரு ஏவல் வேலை, சேவைத் தொழில் என்றாலும் 'கூப்பிடு அந்த நாய்ப் பயல' என்று சத்தம் கேட்கும்.

தீரனின் கூட வந்த ஆள் கோஷ்பாபுவின் அருகே தரையில் குனிந்து பணிவோடு அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டான்; ஓரமாக ஒதுங்கித் தரையில் உட்கார்ந்தான். கோஷ்பாபுவுக்கு இந்த மரியாதைகள் கட்டோடு பிடிப்பதில்லை.

வந்த ஆள் தீரனின் சாதிக்காரனாக இருக்க வேண்டும் என்று அனுமானித்துக் கொண்டார் கோஷ்பாபு. "என்ன விசயம் தீரா?". தீரன் பதில் சொல்வதற்கு முன் அடுத்தவன் பேச ஆரம்பித்தான்: "வாத்தியார் ஐயா, நான் சரியான இக்கட்டுல மாட்டிக்கிட்டேன். எனக்கு என்ன செய்யிறதுன்னே தெரியலே. நீங்கதான் உதவி செய்யணும். எத்தனையோ பேருக்கு நீங்க உதவி செய்யறீங்க. தீரன் கூட சொன்னான், எனக்கும் ஏதாச்சும் வழி சொல்லுங்க..."

நாலு பேர் மத்தியில் இப்படி டீக்கடையில் அந்த ஆள் வெளிப்படையாகக் குளிப்பாட்டுவது கோஷ்பாபுவுக்குக் கூச்சமாக இருந்தது. 'சுருக்கமாச் சொல்லு' என்றார்.

"வாத்தியார் ஐயா, விசயம் இதுதான். நா ரொம்ப நா முந்தி ஒரு லோனு எடுத்துருந்தேன்..."

"எப்போ, எங்கே, எவ்வளவு லோனு எடுத்தே?"

"ஒரு முப்பத்தி அஞ்சு இருக்கும்... அது எம்பத்தி ஆறு, எம்பத்தி ஏழாம் வருச முங்க... அது பேங்க் லோனு..."

அந்த ஆள் முப்பத்தி அஞ்சு என்றது முப்பத்து அஞ்சாயிரம் ரூபாய். கோஷ்பாபு குழம்பிப் போனார். இந்த ஆள் பௌரியாயிருந்தால் அவர்களுக்கு யார் இவ்வளவு பெரிய லோன் கொடுக்கறாங்க? இருந்தாலும் அவனை 'நீ என்ன சாதி?' என்று கேட்க பாபுவின் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. குழப்பத்திடையே கோஷ்பாபு "சொல்லு, மேலே சொல்லு" என்று மட்டும் தலையாட்டிவிட்டுப் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

"வாத்தியார் ஐயா, அவுங்க இப்ப நோட்டீசு அனுப்பறாங்க, ஒன்றரை லட்சம் கட்டணுமாம். வட்டி அது இதுன்னு ஏதோ சொல்றாங்க. ஒண்ணுமே புரிலீங்க..."

வட்டி மட்டுமே வருசத்துக்கு நூத்துக்குப் பதினெட்டு ரூபா. அவன் கடனுக்காக ஒரு பைசா கூட இதுவரை கட்டவில்லை. கோஷ்பாபு பேங்க் மேனேஜரைப் பார்த்துப் பேசினால் பிரச்சனையைத் தீர்த்துவிடலாம் என்றான் அவன்.

> முதலில் லோன் என்றான். இப்போது சொந்த நிலம் இருக்கிறது; வித்து அடைக்கலாம் என்கிறான். இவனுக்கு லட்ச ரூபாய் பெறுமான நிலம் எங்கேயிருந்து வந்தது? "நீ என்ன சாதி" என்று உடைத்துக் கேட்பதற்குப் பதிலாக "உங்க வீடு எங்கே இருக்கிறது" என்று நாசூக்காகக் கேட்டார் கோஷ்பாபு.

படிப்பகம்

www.padippakam.com

**கொலை நடந்தபோது அந்த மாவட்டத்தின் ஆட்சியாளர், போலீசு டி.ஐ.ஜி, போலீசு டிவிசனல் கமிசனர் எல்லோருமே தலித்துக்கள். இத்தனை அதிகாரிகள் தலித்துகளாக இருந்துமா இந்த நிலை? "அவர்களுக்குத் தங்கள் பதவி முக்கியம். மேலிடத்தில் உள்ளவர்களால் பதவிக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்பது முக்கியம். எல்லாம் வர்க்கநலன் தான்" வெறுப்புடன் சொன்னார் சுன்னிலால்.**

"மேனேஜரைப் பார்த்து நான் பேசறேன்னே வச்சுக்கப்பா. வாங்கின கடன அடைக்க வேண்டாமா? அவருதான் சும்மா வுட்டுடுவாரா?" என்றார் கோஷ்பாபு, பொதுவாக.

"ஐயா, வாங்கின கடன அடைக்கணும்னு எனக்குத் தெரியுதுங்க. என்னோட நிலத்தை வித்தாவது பணத்தக் கட்டணுமுங்க... என்னோட சனத்துங் கிட்ட மட்டும் சொல்லிப்புடாதீங்க. எப்படியாவது நிலத்த புடுங்கிகிடலாம்னு பாக்கிறாங்க. காசு பணம் ஒன்னும் குடுக்காம ஒரேடியா பெரிசா சாத்திப்புடுவாங்க, அவ்வளவுதான்..."

முதலில் லோன் என்றான்; இப்போது சொந்த நிலம் இருக்கிறது, வித்து அடைக்கலாம் என்கிறான். பௌரி குடும்பத்தில் லட்ச ரூபா பொறுமான நிலம் எங்கேயிருந்து வந்தது? எங்கே போய்த்தான் முட்டுகிறது பார்ப்போமே என்று எண்ணி 'மேலே சொல்லு' என்றார்.

"அதனால, நிலத்த இந்த தீரனுக்கு வித்துரலாமுன்னு முடிவு பண்ணியிருக்கேன். எஞ் சனத்தக் காட்டிலும் இவன் பரவாயில்லிங்க..." என்று முடித்தான் வந்தவன். கோஷ்பாபு தீரனைப் பார்த்தார். அவன் முகத்தில் பெருமிதம் வெளிச்சமாகத் தெரிந்தது. அவன் அப்பாவுக்கு நியாயமாக வந்திருந்த பணம்; அவன் வாங்கப் போகிறான். வாங்கட்டுமே.

அந்த அடுத்தவன் என்ன சாதி என்ற ஒரு பிரச்சனை தவிர இதில் சிக்கல் என்ன இருக்கிறது என்று கோஷ்பாபுவுக்கு விளங்கவில்லை. சாதாரணமாக எந்தப் பிரச்சனையையும் பொட்டென்று போட்டு உடைக்கும் அவர் கலங்கிப் போய் முழிப்பதும், அமைதி காப்பதும் ஏன் என்று இவர்களின் பேச்சை கவனித்துக் கொண்டிருந்த டீக்கடை முதலாளிக்குப் புரியவில்லை;

நீ என்ன சாதி என்று உடைத்துக் கேட்பதற்குப் பதிலாக "உங்க வீடு எங்கே இருக்குது?" என்று நாசூக்காகக் கேட்டார் கோஷ்பாபு. வந்தவன் சொன்னான். அவன் பூமிஹார் சாதியாம். பெயர் கோபால்.

கோஷ்பாபு டீக்கடை முதலாளியிடம் சூடாக ஒரு டீ போடச் சொன்னார். மழை பேஞ்சவானம் போல அவருக்கு இப்போது எல்லாம் தெளிவாகிவிட்டது. பிரச்சனையின் முடிச்சு இங்கேதான் இருக்கிறதா?

கோபால் மேலே பேசிக் கொண்டிருந்தான்.

"எஞ்சாதி சனம் எப்படி ஏமாத்தலாம்னு பாக்கறாங்க. அவனுகளுக்கு என்னோட நிலத்து மேல ஒரு கண். அதுக்கு சாதிய புடிச்சிகிட்டானுங்க. 'நம்ம சாதி கவுரவம் காத்துல' பறக்குதேடா, பாவி. நம்ம நிலத்த அவனுகளுக்கு விக்கலாமா?"ன்னு மண்ண வாரி தூத்தறாங்க... என்னக் கேட்டா, தீரன் நியாயமான விலையும் குடுப்பான்; இவன் நேர்மையானவன், என் சாதி சனத்தை விட..."

"வாத்தியார் ஐயா, பூமிஹார் தன்னோட நிலத்த அரிசனுக்கு விக்கக் கூடாதா?"

ஏன் விக்கக் கூடாது? என்றார் கோஷ்பாபு. வாய்தான் பேசியதேயொழிய வர்க்கத்தின் மீது விழுந்திருக்கும் இந்தச் சாதிய முடிச்சை எப்படி அவிழ்ப்பது என்ற கவலை அவர் முகத்தில் தெரிந்தது.

●○●

அது பீகார். இது இராஜஸ்தான், பரத்பூர் வட்டாரத்தில் குமேர் கிராமம். கேசர், தலித் பெண். இன்றும் அவள் பைத்தியம் போல நடந்து கொள்கிறாள். "ஐயோ ஐயோ, கண் எதிரிலேயே என் புருசனை நெருப்பு வச்சுக் கொளுத்தறாங்களே, பையனைத் தேடுவனா? புருஷனைக் காப்பாத்துவனா? நான் இன்னும் எதுக்காக உயிர் வாழணும்?" - அவள் புலம்புகிறாள். பார்க்கிறவர்கள் கண்களில் நீர் ததும்புகிறது

1992 ஜூன் மாதம் குமேர் தலித் வளவைச் சுற்றி ஜாட்டுக்கள் 4000 பேர் ஆயுதம் தாங்கி வெறியாட்டம் போட்டார்கள். 17 தலித்துக்கள் கொல்லப் பட்டார்கள். பல லட்சம் மதிப்புள்ள தலித் வீடுகள், உடமைகள் அழிக்கப்பட்டன.

படுகொலைக்குக் காரணம் இதுதான். சினிமாக் கொட்டகையில் டிக்கட் வாங்கி சீட்டில் உட்கார்ந்திருந்த தலித்துக்களைக் கீழே இறங்கி ஜாட்டுக்களுக்கு இடம்விடச் சொன்னார்கள். தலித்துக்கள் நியாயமாகவே மறுத்தார்கள். பறப்பயலுக்கு அவ்வளவு திமிரா என்று உறுமினர் ஜாட்டுக்கள்; நாங்கள் என்றால் அவ்வளவு இளப்பமா என்று தலித் இளைஞர்கள் கொதித்தார்கள். விளைவு-17 பேர் கொலை.

எட்டு ஆண்டுகள். தினமும் வெளியே திரியும் போதெல்லாம் கணவனைக் கொளுத்திய கயவர்கள் கைகளை வீசிக் கொண்டு கண் எதிரே செல்வதைப் பார்க்கிறாள் கேசர். அவர்களை யாரிடம் பிடித்துக் கொடுப்பது? யார் அவர்களைத் தண்டிப்பது?

ஆதிக்கச் சாதிக் குற்றவாளிகள் மீது இன்று வரை குற்றப் பத்திரிகை கூட பதிவு செய்யப்படவில்லை. ஆனால்

**கண்ணாடி அணிந்திருக்கும் சாதுராமின் வயது 70. கண்பார்வை இல்லாத இவர் பேருந்தைக் கொள்ளையடித்ததாக பொய் வழக்கு.**




படிப்பகம்

www.padippakam.com

தலித்துக்கள் மீதோ பல பொய் வழக்குகள். கண் பார்வை தெரியாதவர் - பஸ்ஸைக் கொளுத்தியதாக; சில இளைஞர்கள் ஒரு ஜாட் பெண்ணைத் துண்டுத் துண்டாக வெட்டியதாக. ஜாட் பெண் கொல்லப் பட்டாள் என்பதே ஒரு பொய்.

ஒரு சிலர் சீக்கிய மதத்திற்குக் கூட இந்து மதத்திலிருந்து மாறினார்கள். முன்பெல்லாம் எல்லா தலித்தும் இங்கே மணிக்கட்டில் ஓர் அடையாளமாக கறுப்புத் துண்டு கட்டியிருக்க வேண்டும். இப்போது தலித் இளைஞர்கள் அதைச் செய்ய மறுக்கி றார்கள்.

படுகொலைகள் நடந்தபோது ஓடி வந்து விசாரித்த ஒரு பஸ்லோடு எம்.பி.க்கள் குமேரிலிருந்து திரும்பிய போதே அச்சம்பவத்தை மறந்தும் போய்விட்டார்கள். இதுவரை மத்திய, மாநில அமைச்சர்கள் 30 பேர் வந்து போயிருக்கிறார்கள். இதற்காக நியமிக்கப் பட்ட விசாரணைக் கமிசன் அறிக்கை கூடத் தரவில்லை.

நிர்வாகம் என்ன செய்கிறது? எட்டு ஆண்டுகளாக ஒன்றும் நகரவில்லையே, ஏன்?

''சம்பவம் நடந்தபோது இருந்த அதிகாரிகள் பிரச்சினையை சரியாக மதிப்பிடத் தவறிவிட்டார்கள்'' என்று கூறிக் கழன்று கொள்கிறார் இப்போதைய தலைமைச் செயலர் அருண் குமார்.

அப்போது இருந்த அதிகாரிகள் யார்? அவர்கள் ஏன் சரியாக வழக்கைப் பதிவு செய்யவில்லை? இந்தக் கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில் அதிர்ச்சி தருகிறது.

சம்பவம் நடந்தபோது பொறுப்பிலிருந்த அந்த மாவட்டத்தின் ஆட்சியாளர், போலீசு டி.ஐ.ஜி, போலீசு டிவிசனல் கமிசனர் எல்லோருமே தலித்துக்கள். இத்தனை அதிகாரிகள் தலித்துகளாக இருந்துமா இந்த நிலை?

அன்றைய கலவரத்தில் உயிர் தப்பியவரான ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சுன்னிலால் இந்தக் கேள்விக்கு வெறுப்புடன் பதில் சொல்கிறார். ''அவர்கள் பதவியைக் காப்பாற்றிக் கொண்டார்கள்; அவர்களுக்குத் தங்கள் பதவி முக்கியம்; மேலிடத்தில் உள்ளவர் களால் பதவிக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்பது முக்கியம். எல்லாம் வர்க்க நலன்தான், வேறென்ன?''

இது வேறுவகை முடிச்சு; சாதியின் மீது விழுந்திருக்கும் வர்க்கத்தின் முடிச்சு.

◆ குப்பண்ணன்

# உதடுகள் ஒட்டும் 'நாம்' என்ற பசையால் வெட்டிய கைகளும் ஒட்டிக் கொள்ளுமா?

கடந்த, ஐந்து மாதங்களுக்கு முன்பு வேதாரண்யம் நகரத்தை ஒட்டி தென்பகு தியில் உள்ள அகத்தியன்பள்ளி என்ற கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட பெண் சாந்தி, அப்பகுதியில் ஆதிக்க சாதியில் உள்ள தி.மு.க. பிரமுகர் (ரவுடி) சுப்பையன் என்பவரால் கீழ்க்கண்ட காரணங்களுக்காக வலது கை துண்டிக்கப்பட்டார்.

* பாலியல் உறவுக்காக தரகர் மூலம் பணம் கொடுத்து அழைத்த போது "நான் பணம் தருகிறேன் சுப்பையன் மனைவியை என் கணவரிடம் வரச் சொல்" என்று எதிர்க் கேள்வி கேட்டது.
* சாந்தி குடும்பத்தினரின் குறைந்த பரப்பளவு உப்பளத்தை தனது பெரும் பரப்புடன் இணைத்துக் கொள்ள சுப்பையன் விலை பேசிய போது - சாந்தி அதனைத் தர மறுத்தது.

சமீபத்தில் வேதாரண்யம் வந்த திருமாவளவன் சாந்தியை பொதுக் கூட்ட மேடையில் அமர்த்தி - அதுபற்றி உரையாற்றினார்.

ஆனால், ஜெயாவின் ஊழலை நியாயப்படுத்தியும், பினாமி நிலத்திருடன் மூப்பனாரை நல்லவர் என்றும் எம்.ஜி.ஆர். உண்மையான புரட்சித் தலைவர், கம் யூனிஸ்ட் கட்சிகளைவிட காங்கிரஸ் நல்ல கட்சி என்றும், சகிக்க முடியாத அரசி யல் சந்தர்ப்பவாத கதம்பமாக உரையாற்றினார். இந்த சந்தர்ப்பவாதத் தலைவர் களின் பின்னால் சாந்தியைப் போன்ற பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் அணிதிரள்வதற்கு எதிராக இந்த கவிதை எழுதப்பட்டது.

சமத்துவ புரங்களுக்குக் காவு கொடுக்கவா
சாந்தியின் கை வெட்டப் பட்டது?

உதடுகள் ஒட்டும் 'நாம்' என்ற பசையால்
வெட்டிய கைகளும் ஒட்டிக் கொள்ளுமா?

சமூகம் எழுதிய உப்புக் கவிதைகள்
சாதியின் மழையில் கரைந்து போவதா?

தலையில் பிறந்தவன் வகுத்த நீதிக்கு
காலில் பிறந்தவன் குடிபடைச் சேவையா?

ரத்தம் குடிக்கும் சுப்பு 'ஐயன்'களே!
சூத்திரப் பட்டம் மறந்து போனதா?

இந்த வெள்ளைக்கார ஜனநாயகத்தில்
சாதிக் கட்சிகள் சடுகுடு ஆடும்...

சனாதனிகளின் சட்டப் புத்தகம்
கொலை அரிவாளுக்குப் பாயிரம் பாடும்...

சகோதரி! இந்தியச் சமூகம்
புது வண்ணம் பூசிய பழைய வர்ணம் தான்!
அதையே... மறுபடி எழுதினால் மாற்றம் வராது!

உன்... 'வலது'கை வீழ்ந்ததை வர்ணனையாக்கி
வாக்குப் பெட்டிகள் வாழ்ந்திடக் கூடும்!
'இடது'கையிருக்கு ஏந்திடு ஆயுதம்!
எல்லாத் தளைகளும் இற்று விழுந்திடும்!

● கனலியப்பன், வேதாரண்யம்.


படிப்பகம்

www.padippakam.com



# கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

**ம.**தி.மு.க. பிரமுகரும் முன்னாள் வேட்பாளருமான கலைப்புலி தாணு அவர்களின் தயாரிப்பில் ராஜீவ் மேனன் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் படம் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்'.

படம் தொடங்கி முதல் காட்சியிலேயே இந்திய இராணுவத்தின் ஹெலிகாப்டர் நம்மை நோக்கிச் சீறி வருகிறது. இரண்டாவது காட்சியில் ஈழத்துப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு மிட்டாய் கொடுக்கிறார்கள் இந்திய இராணுவச் சிப்பாய்கள். அடுத்த காட்சியில் மிட்டாய் கொடுத்த ஒரு பாவமுமறியாத சிப்பாய்களை வெடி வைத்துக் கொல்கிறார்கள் புலிகள்.

கண்ணி வெடியில் காலை இழந்த இராணுவ அதிகாரியான மம்முட்டி இந்தியா திரும்புகிறார். கார்கில் போரில் காலொடிந்த சிப்பாய்கள் ''காசைக் கொடுங்கடா'' என்று அரசாங்கத்திடம் கதறிக் கொண்டிருக்கும் நாட்டில் மம்முட்டி மலர்ப் பண்ணை வைக்கிறார்.

திடீரென ஒரு காட்சியில் தண்ணியைப் போட்டுவிட்டு வந்து ''இந்தியாவுக்குத் திரும்பிய எங்களை வரவேற்கக்கூட நாதி இல்லை'' என்று சொல்லிக் கண் கலங்குகிறார். மற்ற கதாபாத்திரங்களெல்லாம் பதில் பேச முடியாமல் வாயடைத்து நிற்கின்றனர்.

தயாரிப்பாளரே புலி என்பதால் அடுத்த காட்சியில் பதில் வரும் வருமென்று காத்திருந்தோம். படம் முழுக்க மசாலா மணக்கிறதேயன்றி வேறொன்றையும் காணோம். தணிக்கையாளர்கள் கண்களில் மசாலாவைத் தூவிவிட்டு நைசாக ஏதாவது ஒரு இடத்தில் பச்சை மிளகாய் மாதிரி இன விடுதலைக் கருத்தை செருகி வைத்திருக்கக் கூடும் என்று காதைத் தீட்டிக் கொண்டு கேட்டோம். அமைதி, அமைதி, மயான அமைதி.

அமைதிப் படைக்கும் கதைக்கும் எந்த வித சம்மந்தமும் கிடையாது. மம்முட்டியின் காலை ஒடிப்பது கதைக்குத் தேவை என்றால் ரோட்டில் வாழைப் பழத் தோலைப் போட்டு வழுக்கி விழ வைத்திருக்கலாம். இராணுவ அதிகாரி வாழைப் பழத்தோல் சறுக்கி விழக்கூடாது என்று சட்டமில்லை. இருந்தாலும், ஐஸ்வர்யா ராயைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர் ஏதேனும் ஒரு கம்பீரமான காரணத்துக்காக நொண்டியாகியிருக்க வேண்டும் என்பதனால் பள்ளிக்கூடம் - மிட்டாய் - கண்ணிவெடிக் காட்சிகள்.

படம் தயாராகும்போதே நடிகர் அஜீத்தின் மார்க்கெட் மதிப்பு ஏறிவிட்டதால் அவருக்காகப் புதிய பாடல் காட்சிகள் சேர்க்கப்பட்டதாம். அதே நேரத்தில் தான் யாழ் போரும் தீவிரமடைந்திருந்தது. அதற்காகவாவது மேற்படி **அமைதிப் பொய்யை** வெட்டியிருக்கலாமே.

தயாரிப்பாளருக்கு இந்தக் காட்சியில் உடன்பாடில்லையெனினும் இயக்குனருடைய உரிமையில் தலையிட முடியாது என்பதால் தயாரிப்பாளர் அமைதி காத்ததாக நக்கீரனில் ஒரு கிசுகிசுச் செய்தி வெளிவந்துள்ளது. ஆகா எப்பேர்ப்பட்ட ஜனநாயக உணர்வு!

அமைதிப் படையின் அட்டூழியங்கள் குறித்து உலகமே அறிந்திருக்கும்போது காந்திதான் கோட்சேயைச் சுட்டார் என்பதைப் போன்ற ஒரு 'உண்மையை' துணிச்சலாக வெளியிடுவதற்கு தயாரிப்பாளர் அனுமதித்திருக்கிறார் என்றால் இப்பேர்ப்பட்ட மனப்பக்குவத்தை அவர் எங்கிருந்து பெற்றார்? காசுக்காகக் கொள்கையை விட்டுவிட்டார் என்று போகிற போக்கில் நாம் முடிவு செய்துவிடக் கூடாது.

அவருடைய கட்சியைப் பாருங்கள்! தமிழ் ஈழத்தைத் தீவிரமாக ஆதரிப்பது ம.தி.மு.க.வின் கொள்கை. தமிழ் ஈழத்தை அதிதீவிரமாக எதிர்ப்பது தேசிய ஜனநாயக முன்னணியின் கொள்கை. இருந்தாலும் ''இயக்குனராக வாஜ்பாயியை நியமித்துவிட்ட பிறகு, அவர் எடுப்பதுதான் படம்; அதில் நாங்கள் குறுக்கிட மாட்டோம்'' என்கிறார் வை.கோ. கோடிக் கணக்கில் வாரியிறைத்து நடத்தும் சொந்தக் கட்சியின் சொந்த மாநாட்டிலேயே சொந்தக் கொள்கையைப் பேசாமல் கட்டுப்பாடாக இருக்கிறார் தலைவர். அரசியலில் தென்படும் இந்த நாகரீகமும் தெளிவும் கலையிலும் என்னமாய் வெளிப்படுகிறது!

''மரணத்தை விடக் கொடுமையானது என்ன தெரியுமா? மறக்கப்படுவது'' என்றொரு முக்கியமான வசனத்தைப் பேசுகிறார் அமைதிப்படை அதிகாரி மம்முட்டி. அதைவிடக் கொடுமையானது கண்முன்னே நடந்த உண்மை திரிக்கப்படுவது!

கண்டு கொண்டேன்... படத்துக்குப் பூசை போட தேங்காய் வாங்கிய நிமிடத்திலிருந்து 'நந்தன்' இதழில் பின் அட்டையில் அதற்கு விளம்பரம் வருகிறது. தமிழ் இயக்குனர்களின் எழுச்சி பற்றி அட்டைப் படக் கட்டுரை வெளியான நந்தனின் பின் அட்டையில் தபு, ஐஸ்வர்யா ராய் போன்ற 'பச்சைத் தமிழச்சிகள்' சிரித்துக் கொண்டிருந்தார்கள். விளம்பரம்னா விளம்பரம் அப்படி ஒரு விளம்பரம்!

அப்படி விளம்பரம் செய்த படத்துக்கு விமரிசனம் ஒரு வரி கூட வரவில்லை. ''புலிக்குப் புலியே துரோகம் செய்யலாமா'' என்று ஒரு வார்த்தை அன்பாகக் கடிந்து கொண்டிருக்கலாம். அமைதிப் படையின் அட்டூழியம் பற்றி நெடுமாறனின் தொடர் கட்டுரை - உள்ளே; ராஜீவ் மேனனின் புளுகுமூட்டைக்கு விளம்பரம் வெளியே.

கேட்டால் ''நாங்கள் புலிகள்தான் - நரித்தோல் போர்த்திய புலிகள்'' என்று தனியாகக் கூப்பிட்டு விளக்கம் சொல்வார்கள். நரித்தோல் போர்த்திய புலிகளா, புலித்தோல் போர்த்திய நரிகளா என்பதை வாசகர்கள் கண்டு கொண்டால் சரி.

◆ தொரட்டி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEW PAPER
FOR INDIA UNDER NO. 42647/87

Reg. No. TN/Chief PMG-303 / 2000

# ஏன்?

உணவு இருக்கிறது
உலகத்துக்கே சோறு போடலாம்
குழந்தைகளோ பட்டினியால் சாகிறார்கள்
ஏன்

நாம் இத்தனைப் பேர் இருக்கிறோம்
ஆதரவற்றவர்களும் இருக்கிறார்கள்
ஏன்

கொல்வதற்குக் குறிபார்க்கும்
ஏவுகணைகள்
அமைதிப் படைகள் என்று
அழைக்கப்படுகின்றனவே
ஏன்

ஒரு பெண்ணிற்கு
சொந்த வீட்டில் கூட
பாதுகாப்பில்லையே
ஏன்

வெறுப்புக்குப் பொருள் அன்பு
போருக்குப் பொருள் அமைதி
இல்லையென்பதன் பொருள் ஆம்
நாமோ
சுதந்திர மனிதர்களாம்!

இதற்கெல்லாம் பதில் சொல்லாமல்
தப்ப முடியாது
காலம் நெருங்குகிறது.

எத்தனைக் கேள்விகள்
எத்தனை முரண்பாடுகள்

இதற்கு விடை தேடுவோர்
உண்மையைத் தேடுவோர்
இருக்கத்தான் செய்கிறார்கள்.


பதில் சொல்லாமல் தப்ப முடியாது
காலம் நெருங்குகிறது.

கண்ணை இறுக்கும் கட்டுகள் அறுத்து
குருடர்கள்
பார்க்கப் போகிறார்கள்.

ஊமைகள்
பேசப் போகிறார்கள்
உண்மையைப் பேசப் போகிறார்கள்

பதில் சொல்லாமல் தப்ப முடியாது
காலம் நெருங்குகிறது.

— டிரேஸி சாப்மன்
அமெரிக்கக் கருப்பினப் பாடகி



படிப்பகம்